சிவபெருமானுல் தடுத்தாட்கொள்ளப் பெற்று வன் றொண்டர் என்னும் நாமம் பெற்றவரும், தென்றமிழ்ப் பயனு யுள்ள திருத்தொண்டத் தொகை பாடியருளியவரும், செங்கல் லிப் பொன்னுக்கியும், குண்டையூரில் நென்மலே பெற்றும், முது குன்றில் ஆற்றிலிட்ட பொன்னைத் திருவாரூரில் குளத்தில் எடுத் தும், பரவையாரிடத்துச் சிவபெருமானைத் தூது போக்கியும், அவிநாசியில் முதலையுண்ட பாலனை யழைத்தும், இன்னேரன்ன பல அற்புதங்களைச் செய்தருளி, வெள்ளையானை மீதேறிச் சேரமான் பெருமாணயனுர் உடன்வரக் கயிலே சென்றவருமாகிய **ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளை** மக்கள் நினைந்து உய்தற் பொருட் டும், கன்னித் தண்டமிழ்ச் சொல்லின் தெய்வத் திறத்தை யுன்னிப் போற்றுதற் பொருட்டும் **திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இஃது **'அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி'** எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய மூலதனம் 3½% வட்டி தரக்கூடிய ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்) பெறுமானமுள்ள பத்து வருஷ டிரஷரி சேவிங்ஸ் டெபாசிட் சர்டிபிகேட்டாக உள்ளது. (3½% Ten Year Treasury Savings Deposit Certificate MS. 000696 for Rs. 5000). திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக் குழுவினரே இந்நிதியைப் பரிபாலனஞ் செய்வர்.

3. இம் மூலதனத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் (அ) கோயம்புத்தூர் ஜில்லா **அவிநாசி** என்னும் திருத்தலத்தில் பின் 4-ம் பாராவில் குறித்த நிபந்தனைகளின்படி **முந்நூல் அணியும் கலியாணம்** நடத் தப் பெற்றவர்க்கு அளிக்க ரூ. 75/- ரூபாய் எழுபத்தைந்தும் (ஆ) இந்த நிதியைப் பரிபாலனஞ் செய்ய ரூ. 10 (ரூபாய் பத்தும்) (இ) பின் 5-ம் பாராவில் குறித்துள்ளவாறு **'சுந்தரமூர்த்தி சுவாமி**

கள் நினைவுத் தமிழ்ப் பரிசு' வழங்க, மேல் அ, ஆ, பிரிவுகளில் குறித்துள்ளவாறு வட்டியிலிருந்து செலவான ரூ. 85 போக, எஞ்சிய தொகையும் பயன்படுத்தப்பெறும்.

**4. முந்நூல் அணியும் கலியாண உதவிபெற நிபந்தனைகள் ஆவன :—**

அ. கோயம்புத்தூர் ஜில்லா அவிநாசி என்னும் தலத்து எல்லைக்குள் முந்நூல் அணியும் கலியாணம் (உபநயனம்) நடத்தப்பெற்ற அந்தணச் சிறுவர் (Hindu-Brahmin) ஒருவருக்கு உதவித் தொகை ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து) அளிக்கப் பெறும்.

ஆ. அவ்வந்தணச் சிறுவர்க்கு முந்நூல் அணியும் கலியாணம் (உபநயனம்) நடந்த நாளில் 15 வயது நிரம்பாதிருத்தல் வேண்டும்.

இ. அந்தப் பிராமணச் சிறுவர் அவிநாசியில் பிறந்தவராயும், அவிநாசியில் வசிப்பவராயும் இருத்தல் வேண்டும்.

ஈ. முந்நூல் அணியும் கலியாணம் நடந்த ஒரு மாசத்திற்குள் (1) அவிநாசிப் பஞ்சாயத்து போர்டு தலைவர் அவர்களிடமிருந்து "அவ்வந்தணச் சிறுவர்க்கு உபநயனம் நடந்த தேதி, அவர் பிறந்த தேதி, அவர் அவிநாசியில் பிறந்தவர், அவிநாசியில் வசிப்பவர், அவர் ஏழை," என்ற விவரங்கள் அடங்கிய ஒரு அத்தாட்சிப் பத்திரமும் (2) அவிநாசி தாலூக்காதாசில்தார் அல்லது இப்பதவிக்குக் குறையாத வேறு அரசியல் அலுவலாளரிடமிருந்து விண்ணப்பதாரர் ஏழை என்றதற்கு ஒரு அத்தாட்சிப் பத்திரமும் பெற்றுத் தஞ்சாவூர் ஜில்லா **நீருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி நிர்வாகக் குழுவினருக்குத்** தபால் மூலம் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

உ. ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 5-ந் தேதி வரை பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப் பெற்று, அந்தந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதிக்குள் உதவி பெறுவதற்குத் தகுதியுடைய ஒருவருக்கு மட்டும் உதவித் தொகை ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து) மணியார்டர் மூலம் அனுப்பப்பெறும். உபநயனம் நடந்தவருக்கே உதவித் தொகை அனுப்பப்பெறும்.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக் குழுவினர் தீர்ப்பே முடிவானது.

ஊ. இவ் வுதவி பெற விண்ணப்பங்கள் வாராத ஆண்டில் இதற்கென ஒதுக்கிய ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்தும்) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்துக்கு ஏழை களுக்கு அன்னமளிக்க அனுப்பப்பெறும்.

**5. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசுக்குரிய நிபந்தனைகளாவன :—**

அ. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் முதல் யாண்டு வகுப்பில் படித்து ஆண்டுத் தேர்வில் முதல் எண் பெற்றுத் தேறிய ஒரு மாணவர்க்கு ஒரு பரிசும், டிடி கல்லூரி வித்துவான் மூன்றும் ஆண்டு வகுப்பில் படித்து ஆண்டுத் தேர் வில் முதல் எண் பெற்றுத் தேறிய ஒரு மாணவர்க்கு ஒரு பரிசும் ஆக இரண்டு பரிசுகள் அளிக்கப்பெறும். பரிசுத் தொகை அந்தந்த ஆண்டு வட்டி வரவுக்கு ஏற்றவாறு இருக்கும். (மேல் 3-இ-பார்க்கவும்) ஒவ்வொரு பரிசின் உத்தேசத் தொகை ரூ. 30 (ரூபாய் முப்பது). அந்தந்த ஆண்டு வட்டி வருமானத்துக்கு ஏற்றவாறு பரிசுத் தொகையைக் குறைக்கவும், கூட்டவும் கூடும்.

ஆ. இப் பரிசுகள் ஆண், பெண், சாதி, மதப் பகுப்பு வேறுபாடின்றி அளிக்கப்பெறும்.

இ. இப் பரிசுக்குரியவர்கள் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த பெரியபுராணத்தில் வெள்ளானைச் சருக்கம் 'மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய்' என்று தொடங்கும் திருப்பாடல் முதற்கொண்டு "என்று மின்பம் பெருகும் இயல்பினால்" என்ற திருப்பாடல் உட்பட உள்ள 53 பாடல்களையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய (தில்லை வாழந்தணர் என்று தொடங்கும்) திருத்தொண்டத் தொகைப் பதிகம் 11 பாசுரங்களையும் **மனப்பாடம்** செய்து ஒப்புவிக்க வேண்டும்.

ஈ. மனப்பாடத் தேர்வில் வெற்றிபெறுத மாணவர்க்கு இப் பரிசு அளிக்கப் பெறமாட்டாது. அங்ஙனம் அளிக்கப்பெறு விடின் ஆண்டுத் தேர்வில் இரண்டாவது எண் பெற்றுள்ள

மாணவர்க்கு மேலே குறித்துள்ள நிபந்தனைகளின்படி இப் பரிசுகள் வழங்கப் பெறும். இம் மாணவரும் மேற்குறித்த பாடல்களை மனப்பாடஞ் செய்து ஒப்புவிக்காவிடின் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக் குழுவினர் பரிசுதருவதற்கென உள்ள இத்தொகையை வேறு முறையில் இக்கல்லூரியில் தருமம் செய்யலாம்.

உ. ஒருமுறை பரிசு பெற்றவரே மறுமுறையும் இதே பரிசுக்குரியவர் ஆயின் மேல்-இ-பிரிவில் குறித்த 64 திருப்பாடல்களோடு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய 'எற்றான் மறக்கேன்' என்று தொடங்கும் திருப்புக்கொளியூர் அவிநாசித் திருப்பதிகப் பாடல்கள் பத்தும் **மனப்பாடமாக** ஒப்புவிக்க வேண்டும். இன்றேல் மேல்-ச-பிரிவில் குறித்தவாறு நடத்தப் பெறும்.

ஊ. பனசைச் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால் டி. கல்லூரி நிர்வாகக் குழுவினரின் ஒப்புதல் பெற்று டி. கல்லூரி இன்னொரு ஆசிரியருடன் கலந்து இப் பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை ஆண்டு தோறும் டிசம்பர் மாதம் 31-ந் தேதிக்குள் நடத்தவேண்டும்.

எ. செந்தமிழ்க் கல்லூரி ஆண்டு விழாவின்போது இப் பரிசுகளை அளித்தல் வேண்டும்.

6. செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக் குழுவினர் ஆண்டு தோறும் வரவு செலவுக் கணக்கையும், அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண உதவித் தொகை அளித்த விவரமும், உபநயன உதவி பெருவிடின் ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குத் தொகை அனுப்பிய விவரமும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பரிசு அளித்த விவரமும், தொகையும், இத் தருமத்தை நிறுவியவர்களுக்கும் அவர் கட்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் அனுப்புவிக்க வேண்டும்.

7. மூலதனம் அரசியலாரால் திரும்ப அளிக்கப்பெற்றால் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே

முதலீடு செய்யவேண்டும். இத்தருமம் இதில் விவரித்துள்ள வாறே பயன் படுத்தப்பெறல் வேண்டும்.

திருப்பனந்தாள், 3—9—51. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office on 3—9—51 as No. 49 of 1951, Book No. 4, Volume 44, pages 26 to 30.

## 88

## ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் நினைவு நீதிநெறிவிளக்கப் பரிசு, கும்பகோணம் ரூ. 5000

சேந்திலாண்டவன் திருவருட் பெருக்கினால் பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடியவரும், மதுரையில் திருமலைநாயக்கர் வேண்டுகோளினால் திருக்குறட் சாரமாகிய நீதிநெறிவிளக்கம் என்னும் நூலை அருளியவரும் இன்னும் பல தமிழ்ப்பிரபந்தங்களைப் பாடியருளியவரும் ஆகிய ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் அவர்களை நினைவு கூர்ந்து மாண வர் உய்தற் பொருட்டும், நீதிநெறிவிளக்கத்தில் வகுத்த அற நெறியை மாணவர்கள் கடைப்பிடித்து ஒழுகுதற் பொருட்டும், **திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இப்பரிசு நிறுவப்பெற்றது. இது 'ஸ்ரீ ஆதி குமர குருபரசுவாமிகள் நினைவு நீதிநெறிவிளக்கப் பரிசு' எனப் பெறும்.

2. இதற்குரிய மூலப்பொருள் ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்). இத்தொகை நூற்றுக்கு 3½ வீதம் வட்டி தரக்கூடிய 10 ஆண்டுக் கருவூலச் சேமவைப்புத்தாள் (டிரஷரி சேவிங்க்ஸ் சர்டிபிகேட்) களில் முதலீடு செய்யப்பெறும். இது கும்பகோணம் நகர ஆட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. மூலப்பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 175. இவ்வட்டித் தொகையிலிருந்து (ரூ. 60, ரூ. 50, ரூ. 40 என) ரூபாய் 150 பரிசு ஆக அளிக்கவும், ரூ. 10 தேர்வு

நடத்தும் செலவுக்கெனவும் பயன்படுத்தப்பெறும். எஞ்சிய தொகை ரூ. 15 சேமித்து வைக்கப்பெறும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. கும்பகோணம் நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர் நிலைக் கல்விக் கூடங்களில் 5, 6-ம் அமைவு (பாரம்) களில் படிக்கும் ஆண் பெண் இருபாலார்க்கும் (சாதி, மத, குல) வேறு பாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிய நீதிநெறிவிளக்கம் எனும் நூலிலுள்ள 102 வெண்பாக்களையும் மனப்பாடம் செய்திருத்தல் வேண்டும்.

இ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு ; 50 கூறுகள் ; இரண்டு மணி நேரம் ; நீதி நெறிவிளக்கம் 102 பாடல்களில் கண்ட பொருளைப் பற்றியும், சொற்சுவை, பொருட்சுவைகளைக் குறித்தும் விளைவப்பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு ; 50 கூறுகள் ; அந்த 102 பாடல்களையும் (தேர்வுக் குழுவினரால் கேட்கப்பெறும் பாடல்கள்) மனப்பாடமாக (சொற்பொருள் விளங்கும் வண்ணம்) ஒப்புவிக்க வேண்டும்.

ஈ. இப்பரிசுத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். கும்பகோணம் நகர ஆட்சி மன்றத் தலைவரும் (சேர்மென், முனிசிபல் கவுன்சில்), கும்பகோணம் நகர ஆட்சி ஆணையரும் (கமிஷனர். கும்பகோணம் முனிசிபாலிடி) பரிசுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் (பிரின்சிபால்) அவர்களும் இத்தேர்வுக்குழுவின் உறுப்பினர் ஆவர்.

உ. பரிசுகளுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் கும்பகோணம் நகர ஆட்சி ஆணையருக்கு அனுப்புதல் வேண்டும். இருவகைத் தேர்வுகளும் டிசம்பர் மாதத்தில் நடத்தப்பெறவேண்டும்.

ஊ. மேல் (இ) பிரிவில் குறித்தவாறு நடத்தப்பெறும் இரு தேர்வுகளிலும் சேர்ந்து பெறும் கூறுகளில் முதல் கூறு பெற்றவர்க்கு முதற்பரிசு ரூ. 60 (ரூபாய் அறுபதும்), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 50 (ரூபாய் ஐம்பதும்), மூன்றாவது கூறு பெற்றவர்க்கு மூன்றாவது பரிசு ரூ. 40 (ரூபாய் நாற்பதும்) ஆக மூன்று பரிசுகள் அளிக்கப்பெறும்.

எ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு, ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக் கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வவத் தலைமையாசிரியர் முதனிலைத் தேர்வு நடத்தி, அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்கு பேரை மேல் (இ) பிரிவில் குறித்தவாறு நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு அனுப்புதல் வேண்டும்.

ஏ. ஒரு முறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற் குரியர் அல்லர்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன் நிறுவப் பெற்று, குடந்தை நகர ஆட்சி மன்றத்தினர் பரிபாலித்துவரும் ஸ்ரீ இராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு அளிக்கப்பெறும் நாளாகிய மாசி மகத்து நாளில் இப்பரிசுகளும் அளிக்கப்பெறல் வேண்டும்.

6. பரிசு அளித்தல், தேர்வு நடத்துதல் முதலியவை களுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவேயிருத்தல் வேண்டும். வட்டி வரவுக்கு ஏற்றவாறு பரிசுத் தொகைகளைக் குறைக்கவும் கூட்டவும் கூடும்.

7. இப்பொருளை முதலீடு செய்துள்ள சேமவைப்புத்தாள் கள் தவணை முடிந்து இத்தொகை திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசு அளித்த தொகை இவ்வளவு எனவும், பரிசு பெற்றவர் விளக்கத் தையும், இக்கட்டளை நிறுவியவர்களுக்கும் அவர்கட்குப் பின் வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்தல் கூடாது. இப்பரிசுகள் தொடர்ந்து அளிக்கப்பெறுவிடின் இக்கட்டளையை மாற்றியமைக்க இதை ஏற்படுத்தியவர்கட்கும் அவர் கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் உரிமை உண்டு.

---

குடந்தை நகராட்சி மன்றம் தம்முடைய ந. ம. மு. (எம். மி. ஆர்.) எண் 230, 30—8—1951-ஆ நீர்மானத்தால் இந்நிதியை ஏற்று நடத்த ஒப்புறுதியளித்தது. மூலப்பொருள் குடந்தை நகராட்சி ஆணையர் அவர்களின் 10298/51 என்றுள்ள 7—9—51-ந் நாளி கூடிதத்தால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's office on 8—9—51 as No. 50 of 1951, Book No. 4 Volume 44, pages 31 - 34.

## 89

## அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ரூ. 15,000

திருநெறிவழாத் திருவாமூரில் திருவவதாரஞ் செய்தருளிய வரும், திலகவதியாரால் திருநீறளிக்கப்பெற்றுத் திருவதிகை வீரட்டானேசுவரரால் சூலை நோய் தீர்ந்து சமண மதத்தினின்று தடுத்தாட் கொள்ளப்பெற்றவரும், நற்றமிழ்பாடி நாவுக்கரசு எனும் நாமம் பெற்றவரும், நீற்றறையிலிடப்பெற்று நலியா தெழுந்தும்—நஞ்சு கலந்த பாற்சோறுண்டும்—சமணர் ஏவிய மத வெங்களிற்றை அச்சமணரையே எதிர்த்து ஓடச்செய்தும்—கல்லியே தெப்பமாகக்கொண்டு கரையேறியும் - சோதனைகளை வென்று கி. பி. 615-630-ல் பல்லவ அரசனுக இருந்த முதலாம் மகேந்திரவர்மனைச் சமண மதத்தினின்று சைவ சமயஞ்சாரச் செய்தவரும், சம்பந்தரால் "அப்பர்" என்று அழைக்கப்பெற்ற வரும், திங்களூரில் அரவந் தீண்டிய அப்பூதியடிகளின் மூத்த சேயை உயிர்ப்பித்தும்- வையமெங்கும் வற்கடமாய்ச் செல்லத் திருவீழிமிழலையில் வாசியில்லாக் காசுபெற்று அடியார்கட்குச் சோறிட்டும்—வேதாரண்யத்தில் மறைக் கதவினைப் பாடித் திறந்தும்-கைலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டும்—திருப்பூந்துருத்தியில் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்தும்—சிவத்தலங்கள் தோறும் உழவாரப் பணி

பூரித்து பதிகமேழுநூறு பகர்ந்தருளிச் சித்திரைச் சதயமாம் திருநாளில் திருப்புகலூரில் சிவபெருமான் திருவடியை அடைந்த வருமாகிய திருநாவுக்கரசு சுவாமிகளை உலகு நினைந்துய்ந்தற் பொருட்டுத் **திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்திச் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** எழுதிவைக்கபெற்ற டிரஸ்ட் செட்டில் மெண்ட் பத்திரம். இத்தருமம் **"திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு"** எனப்பெயர் பெறும்.

2. இதன் சேர்க்கையில் (ஷெடியூலில்) விளக்கம் கண்டிருப் பதும், நமக்குச் சொந்தமாய் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுப வித்து வருகிறதுமான, திருப்பனந்தாள் வட்டம் திருப்பனந் தாள் கிராமத்தில் மேல வீதி, மேல்பக்கம் மனையில் நம்மால் கட்டப்பெற்றுள்ள ஐந்து கடைகளிலிருந்து கிடைக்கும்வாடகை வருமானத்தில் பாதித்தொகை தஞ்சாவூர் ஜில்லா திருப்பூந் துருத்தியில் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருநாளாகிய சித்தி ரைச் சதய நாளில் ஆண்டுதோறும் ஏழைகளுக்கு அன்னம் பாலிக்கப் பயன் படுத்தப்பெறும்.

3. எஞ்சிய தொகை மெ. கட்டிடத்தைப் பழுது பார்த் தற்கும் அதாவது ரிப்பேர் செய்தற்கும் மெ. மனை, கடைக்கட்டி டம் இவற்றுக்கு வரி செலுத்த வேண்டியிருப்பின் அதனைச் செலுத்துதற்கும், அக்கட்டிடத்தைப் பெரிதாக்குதல் முதலிய விருத்தியாம்சங்களைச் செய்தற்கும் பயன் படுத்தப்பெறும்.

4. கால வீலைக்கு ஏற்றவாறும், ஆண்டுதோறும் கிடைக் கும் வாடகை வருமானத்தில் இதற்கென உரிய தொகைக்கு ஏற்றவாறும், ஆண்டுதோறும் நம்மாலும் நமக்குப் பின் வரும் உரிமை உள்ளவர்களாலும் அமைக்கப்பெறும் திட்ட ஸ்டாப்தா வுக்கு ஏற்ப இவ்வன்னதானம் செய்யப்பெறும்.

5. இதிற்குறித்த சொத்து நம் பேரிலும் நமக்குப் பின் உரிமை உள்ளவர்கள் பேரிலுமே இருந்துவரும்.

6. மேலே விளக்கம் பெற்றுள்ள செலவினங்கட்கன்றி வேறு எவற்றுக்கும் இவ்வருமானம் பயன்படுத்தப் பெறமாட் டாது.

7. இந்த டிரஸ்ட் பத்திரத்தின் மதிப்பு ரூ. 15,000-ருபாய் பதினையாயிரம்.

சேர்க்கை—ஷெடியூல்

தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்ட்டு திருவிடைமருதூர் சப் ரிஜிஸ்தரைச் சேர்ந்த கும்பகோணம் தாலூக்கா திருப்பனந்தாள் வட்டம் திருப்பனந்தாள் கிராமத்தில்

ரி. சர்வே. நெ. 264-22 ஏ. நத்தம் மேல வீதிக்கு மேற்கு, நமக்கும் எம். கோவிந்தசாமி பிள்ளைக்கும் பொதுவாக உள்ள சந்துக்கும் கிழக்கு, போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெற்கு, சடைய பிள்ளை கடை கூரைகட்டிடம் கொல்லி வால்வீச்சுக்கும் துரைசாமிபிள்ளை மனைக்கும் வடக்கு, இதற்குட்பட்ட ஓட்டுக் கட்டிடம், கடை ஐந்தும், கொல்லை காம்பவுண்டு சுவர்உள்பட.

தென்வடல் ஜாதியடி.-கிழ்ப்புறம் 56-3/4
ஷெடி. மேல்புறம் 62-3/4
கிழமேல் ஜாதியடி.-தென்புறம் 110-1/4
ஷெடி. வடபுறம் 115-1/4

*12—10—1951.* *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 15-10-51 as No. 2411 Book No. 1. Volume 1022 pages 130-132.

## 90

## Sri Kumaragurupara Swamigal Memorial Tamil Cash Prize Endowment At Tirunelveli District

**Founded by His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Tirupanandal, Tanjore Dt.**
**Capital Rs. 5000**

1. The fund shall be called "Sri Kumaragurupara Swamigal (Founder of Kumaraswami Mutt at Kedar Ghat,

Benares) memorial Tamil Cash Prize Endowment at Tirunelveli District" and shall consist of Ten Year Treasury Savings Deposit Certificates to the face value of Rs. 5000 (Rupees Five thousand only) fetching interest at $3\frac{1}{2}\%$ per annum.

2. The Commissioner for Government Examinations, Madras for the time being shall be the administrator of the fund.

3. Out of the interest accruing annually on the said fund a sum of Rs. 150 (Rs. One hundred and fifty only) shall be utilised every year for the award of 5 Cash Prizes of Rs 30 (Rs. Thirty) each. The cash prizes shall be called "Sri Kumaragurupara Swamigal Memorial Tamil Cash Prize".

4. The prizes shall be awarded to that student who, at the first appearance for the Secondary School Leaving Certificate Examination held under the authority of the Government of Madras, was declared eligible to undergo the University Course and who secured the highest number of marks in Tamil (viz, the Regional Language in the said Examination) in each of the following places in the Tirunelveli District:—

1. Srivaikuntam
2. Tiruchendur
3. Tirunelveli
4. Sankarankoil

and 5. Ambasamudram.

5. The said Tamil Cash Prize may be awarded to the student even though that student is in receipt of another prize or prizes.

6. If two or more students have equal claims to the prize (in any of the places referred to in para 4 supra) the student who is to receive the prize shall be ascertained by casting lots.

7. The prize amounts (in each of the places referred to in para 4 supra) shall be paid through the school from which the student appeared for the Secondary School Leaving Certificate Examination and the names of pupils to whom the prizes were awarded shall be communicated to the Donor or his Successors-in-interest.

8. The balance of interest left after awarding the cash prizes shall be accumulated and such accumulations shall from time to time be invested in Government Securities and added to the corpus of the fund. When the sum so added to the fund amounts to Rs. 1000 a sum of Rs. 25 (Rupees Twenty-five only) from out of the interest on the said sum of Rs. 1000 shall be awarded as a second prize in the serial order of places mentioned in paragraph 4 supra.

9. The amount of the fund shall from time to time, be reinvested in Government Securities fetching a high rate of interest.

---

This endowment has been accepted by the Secretary to Government of Madras in his memorandum No. 38465/F. 51-1 Education dated 16th Oct. 1951 and the amount of Rs. 5000 has been sent to the Accountant General, Madras on 3—11—1951 by cheque on the Imperial Bank of India, Kumbakonam No. PB-7 127885 dated 3—11—1951.

## 91

## ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு ஸ்ரீவைகுண்டம் மூலதனம் ரூ. 3500

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து நான்காம் பட்டத்து எழுந்தருளித் தருமையும் கமலியும் விரிதமிழ்க்கூட லும் திருநகராக வரசு வீற்றிருந்தவரும், ஸ்ரீ குமரகுருபர சுவாமி களுக்கு ஞானசிரியராய்த் திகழ்ந்து அவர்களால் "நான்மறைக் கிழவ, நற்றவ முதல்வ, நூன்முறை பயின்ற நுண்மைசால் அறிஞ, சொற்சுவை பழுத்த தொகைத் தமிழ்க்கவிஞ, கற்றவர் வியக்கும் காவியப்புலவ, கவிஞர் வயின் நிரப்புங் கல்விப் பிரசங்க, மும்மலக் கிழங்கை முதலொடும் அகழ்ந்து சிற்பர முணர்த்தும் சற்குருராய" என்று போற்றுதல் பெற்றுப் "பண்டார மும்மணிக்கோவை" என்னும் பாமாலை சார்த்தப் பெற்றவருமாகிய ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் அவர்களை நினைவு கூர்தற்பொருட்டுத் திருப்பனந் தாள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது "ஸ்ரீ மாசிலா மணித் தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு" எனப்பெறும்.

2. இதற்குரிய மூலதனம் ரூ. 3500 (ரூபாய் மூவாயிரத்து ஐந்நூறு) நல்ல வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்க ளாகவுள்ளது. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் இந்நிதியைப் பரிபாலனஞ் செய்வர்.

3. இம்மூலதனத்தினின்றும் வரும் வட்டித் தொகையி லிருந்து ஆண்டுதோறும் ரூ. 100 (ரூபாய் நூறு) பரிசு அளிக்கப் பயன்படுத்தப்பெறும். எஞ்சிய வட்டித் தொகை இந்நிதியைப் பரிபாலனஞ் செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவுகளுக்குப் பயன்படுத்தப் பெறும்.

4. பரிசுக்குரிய நிட்டங்களாவன :—

(அ) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சாதி, மத, பால், பாகு பாடு இன்றி இப்பரிசு பெறுதற்குரியர் ஆவர். குறிப்பு-ஆசிரியர் என்பது ஓவியம், உடற்பயிற்சி, தமிழ், வடமொழி, இந்தி

முதலியன பயிற்றும் ஆசிரியர்களையும், எல். டி.. செகண்டரி கிரேட் முதலிய எல்லாத் தரமுடைய ஆசிரியர்களையும் குறிக்கும்.

(அ) தம் கல்விக் கூடத்து முன்னேற்றத்தின் பொருட்டு ஆக்கவேலை செய்தல், தம் பள்ளிக்கூடத்துப் பொதுநலத் தொண்டில் சிறப்பாகப் பங்குகொள்ளுதல், கல்வி சொல்லவல்ல நல்வித்தையிற் சிறந்திருத்தல், பொறையுடைமை, நடுவுநிலைமை, மாணவர் போற்றும் மாண்புடைமை, நற்றமிழில் சொல்வன்மை இன்னோரன்ன நற்பண்புகள் பொருந்திய ஆசிரியர் ஒருவருக்குப் பரிசு அளிக்கப்பெறும்.

(இ) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி நிர்வாகக் குழுவினரே இப்பரிசுக் குரிய ஆசிரியர் ஒருவரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுப்பர். அந்நிர்வாகக் குழுவினரின் தீர்ப்பே முடிவானது.

(ஈ) ஒருமுறை பரிசு பெற்றவர் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்தே மறு முறை பரிசு பெறுவதற்குரியர்.

(உ) இப்பரிசு ஆண்டுதோறும் நடைபெறும் ஸ்டி உயர் நிலைப்பள்ளி ஆண்டுவிழாவில் அளிக்கப்பெறும்.

5. ஸ்டி உயர்நிலைப்பள்ளி நிர்வாகக் குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் பரிசுக்குரியவர் பெயரை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவருக்கு ஆண்டுதோறும் விழா நாளுக்கு ஒரு திங்கள் முன்னமேயே தெரிவித்தல் வேண்டும். குமரகுருபரன் சங்கத்துத் தலைவரால் பரிசுத்தொகை ரூ. 100 (ரூபாய் நூறும்) ஸ்டி உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியரிடம் பரிசு தருவதற்கெனக் கொடுக்கப்பெறும்.

6. எந்த ஆண்டிலேனும் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப் பெறுமையால் பரிசு தராமற்போனால் அத்தொகை மூலதனத் தோடு சேர்க்கப்பெறும்.

7. பரிசுத்தொகையை வட்டி வருமானத்துக்கு ஏற்றவாறு கூட்டவும், குறைக்கவும் ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவருக்கு உரிமையுண்டு.

8. இத்தருமத்தை வேறு எந்த முறையிலும் பயன்படுத்தக் கூடாது.

9. இம்மூலதனம் திரும்பி யளிக்கப்பெற்றதும், மீண்டும் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே முதலீடு செய்யவேண்டும். மூலதனம் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமர குருபரன் சங்கத்துப் பேரிலேயே இருத்தல் வேண்டும்.

---

**குறிப்பு :** இதன் மூலதனம் ரூ. 3500 ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் திரு. டி. எம். குமரகுருபரன் பிள்ளை அவர்கட்கு 17-10-51-ல் ரூ. 1000 ரொக்கமாகவும், 23-10-51உ ரூ. 2500 கும்பகோணம் இம்பீரியல் பாங்கு 97875 என்னுள்ள உண்டியல் மூலமாகவும் அளிக்கப்பெற்றது. ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கம் 31-10-51உ பாளையங்கோட்டையில் The Societies Registration Act XXI of 1860யின் படிக்குப் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

சேர்க்கை—1

**ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமாகுருபரன் சங்கம்**

**(1860-ம் வருஷத்து ஆக்ட்டுப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டுள்ளது)**

டி. எம். குமரகுருபரன் பி. ஏ. பி. எல். ஸ்ரீவைகுண்டம்,
நிரந்தரத் தலைவர். 18—12—1951.

16—11—51 மாலை 5 மணிக்குக் கலெக்கோவில் மாடிக்கட்டிடத்தில் நடந்த முதற்கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

3. திருப்பனந்தாள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** மாசிலாமணி தேசிக ஞான சம்பந்தர் நினைவுப் பரிசு ரூ. 3500 மூலதனத்தில் ஏற்படுத்தியிருப்பதை வரவேற்று நன்றியுடன் ஒப்புக்கொள்ளல்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கருணை பாலித்து 'ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்தர் நினைவுப் பரிசு' நிறுவுவதற்கு அனுப்பியருளிய சாசன மசுவிதாவை மகிழ்ச்சியுடன் வரவேற்று வாசித்துப் பார்த்து ஒப்புக்கொள்ளலாயிற்று.

அசலுக்குச் சரியான நகல்.

ஒப்பம். **டி. எம். குமரகுருபரன் பிள்ளை,**
நிரந்தரத் தலைவர்.

சேர்க்கை—2

Copy of the Resolution No. (4) passed by the Managing Committee of our School, (Sri Adi Kumaragurupara Swamigal Boys' High School, Srivaikuntam) in the meeting held on Thursday the 8th November, 1951.

விஷயம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நம் பள்ளிக்கூட உபாத்தியாயர்களில் மிக ஊக்கத்துடன் சிறந்த சேவை செய்பவர்க்குப் பள்ளிக்கூடப் பரிசளிப்பு விழாவின் போது ஆண்டுதோறும் சன்மானம் வழங்க நன்கொடை அருளி ஸ்ரீ மாசிலாமணித்தேசிகர் ஞானசம்பந்தர் நினைவுப்பரிசு நிறுவ ரூ. 3500 மூலதனம் ஏற்படுத்தியிருப்பதற்கு நம் நன்றி செலுத்த.

தீர்மானம்

இவ்வுயர்நிலைப் பள்ளியின் நிர்வாகஸ்தர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் கருணையுடன் அருளிய நன்கொடைக்கு வணக்கத்துடன் நன்றியை விண்ணப்பித்துக்கொள்கிறார்கள்.

(True copy)

(Sd) S. N. Adinathan,
13—11—1951 Ag. Headmaster.

Tirupanandal
Dated : 2-12-1951. } *(Sd) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office on 18—12—1951 as No. 69 of 1951 of Book No. 4 Volume 44 pages 66 to 69.

## 92

## Sri Adi Kumaragurupara Swamigal Memorial Feeding Charity at Rameswaram Rs. 3,500

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Avergal, in revered memory of

the illustrious Founder of Kumaraswami Mutt at Benares, SRI ADI KUMARAGURUPARA SWAMIGAL who spread Tamil culture from Rameswaram to Benares in the 17th century. This endowment is styled "KUMARAGURUPARA SWAMIGAL FEEDING CHARITY" at Rameswaram.

2. This endowment consists of Government Promissory Notes to the face value of Rs. 3,500 (Rs. Three thousand five hundred only) invested in 3% Conversion Loan of 1946 G. P. Notes Nos. CA. 122135 Rs. 1000; CA. 122136 Rs. 1000; C. A. 122137 Rs. 1000 and C. A. 120734 Rs. 500. The administration shall vest in the Donor and his Successors-in-interest.

3. The annual interest accruing on the Government Promissory Notes shall be utilised for the feeding of Brahmins and Maheswara Pooja (Saivite feeding) during the month of Marghaseersha (மார்கழி) every year in our Kasi Mutt building at Rameswaram.

4. The feeding shall be in accordance with the Thittajaptha prepared at the time of the celebration which will depend upon the prices then current.

5. The charity shall be conducted every year by the Donor and his Successors-in-interest. This endowment shall not be diverted to any purpose other than the one intended by the Donor.

7—12—51 *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office on 17-12-51 as No. 68 of 1951. Book No, 4 Volume No. 44, pages 64—66.

## 93

## Sri Kumaragurupara Swamigal Memorial Feeding Charity at Chennapuri Annathana Samajam, Madras Capital Rs. 5000

This deed of Endowment executed this 24th day of December, 1951, by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Avergal of Tirupanandal, residing in Tirupanandal, Tanjore District, hereinafter called the Donor (which expression shall include his successors-in-interest) in favour of Sri Chennapuri Annadhana Samajam, 9, Nainiappa Naicken Street, G. T. Madras, hereinafter called the Donee,

Whereas His Holiness the Donor is desirous of establishing a feeding charity at Madras, in sacred memory of the illustrious saint, scholar and poet Sri Adi Kumaragurupara Swamigal who founded the Kumaraswami Mutt at Benares and spread Tamil culture and Saiva Siddhanta from Cape Comorin to Himalayas, under the style of Sri Kumaragurupara Swamigal Momorial Feeding Charity at Madras,"

Whereas with that object the Donor is desirous of endowing a sum of Rs. 5000 (Rs. Five thousand only) in favour of the Samajam, whereas for effectuating the said object the Donor is desirous that as many poor people as without distinction of sex, race, caste or creed should be fed on the Kumaragurupara Swamigal day viz., Vaikasi Amarapaksham Thrithiyai in every year, the date whereof will be intimated beforehand by the Donor to the Samajam,

Whereas the Donor has also purchased Government Promissory Notes of the face value of Rs. 5,000 carrying interest at 3% per annum (Conversion Loan of 1946 Government Promissory Notes Nos. C. A. 122200 for Rs. 2000

C.A. 122142 for Rs. 1000; C. A. 122143 for Rs. 1000; C. A. 122144 for Rs. 1000; total Rs. 5000,

Now this deed witnesseth that in consideration of the premises the Donor hereby declares a trust in favour of the said Sri Chennapuri Annadana Samajam in respect of the said sum of Rs. 5000 and that he holds the same in Trust for the said Sri Chennapuri Annadana Samajam and designates it as "Sri Kumaragurupara Swamigal Memorial Feeding Charity" the Donor hereby agrees to keep the said promissory Notes in his possession and realise the interest accruing thereon and send the amount of that interest as and when realised to the Honorary Secretary of the said Samajam on behalf of the said Samajam for the purpose of feeding as many poor people as possible without distinction of sex, race, caste, or creed on the Kumaragurupara Swamigal's day as aforesaid, the date whereof will be intimated to the said Samajam previously.

The Donee shall feed the said poor on the said day and submit a report of the feeding to the Donor within a week of the date of the said feeding.

In witness whereof the Donor has hereunto executed this deed this 24th Day of December, 1951.

*(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office on 2-1-1952 as No. 1 of 1952 of book 4, volume 44, pages 73 to 75.

## 94

## Sri Manickavachaga Swamigal Memorial Feeding Charity at Benares Endowed Capital Rs. 5,000

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Avergal, Tirupanandal, in

revered memory of Sri Manickavachaga Swamigal, otherwise known as Tiruvadavur Adigal one of the four Saiva Samaya Acharyas who was the Prime Minister in the Court of the Pandyan King Varaguna Pandya I (775—825 A. C.) who, blessed by Lord Siva at Tirupperunthurai, sang the sweet and heart melting songs—ruby Pearl-like utterances—the Tiruvachakam, for whom Lord Siva performed the Jackal and the Vaigai Flood miracles and who also sang the Tirukkovaiyar which had the unique greatness of being written by the Holy Hand of Lord Siva. This endowment shall be styled as "SRI MANICKAVACHAGA SWAMIGAL MEMORIAL FEEDING CHARITY AT BENARES."

2. This endowment shall consist of Government Promissory Notes to the face value of Rs. 5000 viz, 3% Conversion Loan of 1946 Nos. C A. 122145 for Rs. 1000; CA. 122191 Rs 2000; and C.A. 122199 Rs. 2000. The administration shall vest in the Donor and his Successors-in-interest.

3. The annual interest accuring on the G. P. Notes shall be utilised for the feeding of Brahmins and Mahewarapooja (Saivite feeding) in our choulty at Benares on the Anniversary day—Ani Maham (ஆனி மகம்)

4. The feeding shall be in accordance with the Thitta Japtha prepared at the time of the celebration which will depend on the interest received on the capital and the prices then current.

5. The charity shall be conducted every year by the Donor and his Successors-in-interest. This endowment shall not be diverted to any purpose other than that intended by the Donor.

5—1—1952. *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's office on 6-1-1952 as No. 5 of 1952 book No. 4 volume No. 44 pages 82—83.

## 95

## Sri Adi Kumaragurupara Swamigal Memorial Feeding Charity at Tiruchendur Rs. 5,000

This endowment is founded by His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal avergalof Tirupanandal, to commemorate the divine act of grace of blessing Sri Adi Kumaragurupara Swamigal who was born dumb, with the gift of speech when he was five years old at Tiruchendur which enabled him to sing at once KANDAR KALIVENBA in ecstatic praise of SRI SENTHILANDAVAN.

2. This endowment shall consist of Government Securities of the face value of Rs. 5000 (Rs. Five thousand only) invested in 3% Conversion Loan of 1946-G. P. Note No. CA. 124783 for Rs. 5000.

3. The annual interest accruing on the capital each year will be utilised for conducting Maheswara Pooja and poor feeding on the Anniversary Day-Vaikasi Amarapaksham Thrithiyai வைகாசி அமரபக்கம் திருதியை at Tiruchendur.

4. This endowment shall not be diverted to any purpose other than the one mentioned above.

5. The administration of the fund shall vest with the Donor and his Successors-in-interest.

Tirupanandal,
4th Feb., 1952 } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's office as No. 10 of 1952 of Book No. 4 Volume 44 pages 88 and 89, dated 5th Feb., 1952.

## 96

## ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு, திருச்சிராப்பள்ளி முதற்பொருள் ரூ. 5000

திருச்சிராப்பள்ளி மலைமீது கோவில் கொண்டிருக்கும் தாயுமானவீசன் திருவருளால் திருவருட் பெருமையை விளக்கவந்தவரும், வடநூற் கடலும் தென்றமிழ்க் கடலும் நிலைகண்டுணர்ந்தவரும், மூவர் பாடலின் இனையற்ற தீஞ்சுவையையும் மணிமொழியாரின் திருவாசகக் கனிவையும் நுகர்ந்தவரும், திருச்சியிலுள்ள தருமையாதீன மௌனமடத்திலே எழுந்தருளியிருந்த மௌன குரு எனும் சிவயோகியாரிடம் ஞானயோக முறைகள் கைவரப் பெற்றவரும், 1627-1654-ல் ஆட்சிபுரிந்த விஜயரெங்க சொக்கநாத நாயக்கர் எனும் மன்னரிடம் அரசாங்க அலுவலாளராயிருந்தவரும், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினவரும், தெளிபளிங்கன்ன தூய உள்ளம் - தாழ்வெனும் தன்மை - வீடு பேற்றின்கண் பேரவாப் பெருக்கு - பதார்த்தங்கள் பாராது பரமே பார்க்கும் பெருநோக்கு - புனிதப் புனற்பெரு வெள்ளம் போன்ற சொல்லாற்றல் - ஆகிய பண்புகளையுடையவரும், கன்னலமுதெனவும் கனியெனவும் வாழ்நாறு கன்டெனவும் புகலத்தகும் தண்டமிழலங்கல் பல தொடுத்தவருமாகிய தாயுமான அடிகளாரை நினைவு கூர்ந்து உய்தற்பொருட்டும், அவர்தம் பாடல்களைப் பயின்று அவற்றுள் வகுக்கப்பெற்ற தூய நெறியை மாணவர் கடைப்பிடித்தொழுகுதற்பொருட்டும் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது "ஸ்ரீ தாயுமானசுவாமிகள் நினைவுப்பரிசு" என வழங்கப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம் இத்தொகை நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு 3-1/2 வீதம் வட்டி தரக்கூடிய பத்தாண்டுக் கருவூலச் சேமவைப்புத்தாள் (டிரஷரி சேவிங்ஸ் சர்டிபிகேட்)களில் முதலீடு செய்யப்பெறும். இது திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம் முதற்பொருளினின்றும், ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 175. இவ்வட்டித் தொகையினின்று (ரூ. 50, ரூ. 40, ரூ. 30) என ரூ. 120 பரிசு ஆக அளிக்கவும், எஞ்சிய தொகையில் ரூ. 20 (ருபாய் இருபது) தேர்வு நடத்துதல் பரிசளிப்புவிழா ஆகியவற்றுக்குரிய செலவுக்கெனவும், பயன்படுத்தப்பெறும். மீதி மூலதனத்தோடு சேர்க்கப்பெறும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக்கல்விக் கூடங்களில் 5, 6 அமைவு (பாரம்) களில் படிக்கும் ஆண், பெண் இருபாலார்க்கும் (சாதி, மத, குல) வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் தாயுமானசுவாமிகள் அருளிச்செய்த பாடற்றிரட்டில் கீழ்க்குறித்துள்ளவாறு 84 (எண்பத்துநான்கு) பாடல்களை மனப்பாடஞ்செய்து (சொற்பொருள் விளங்கும் வண்ணம்) ஒப்புவிக்கவேண்டும்; வாய்மொழியாகக் கேட்கும் வினாக்களுக்கும் விடையிறுத்தல் வேண்டும்.

| தேர்வுப் பாடற்குறிப்பு | பாடல்கள் |
|---|---|
| க. பராபரக்கண்ணி (தொடர்ந்து எவையேனும்) கண்ணிகள் | 10 |
| ங. பைங்கிளிக் கண்ணி ,, ,, | 10 |
| ச. எந்நாட்கண்ணியில் அடியார் வணக்கம் | 9 |
| ஞ. காண்பேனே வென்கண்ணி (தொடர்ந்து எவையேனும்) கண்ணிகள் | 10 |
| ட. (ஆகாதோ, இல்லையோ, வேண்டாவே, நல்லறிவே, பலவகை என்னும் கண்ணிகள், ஆனந்தக்களிப்பு, வண்ணம் என்பவை நீங்கலாக) மற்றத் தலைப்புக்கள் 45-ல் ஒவ்வொரு தலைப்புக்கு ஒரு பாடல் வீதம் | 45 |
| ஆகப் பாடல்கள் | 84 |

இ. இப்பரிசுக்குரிய **மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு** தேர்வுக் குழு அமைக்கப்பெறும். திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி மன்றத் தலைவரும் (சேர்மென், முனிசிபல் கவுன்சில்,) திருச்சி நகர ஆட்சி ஆணையரும் (கமிஷனர் திருச்சி முனிசிபாலிடி), பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக்கல்விக் கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது அவர்களால் அனுப்பப் பெறும் தமிழாசிரியர்களும், இத்தேர்வுக்குழுவின் உறுப்பினராவர். திருச்சி மௌன மடத்துக் கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் அவர்களையும் இத்தேர்வுக்குழுவில் ஒருவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். திருச்சி நகர ஆட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக் குழுவின் தலைவரும் ஆவர்.

ஈ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங் களைத்தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் திருச்சி நகர ஆட்சி ஆணையருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வு டிசம்பர்த் திங்களில் தேர்வுக்குழுத் தலைவர் குறிப்பிடும் இடத்தில் நடைபெறும்.

உ. பரிசுத் தேர்வில் முதற்கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 50 (ரூபாய் ஐம்பதும்), இரண்டாவது கூறு பெற்ற வர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 40 (ரூபாய் நாற்பதும்), மூன்று வது கூறு பெற்றவர்க்கு மூன்றுவது பரிசு ரூ. 30 (ரூபாய் முப்ப தும்) ஆக மூன்று பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஊ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக் கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வவர் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்கு பேரை மேல் (ஆ) பிரிவில் குறித்தவாறு நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ் வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

எ. ஒரு முறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற் குரியரல்லர்.

5. இப்பரிசுகள் ஜனவரி மாதம் (அதாவது) தைத் திங்களில் விசாக விண்மீன்கூடிய தாயுமான அடிகளார் நினைவு நாளில் திருச்சி தாயுமானசுவாமி திருக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்திலோ அல்லது நகர மன்றத்துறுப்பினர் கூடும் மண்டபத்திலோ (முனிசிபல் கௌன்சில் ஹால்) பரிசளிப்புக்கெனக் கூட்டிய ஒரு பொதுக்கூட்டத்தில் அளிக்கப்பெறும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், பரிசு அளிப்புக் கூட்டம் நடத்துதல் ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே யிருத்தல் வேண்டும். வட்டி வரவுக்கேற்றவாறு பரிசுத் தொகைகளைக் குறைக்கவும் கூட்டவும் கூடும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம் முதற் பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்ய வேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும் பரிசுத் தொகை, பரிசு பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துக்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்களுக்கும், அவர்கட்குப் பின் வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடின் அந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை ரூ. 120 (ரூபாய் நூற்று இருபதும்) ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். மே ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் கலைக்கோவில் நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்க்குப்

பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு :** திருச்சிராப்பள்ளி நகர மன்றம் 1952-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ம் நாள் நடந்த விரைவுக் கூட்டத்தில் நிச்மான எண் 603ன் படிக்கு இந்நிலையை ஏற்று நடத்த ஒப்புறுதியளித்தது. முதற்பொருள் திருச்சி நகராட்சி ஆணையர் அவர்களின் 20—2—52 தேதி கொண்ட கடிதத்தால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

Tirupanandal,
22 Feb. 1952. } (*Sd*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 25—2—1952 as No. 15 of 1952 Book No. 4 Volume No. 44 pages 98 to 102.

## 97

## திருநாரையூரில் திருமுறை ஓதுவார் குடியிருக்க ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ரூ. 6,400

## 98

## ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு திருச்சிராப்பள்ளி - சேமவைப்பு ரூ. 5000

செந்திலாண்டவன் திருவருளால் ஸ்ரீ வைகுண்டத்தில் கைலாசபுரத்தில் திருவவதாரம் செய்து ஐந்து வயதிலேயே பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்கப்பெற்றுக் **கந்தர் கலிவெண்பாப்** பாடியும், மதுரையில் கலம்பகமும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் பாடியும், 1623—1659ல் தமிழ் நாட்டில் ஆட்சிபுரிந்து 1626ல் திருச்சிராப்பள்ளியினின்று மதுரைக்குத் தலைநகரை மாற்றியமைத்து அரசு செலுத்திய திருமலை நாயக்கர் வேண்டு கோளினுல் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றி ஸ்ரீ மீனாட்சி அம்மையாரால் முத்தாரம் அணியப்பெற்று அந் நாயக்க மன்னர் வேண்டுகோட்படி திருக்குறட் சாரமாகிய நீதி

நெறி விளக்கம் எனும் நூலியருளியும், திருவாரூரில் நான்மணி மாலை பாடியும், தருமையம்பதியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்பால் திருப்பெருகு சிவஞானம் பெற்றுப் பண்டார மும்மணிக்கோவை பகர்ந்தும், புள்ளிருக்கு வேளூரில் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழும் சிதம்பரத்தில் மும்மணிக் கோவையும் சிதம்பர செய்யுட் கோவையும் யாத்தும், ஸ்ரீ காசிக் கெழுந்தருளிச் சகலகலா வல்லி மாலை பாடி இந்துஸ்தானி மொழி கைவரப்பெற்று முகலாய மன்னனைச் சிங்கத்தின் மீதேறிச் சென்று கண்டு தம் இணையிலாச் சொல்வன்மையாலும் நடையுரைப் பெருந்துறவாலும் அவனை வணக்கிச் செயற்கரிய செயல்பல புரிந்து இடம் பெற்றுக் கேதாரத்துறை, கேதாரமந்திரம், அறச்சாலை இவையிற்றை நிறுவியும், ஆங்குக் காசிக் கலம்பகம் முதலிய பிரபந்தங்களைப் பாடியும், வெள்ளியம்பலவாண முனிவர் முதலிய அரிய புலவர்களுக்கு ஆசானுகித் திகழ்ந்தும், குமரிமுதல் காசி வரையில் தண்டமிழைப் பரப்பியருளிய மெய்ஞ்ஞானப் புலவர் ஆகிய **ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்** அவர்களை நினைவு கூர்தற்பொருட்டும், நீதிநெறிவிளக்கத்தில் வகுக்கப்பெற்றுள்ள அறநெறியை மாணவர் கடைப்பிடித்தொழுகி உய்தற்பொருட்டும் திருப்பனந்தாள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது **ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறிவிளக்கப் பரிசு** எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்) இத்தொகை நூற்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3-1/2 வீதம் வட்டி தரக்கூடிய பத்தாண்டுக் கருவூலச் சேமவைப்புத்தாள் (டிரஷரி சேவிங்ஸ் சர்டிபிகேட்)களில் முதலீடு செய்யப்பெறும். இது திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம் முதற்பொருளினின்றும் ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 175. இவ்வட்டித் தொகையினின்று (ரூ. 55, ரூ. 45, ரூ. 30) என ரூ. 130 பரிசு ஆக அளிக்கவும், எஞ்சிய தொகையில் ரூ. 20 (ரூபாய் இருபது) தேர்வு நடத்துதல், பரிச

ளிப்புவிழா ஆகியவற்றுக்குரிய செலவுக்கெனவும், பயன்படுத்தப்பெறும். மீதி முதற்பொருளோடு சேர்க்கப்பெறும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர் நிலைக் கல்விக்கூடங்களில் 5, 6 அமைவு (பாரம்)களில் படிக்கும் ஆண் பெண் இருபாலார்க்கும் (சாதி, மத, குல) வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த **நீதிநெறிவிளக்கம்** எனும் நூலிலுள்ள 102 வெண்பாக்களையும் மனப்பாடஞ் செய்திருத்தல் வேண்டும்.

இ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு ; 50 கூறுகள் ; இரண்டு மணிநேரம்; நீதிநெறிவிளக்கம் 102 பாடல்களில் கண்ட பொருளைப்பற்றியும் சொற்சுவை பொருட்சுவைகளைக் குறித்தும் வினவப்பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு ; 50 கூறுகள் ; அந்த 102 பாடல்களையும் (தேர்வுக் குழுவினரால் கேட்கப்பெறும் பாடல்கள்) மனப்பாடமாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்புவிக்கவேண்டும்.

ஈ. இப்பரிசுக்குரிய தேர்வுகளை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். திருச்சிராப்பள்ளி நகர ஆட்சிமன்றத் தலைவரும் (சேர்மன் முனிசிபல் கவுன்சில்), திருச்சி நகர ஆட்சி ஆணையரும் (கமிஷனர் திருச்சி முனிசிபாலிடி), பரிசுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமை ஆசிரியர் அல்லது அவர்களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும், இத்தேர்வுக் குழுவின் உறுப்பினராவர். திருச்சி மவுன மடத்துக் கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் அவர்களையும் இத்தேர்வுக் குழுவில் ஒருவராக ஏற்றுக்கொள்ளவேண்டும். திருச்சி நகர ஆட்சிமன்றத் தலைவரே இத்தேர்வுக் குழுவின் தலைவரும் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவர்.

உ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும்

ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் திருச்சி நகராட்சி ஆணையருக்கு அனுப்புதல்வேண்டும். பரிசுக்குரிய மாணப்பாடத் தேர்வு டிசம்பர் திங்களில், தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

ஊ. மேல் (இ) பிரிவில் குறித்தவாறு நடத்தப்பெறும் இருதேர்வுகளிலும் சேர்ந்துபெறும் கூறுகளில் முதற்கூறு பெற்றவர்க்கு முதற்பரிசு ரூ. 55 (ஈபாய் ஐம்பத்தைந்தும்), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்தும்), மூன்றுவது கூறு பெற்றவர்க்கு மூன்றுவது பரிசு ரூ. 30 (ரூபாய் முப்பதும்), ஆக மூன்று பரிசுகள் அளிக்கப்பெறும்.

எ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வவர் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்குபேரை மேல் (இ) பிரிவிற் குறித்தவாறு நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல்வேண்டும்.

ஏ. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற் குரியரல்லர்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன்னிறுவப் பெற்றுத் திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றத்தினர் 31-1-52ல் யில் பரிபாலிப்பதாகத் தாம் ஏற்றுக்கொண்டுள்ள ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு அளிக்கப்பெறும் நாளாகிய **தைத் திங்கள் விசாக விண்மீன்** கூடிய நன்னாளில் இப்பரிசுகளும் அளிக்கப் பெறல் வேண்டும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், பரிசு அளிப்புக் கூட்டம் நடத்துதல் ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித்தொகைக்கு உள்ளாகவேயிருத்தல் வேண்டும். வட்டி வரவுக் கேற்றவாறு பரிசுத்தொகைகளைக் குறைக்கவும் கூட்டவும் கூடும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக்கணக்கையும், பரிசுத் தொகை, பரிசு பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு ஸ்ரீவை குண்டம் ஸ்ரீகுமரகுருபரன் சங்கத்துக்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்களுக்கும், அவர்கட்குப் பின் வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத்தேர்வு நடத்தாவிடின் அந்த ஆண்டுக்குரிய பரிசுத்தொகை ரூ. 130 (ரூபாய் நூற்று முப்பதும்) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந் தரத்தலிவர் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். மே ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரன் சங்கத்துத் தலிவர் அவர்கள் அத்தொகையைக்கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலுள்ள குமரகுரு பரன் கலிக்கோவில்-நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத் தியவர்கட்கும் அவர்க்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

**குறிப்பு :-திருச்சிராப்பள்ளி நகரமன்றம் 1952-ம் ஆண்டு மார்ச்சு 10-ம் நாள் நடந்த கூட்டத்தில் நிச்சான எண் 729ன் படிக்கு இந்நிபை ஏற்று நடந்த ஒப்புறுதியளித்தது. முதற்பொருள் திருச்சி நகராட்சி ஆணையர் அவர்களின் அ. மே. தா. சி. 1/52 என்னுள்ள 13—3—1952ஆ கொண்ட கடிதத்தால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.**

Tirupanandal,
24—3—1952. } (*Sd*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 24-3-1952 as No. 25 of 1952, Book No. 4, Volume No. 44, pages 113-117.

## 99

## தஞ்சை, கலிக்கூடத்திற்கு நன்கொடை ரூ. 5,000

## 100

## கடவூர்க் கலயர் புனற் பந்தர் நிதி முதற்பொருள் ரூ. 3500

திருக்கடவூர் அந்தணரும், கடவூர்ப் பெருமானுக்குக் குங்குலியத்தூபம் இடும்பணியை நியமமாகக் கொண்டவரும், நல்குரவானபோதிலும் மங்கிலியம்விற்றுக் குங்குலியத்தூபமிட்டவரும், அதன் பயனைச் சிவபெருமான் அருளிய பொன்னும் மெய்ப்பொருளும் பெற்றவரும், திருப்பனந்தாளில் சிவலிங்கத் திருமேனியின் செம்மை கண்டு கும்பிடக் கழுத்தில் கயிறு பூண்டு நிமிர்த்திய பெருமையரும், தாண்டகச் சதுரரும் காழிப்பிள்ளையாரும் தன் இல்லத்தில் எழுந்தருள உடன் உறையும் பேறு பெற்றவரும், கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவருமாகிய **குங்குலியக் கலய நாயனார்** செய்த திருப்பணியை நினைந்து உலகு வாழ்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் **ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது **கடவூர்க் கலயர் புனற்பந்தர் நிதி** எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 3500 (ரூபாய் மூவாயிரத்தைந்நூறு) 3% வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களாக உள்ளது. (3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946) சர்க்கார் கடன் பத்திரம் நெ. சி ஏ 124606 ரூ. 1000; சி ஏ நெ. 124607 ரூ. 1000; சி ஏ நெ. 124608 ரூ. 1000; சி ஏ நெ. 119833 ரூ. 500 ஆக ரூபாய் 3500. இதனை ஏற்படுத்தியவர்களும் அவர்க்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களும் இத்தருமத்தைப் பரிபாலனம் செய்வர்.

3. மேற்குறித்த மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு திருப்பனந்தாள்-ஆடுதுறைப் பாதையில் மணிக்குடியில், ஆண்டுதோறும் வட்டி வருமானத்துக்கு ஏற்பத் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாபிதாவின்படி ஒவ்வொரு வருஷமும் பங்குனி உத்தரமுதல் வைகாசி விசாகம் முடிய இப் புனற்பந்தர் தருமம் நடத்தப்பெறும்.

4. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது.

5. இம்மூலதனமும், இதன்கண் குறித்த தருமத்திற்குச் செலவு செய்ததுபோக எஞ்சிய தொகையும், இந்நிதியை ஏற்படுத்தியவர்கள் பேரிலும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கள் பேரிலும் இருக்கும்.

திருப்பனந்தாள்
8—3—1952. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 10-3-52 as No. 21 of 1952 Book No. 4, Volume No. 44, pages 108—109.

## 101

## Sri Masilamani Desika Gnanasambanda Swamigal Memorial Feeding Charity at Benares Endowment Rs. 5000

1. This endowment is founded by His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Kasimutt, Tirupanandal in revered memory of the illustrious preceptor Sri Masilamani Desika Gnanasambanda Swamigal who was the fourth in succession to Sri Gurugnanasambanda Swamigal the famous founder of the Dharmapuram Adhinam and who was the preceptor of our Saint Athi Kumaragurupara Swamigal. The object of the endowment is to conduct feeding charity at Benares throughout the month of Kumbam (Masi) every year i. e. from 13th February to 13th March.

2. This endowment consists of Government Promissory Note No. C A 125521 for Rs. 5000 invested in 3% Conversion Loan of 1946. The administration of the endowment shall vest in the Donor and his Successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for the special feeding of Brahmins and Maheswara Pooja (Saivite feeding) in addition to the usual daily feeding in our choultry, at Benares.

4. The feeding shall by conducted in accordance with the Thitta Japtha prepared at the time each year, which will depend upon the amount of interest realised and the price of commodities then current.

5. This endowment shall not be diverted to any purpose other than the one mentioned above.

Tirupanandal,
Dated : 13-3-1952. } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office as No. 22 of 1952, Book No. 4, Volume No. 44, pages 110-111, dated 13—3—1952.

## 102

## Tiruvalluvar Memorial Prize Endowment At The University Of Travancore Endowed Capital Rs. 5000

This endowment is founded by **His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Avergal** of Tirupanandal in green memory of Tiruvalluvar, the Socrates of South India, and with the intention of encouraging the study and spread of his Tirukkural in Tamil-the great gospel of Ahimsa in all its details-a treasure of learning and wisdom-a unique literary work in as much as the whole realm of knowledge of the ancients is traversed by 1330 aphorisms, each couplet being sweet to the mind and the ear, delicious to the tongue, never tedious but always attractive and pleasing-the greatest master piece of literary brevity, a condensed expression of the best

and noblest thoughts and experiences of all great men in the Oriental World and the Holy Bible of the Tamils rendered into almost every important European language. This Endowment shall be styled as "Tiruvalluvar Memorial Prize endowment at the University of Travancore"

2. This endowment consists of Government Securities of the face value of Rs. 5000 fetching interest at 3% per annum. The administration of the fund shall vest in the University of Travancore. It shall be at the discretion of the University to reinvest it in highest interest yielding Government Securities from time to time.

3. Out of the annual interest accruing on the capital a sum of Rs. 110 shall be set apart for awarding two cash prizes of Rs. 60 (Rs. Sixty) and Rs. 50 (Rs. Fifty) for the two best candidates that compete for the prizes and the balance shall be utilised for conducting the competitive examination each year and incidental expenses.

4. (*a*) The students studying in the III and IV year University Classes of the University of Travancore shall be eligible to compete for the prizes irrespective of Sex, Caste, Creed or Religion.

(*b*) The prizes shall be awarded every year on the results of a competitive examination oral or written or both, in Tamil on the Arathupal (Chap. 1–38) of the Tirukkural of Tiruvalluvar with Parimelazhagar's commentary, conducted at a place or places fixed by the Vice Chancellor of the Travancore University according to the number of candidates applying for the competition from various colleges affiliated to the University of Travancore.

(*c*) The applications for the competition shall be received in the month of July each year by the University

and the competitive examination shall be conducted by the Professor of Tamil of the University of Travancore ordinarily in the month of December, each year.

(*d*) The first prize of Rs. 60 (Rs. Sixty) shall be awarded to the pupil who secures the highest number of marks and the second prize of Rs. 50 (Rs. Fifty) to the pupil who secures the next highest number of marks in the said competitive examination. The prize amounts shall be remitted to the pupils by M. O.

(*e*) No T. A. or D. A. or H. A. etc. shall be paid to the pupils competing for the prize even if the place of the test should be different from the place from which the pupils compete.

5. The prize winner of one year shall not be eligible to compete for the prize in the succeeding year or years.

6. The amount spent for conducting the competitive examination shall on no account exceed the balance left after awarding the prize amounts each year.

7. The names of the recepients of the prizes, the amount of prize awarded together with the amount spent for conducting the competition, and the balance if any shall be communicated to the Donor and his Successors-in-interest every year.

8. This fund shall not be diverted to any purpose other than that for which it is intended under this scheme.

9. If in any year or series of years the prizes be not awarded, the amount of interest thus unspent shall be added to the corpus of the fund. If the interest received accumulates to a sufficient sum by the above process, it shall be within the discretion of the Vice Chancellor to suitably

increase the number or amount of the prizes and inform the Donor of what he has done.

*Sd. Kasivasi Arulnandi Tambiran*

---

*Note* :—The above endowment has been accepted by the university of Travancore at the Senate meeting held on 7—3—1952.

## 103

## ஸ்ரீ காசியில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு முதற்பொருள் ரூ. 5000

கமலை எனப்பெற்ற திருவாரூரில் திருவவதாரஞ் செய்த வரும், திருவாரூரில் எம்பெருமான் நடனத்தின்போது படுதண்டு முறிய அப்படுதண்டு கூடுமாறு பாடியும்-திருமறைக்காட்டில் ஓர்தணனது குட்டநோய் நீரச்செய்தும்-மதுரையில் ஓரந்த ணன் இழந்த பார்வையை இறைவனே வேண்டிப் பெறச்செய் தும்-திருக்கானப்பேர் எனும் காளையார் கோயிலில் அமணர்கள் இடுக்குற மழை பெய்யச்செய்தும்-ஸ்ரீ காசியில் அராத்தீண்டிய மன்னனது மகனேயுயிர்ப்பித்தும்-அம்மன்னனது வேண்டுகோட் படி வற்கடன்நீர மழைபொழிவித்தும்-இன்னோரன்ன அற்புதங் கள் பல செய்தவரும், தருமபுரவாதீன முதற் குரவர் ஆகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகமூர்த்திகளுக்கு ஞானகுருவாய்த் திகழ்ந்து, அவர்களால் பண்டாரக்கலித்துறை, சிவபோகசாரம் எனும் நூல்களில் துதிக்கப்பெற்றவரும், அனுட்டான அகவல், சிவானந்தபோதம், அத்துவாக்கட்டளை முதலான நூல்களி யாத்தவரும், 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரும், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கிப் பல சிடர் களுக்குத் தென்கமலைவாழ் சித்திதருநாதனெனு அருள் புரிந்தவரு மாகிய கமலை ஞானப்பிரகாச தேசிக மூர்த்திகளை நினைந்து உய்யும் வண்ணம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது "ஸ்ரீ காசியில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு" எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபாய் ஐயா யிரம்) பெறுமானமுள்ள 3 சதவீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார்

கடன் பத்திரமாக உள்ளது. (3% கன்வெர்ஷன்லோன் ஆப் 1946 நெ. சி ஏ 125543). இந்நிதியை ஏற்படுத்தியவர்களும் அவர்கட்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களும் இந்நிதியைப் பரிபாலனம் செய்வர்.

3. இம்முதற் பொருளினின்று வரும் வட்டித் தொகையைக்கொண்டு காசியில் நமது கட்டிடத்தில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனித் திங்கள் 1-ந் தேதிமுதல் 30-ந் தேதிமுடிய பிராமண போசனம், மகேசுவர பூசை (சைவர்களுக்கு அன்னமளிப்பு) முதலியன செய்யப் பயன்படுத்தப்பெறும்.

4. அந்தந்த ஆண்டு வட்டி வருமானத்திற்குத் தகுந்தவாறும், கால விலைக்கு ஏற்றவாறும் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாபிதாவின்படிக்கு மகேசுவர பூசை முதலியன நடத்தப்பெறும்.

5. இத்தருமம் வேறு எதற்கும் பயன்படுத்தப்பெறமாட்டாது. மூலதனம் அரசினரால் திரும்ப அளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே திரும்பவும் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள்
9—4—1952. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office as No. 28 of 1952 Book No. 4. Volume No. 44. Pages 121 to 123 dated 14-4-1952.

## 104

## திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப்பக நிதி ரூ. 5000

திருச்செந்தூர் சைவ வேளாளர் ஐக்கிய சங்கம்—ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நூல் நிலைய நிதி ரூ. 5000.

1952-ம் (ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்திரண்டு) வருஷம், சூலை மாசம், 29 இருபத்தொன்பதாம் தெய்திக்கு

1127-ம் ஆண்டு, ஆடி மாசம், 14 பதினான்காம் தெய்தி, திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலூகா திருச்செந்தூர் சந்நிதித் தெருவில் 41252 நம்பர் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருச்செந்தூர் சைவ வேளாளர் ஐக்கிய சங்கத்திற்காக மடி சங்கத்தின் காரியதரிசி திருச்செந்தூர் மேல வீதியிலிருக்கும் ராமசுவாமி பிள்ளை அவர்கள் குமாரர், வேளாளர், வியாபாரம், ரா. ம. சேதுப்பிள்ளை பிறப்பித்த டிரஸ்டுப்பத்திரம். இந்த நிதி திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** ஏற்படுத்தப்பெற்றது.

2. இதற்குரிய மூல நிதி ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்) 3½ சதவிகிதம் வட்டி தரக்கூடிய பத்தாண்டுக் கருவூலச் சேமவைப் புத்தான்களில் (டிரஷரி சேவிங்க்ஸ் சர்டிபிகேட்) முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. சர்டிபிகேட் நம்பர் M S 004907.

3. மூலதனத்திலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகை, கன்னிமுதல் காசிவரை தண்டமிழ் பரப்பிய முனிவர் பெருமான் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருவுருவச்சிலை ஸ்தாபிக்கப்பெற்றுள்ள திருச்செந்தூர் சைவ வேளாளர் ஐக்கிய சங்க மண்டபத்திலுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நூல் நிலையத்திற்கு நூல்கள் வாங்கப் பயன்படுத்தப்பெறும்.

4. இந்த நிதி திருச்செந்தூர் சைவ வேளாளர் ஐக்கிய சங்கத்தின் பரிபாலனத்தில் இருக்கும்.

5. மூல நிதியினின்று வட்டி கிடைத்த ஓராண்டுக்குள் (அதாவது வட்டி கிடைத்த தேதியிலிருந்து 365 அல்லது 366 நாட்களுக்குள்) சமய, சரித்திர, இலக்கிய, இலக்கண சுகாதார நூல்கள் வாங்கிவைத்த விபரம் அல்லது கீழே 6-வது பாராவில் கண்டபடி ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்திற்குத் தொகை அனுப்பப்பெற்ற விபரம், இந்நிதியை ஸ்தாபித்தவர்களுக்கும் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

6. எந்த ஆண்டிலாவது எக்காரணத்திலாவது மேற்கண்ட வாறு வட்டித் தொகை மிடைத்த ஓராண்டுக்குள் நூல் நிலையத் திற்கு நூல்கள் வாங்கிச் சேர்ப்பிக்கத் தவறினாலும், நூல்கள் வாங்கித் தொகை எஞ்சியிருந்தாலும் அவ்வட்டித் தொகை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரன் சங்கத்தைச் சாரும். அவ்விதம் மிடைத்த தொகையை ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துக்கு நூல்கள் வாங்கப் பயன்படுத்த வேண்டியது. அவ்விதம் பயன்படுத்திய விவரம் இந்நிதி ஸ்தாபகருக்கும் பின்வரும் உரிமையுள்ளவர்களுக் கும் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்தார் தெரிவித்துக்கொள்ளவேண் டியது.

7. மேலே 5-வது பாராவில் கண்டபடி புத்தகங்கள் வாங்கப்பட்ட கணக்குப் பிரதி யொன்று ஆண்டுதோறும் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்திற்கும் அனுப்பப் பெறல் வேண்டும்.

8. மூலதனத்தை சர்க்கார் திரும்ப அளிப்பின் மீண்டும் அதிக வட்டி தரக்கூடியது அல்லது அதே வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே முதலீடு செய்யவேண்டும்.

9. இந்த நிதியை மேலே கண்ட தருமத்திற்கே பயன் படுத்தவேண்டும்.

**ரா. ம. சேதுப்பிள்ளை,**
திருச்செந்தூர் சைவ வேளாளர் ஐக்கிய
சங்கக் காரியதரிசி.

---

Registered at Tiruchendore Sub-Registrar's Office as No. 50 of 1952 in Book 4, Volume 56 pages 189-191 on 30—7—1952.

## 105

## Saint Appar Memorial Feeding Charity at Banaras
## Endowment Rs. 7,000

**This endowment is founded by His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Kasi Mutt,**

**Tirupanandal,** to perpetuate the memory of **Saint Appar** (Sri Thirunavukarasu Nayanar) one of the Four Saiva Samaya Acharyas and thereby inspire divine spirit in human beings and mould them into good citizens. Saint Appar graced the world with his soul stirring devotional songs in praise of **Lord Siva**, travelled throughout India from Cape Comorin to mount Kailas and toiled for the uplift of humanity exhibiting miracles such as :—

(1) coming out of the sea using as a float the stone boulder to which he was tied and drowned,

(2) bringing back to life the eldest son of Appoothi Adigal at Thingaloor and such other miracles

and who had a vision of the **Lord** as on Mount Kailas at Tiruvaiyaru and who attained the Lotus feet of **Lord Siva** at Tiruppugalur on Chittirai Sathayam day after singing 49,000 Hymns in His praise.

This endowment shall be styled as "**Saint Appar Memorial Feeding Charity at Banaras.**" The object of the endowment is to conduct feeding charity in our choultry at Banaras throughout the month of Mesham (Chittirai) every year i. e. from about 14th April to 14th May in memory of the great **Saint Appar**.

2. This endowment shall consist of Government Promisory Notes for Rs. 7,000 (Rupees seven thousands only) C A No. 126411 for Rs. 5,000; C A 124854 for Rs. 1000; C A 124854 for Rs. 1000 invested in 3% Conversion Loan of 1946. The administration of the Fund shall vest in the Donor and his successors-in-interest.

3 The annual interest accruing on the capital shall be utilised for the special feeding of Brahmins and Maheswara-pooja (Saivite Feeding) in the month of Chittirai in addition to the usual daily feeding.

4. The feeding shall be conducted in accordance with the Thittajaptha prepared at the time each year, which will depend upon the amount of interest realised and the prices of commodities then current.

5. This endowment shall not be diverted to any purpose other than the one mentioned above.

Tirupanandal }
25—6—1952. } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

This deed has been registered in the Sub Registrar's Office, Tiruvidamarudur, on 27—6—1952 as document No. 57 of 1952, Book No. 4, Vol. 44, pages 161—162.

## 106

## Sri Kumaragurupara Swamigal High School at Aduthurai Endowment Rs. 15,000 (Total Amount Donated Rs. 35,000)

1. This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Tirupanandal, in respectful and sacred memory of the illustrious Saint Sri Kumaragurupara Swamigal who spread Tamil culture from Cape Comorin to Himalayas in the 17th Century.

2. This endowment shall consist of (Rs. 15,000) Rs. Fifteen thousand only. The administration of the fund shall vest in the Sri Kumaragurupara Swamigal High School Managing Committee, Aduthurai.

3. This endowment is made subject to the conditions detailed hereunder :—

(*a*) The name of the High School shall be Sri Kumaragurupara Swamigal High School and (*b*) the Principal of

Sri Kasivasi Swaminatha Swamigal Sentamil Kalloori, Tirupanandal shall be an ex-officio member of the Managing Committee of the School "SRI KUMARAGURUPARA SWAMIGAL HIGH SCHOOL, ADUTHURAI."

4. (*a*) If at any time either of the two conditions detailed in paragraph 3 supra is not fulfilled, the interest accruing from the endowed amount shall be sent to the Managing Trustee of the SRI KUMARAGURUPARA SWAMIGAL'S MUTT AT SRIVAIKUNTAM.

(*b*) If at any time the donor or his successors-in-interest withdraw the membership of the Principal of Sri Kasivasi Swaminatha Swamigal Sentamil Kalloori, Tirupanandal or the Principal himself tendering resignation of the membership of his own accord, the conditions laid down in paragraph 3 (b) and 4 (a) supra shall not be liable to be enforced.

5. On receipt of the interest referred to in para 4 above the Managing Trustee of Sri Kumaragurupara Swamigal's Mutt at Srivaikuntam shall be at liberty to utilise the amount for awarding scholarships to pupils studying in Sri Kumaragurupara Swamigal's High School at Srivaikuntam.

Note: The conditions of the endowment were accepted by the School Committee in its resolution dated 17-8-1952 and the receipt of the amount was acknowledged by the President of the School Committee in his letter dated 20—8—1952 and Receipt No. 554 dated 19—8—1952 for Rs. 15,000.

Tirupanandal,
21—8—52. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 24-8-52 as No. 71 of 1952 of Book No. 4 Volume No. 44 pages 188 to 191.

## 107

## செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி
## நிலப்பெறுமானம் ரூ. 50,000

செந்திப் பதிபுரக்கும் செவ்வேள் சந்ததமும் பல்கோடி சன்மப் பகையும் செய்வினையும் பல்பிணியும் போக்கித் தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தந்து ஆட்கொள்ளும் கருணையைப் போற்றி உலகு உய்யும் பொருட்டுத் **திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** நிறுவப்பெற்றது. இது **''செந்திலாண்டவன் திருவருள் பாலிப்புநிதி''** எனப்பெறும்.

2. இதனோடு இணைத்துள்ள 'ஏ' ஷெட்யூலில் விவரித்துள்ள திருப்பனந்தாள் கிராமத்தில் நமக்குச் சொந்தமான நம் பேரில் பட்டா மிராசுடன் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்துவருகிற கும்பங்கொல்லை ஏக்கர் ஒன்று சென்ட் 16ம் அதிலுள்ள தென்னை மரங்களும், 'பி' ஷெட்யூலில் விவரித்துள்ள திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுக்கா ஆயிரக்கலவன் கிராமத்தில் நமக்குச் சொந்தமாய் நம் பேரில் பட்டா மிராசுடனும் சர்வ சுதந்திரத்துடனும் ஆண்டு அனுபவித்து வருகின்ற புன்செய், மனைக்கட்டு, மரந்தலை வகையறு 275 ஏக்கர், 78 சென்ட் நிலபுலங்களும், ஷெட்யூல் 'சி'யில் கண்ட வேம்புகுடி வட்டம் வேம்புகுடி கிராமத்தில் புன்செய் ஏக்கர் 6, சென்ட் 26ம் ஆகிய ஏக்கர் 283, சென்ட் 20 விருந்து ஆண்டு வருமானத்தில் (Gross Income) சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்தி, கிராம நிர்வாக சிப்பந்திச் செலவு, நிலபுல விருத்தியாம்சச் செலவு முதலிய இன்றியமையாச் செலவினங்கள் செய்தபிறகு எஞ்சும் நிகர வருமானத் தொகை (Net Income) 1. ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பரிசு அளிக்கவும், 2. ஷி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவர்க்குக் காசி யாத்திரை யுதவி செய்யவும், 3. தஞ்சை செங்கிப்பட்டியிலுள்ள மகாத்மா காந்தி நினைவு சானடோரியத்தில் நம்மால் நன்கொடை அளித்து நிறுவப்

பெற்றுள்ள சொந்திலாண்டவன் வார்டில் சிகிச்சை பெறுபவர்க்கு இலவசமாக அன்னம் பாலிக்கவும் பயன்படுத்தப்பெறும்.

3. ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மாணவர்க்குப் பரிசுகள் அளிப்பதற்குரிய கட்டுப்பாடு களாவன :—

அ. ஆண்டுதோறும் ரூ. 150 (ரூபாய் நூற்றைம்பது) பரிசளித்தற்கு ஒதுக்கப்பெறும். இத்தொகை டெ. உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாக் காலத்தில் அவ்வுயர்நிலைப்பள்ளி நிர்வாகக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பெறும்.

ஆ. இத் தொகையைக்கொண்டு, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளியில் IV முதல் VI பாரங்களில் ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்று எல்லாப் பாடங்களிலும் சேர்த்து முதல் எண் பெற்ற மாணவர்களுக்குச் சாதி, மதம், ஆண், பெண் வேறுபாடின்றிப் பரிசுகள் அளிக்கப்பெறும்.

இ. பரிசு பெறுதற்குரிய மாணவர் ஆடுதுறை ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளியிலேயே பரிசுபெறும் காலத்தில் படிப்பவராக இருக்கவேண்டும். இன்றேல் அடுத்த எண் பெற்ற மாணவரே டெ முறையில் இப் பரிசுக்குரியவர் ஆவர். (குறிப்பு VI-பாரத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்க்கு இவ்விதி மட்டும் விலக்கு.)

ஈ. பரிசுக்குரியவர் கந்தர் கலிவெண்பாவை மனப்பாட மாக ஒப்பிக்கவேண்டும். ஒப்பிக்காவிடில் கந்தர் கலிவெண் பாவை ஒப்பித்த, அடுத்த எண் பெற்ற மாணவர்களுக்கு இப் பரிசுகள் வழங்கப்பெறும்.

உ. பரிசுக்குரியவர் இன்னார் என்பதைக் கந்தர் கலி வெண்பா மனப்பாடத் தேர்வு நடத்துவதற்கு ஒரு திங்கள் (Month) முன்னதாகவே அம் மாணவர்கட்கு அறிவித்தலும் அம் மனப்பாடத் தேர்வினை நடத்துதலும் ஆடுதுறை ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிர்வாகக் குழுத் தலைவ ருடைய பொறுப்பாகும்.

ஊ. வகுப்பு (Form) ஒன்றுக்கு ஒரு பரிசு வீதம் மூன்று பரிசுகள் அளிக்கலாம். பரிசுகள் தங்கப் பதக்கங்களாகவோ, வெள்ளிக் கோப்பைகளாகவோ, நூல்களாகவோ, பணமாகவோ இருக்கலாம். அவ்வுயர்நிலைப் பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் தீர்ப்பே முடிவானது.

எ. பரிசுகள் அளித்த பிறகு பரிசளித்த முழு விபரங்களையும், இத்தொகைக்குரிய வரவு செலவுக் கணக்கையும், ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் இந்த அறத்தை நிறுவியவர்களுக்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் அனுப்பி வரவேண்டும்.

ஏ. எந்த ஆண்டிலாவது பரிசுகள் அளிக்கப்பெறுவிடில் அத்தொகை முழுதும் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்க்குப் பரிசளிக்க அனுப்பப்பெறும்.

4. ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணிபுரியும் ஆசிரியர்க்குக் காசி யாத்திரை உதவி செய்யக் கட்டுப்பாடுகளாவன :—

அ. ஆண்டுதோறும் ஒரு ஆசிரியர்க்குக் காசி யாத்திரை செய்ய ரூ. 150 (ரூபாய் நூற்றைம்பது) அளிக்கப்பெறும். ஒருமுறை உதவி பெற்றவர் அடுத்த 12 ஆண்டுகள் வரை இவ்வுதவி பெறற்குரியவர் அல்லர்.

ஆ. இவ்வுதவி பெறுபவர் ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளியில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்திருக்க வேண்டும். குறிப்பு :- ஆசிரியர் என்பது ஓவியம், உடற்பயிற்சி, தமிழ், இந்தி முதலியன கற்பிக்கும் ஆசிரியர்களையும், எல். டி. செகண்டரிகிரேட் முதலிய எல்லாத் தரமுடைய ஆசிரியர்களையும் குறிக்கும்.

இ. இவ்வுதவிபெறும் ஆசிரியர், கந்தர்கலிவெண்பாவை மனப்பாடமாக அறிந்தவராய் இருத்தல் வேண்டும்.

ஈ. தம் கல்விக் கூடத்து முன்னேற்றத்தின் பொருட்டு ஆக்கவேலை செய்தல், பள்ளிக்கூடத்துப் பொதுநலத் தொண்டில் சிறப்பாகப் பங்குகொள்ளுதல், கல்வி சொல்லவல்ல நல்லித்தை யிற் சிறந்திருத்தல், பொறையுடைமை, நடுவுநிலைமை, மாணவர் போற்றும் மாண்புடைமை, நற்றமிழில் சொல்வன்மை, தெய்வ பக்தி, இறைபணி நிற்றல் இன்னோரன்ன நற்பண்பு பொருந்திய ஆசிரியரே இவ்வுதவி பெறுதற்குரியவர் ஆவர்.

உ. இவ்வுதவி பெறத் தகுதி பெற்றவர் ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் வழியாக விண்ணப்பித்து அவருடைய ஒப்புதல் பெறின் உதவித் தொகை முழுதும் அந்நிர்வாகக் குழுத் தலைவர் வழியாக அளிக்கப்பெறும். உதவித்தொகை பெற்ற ஒரு திங்களுக்குள் காசி யாத்திரை முடிக்கவேண்டும். இன்றேல் அத்தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

ஊ. மேற்குறித்தவர் ஸ்ரீகாசியைத் தரிசித்துத் திரும்புங் கால் பிரயாகையில் கங்கை நீராடித் தம்மால் எடுத்துக்கொண்டு வரக்கூடிய அளவு கங்கா தீர்த்தத்தைக் கொணர்தல் வேண்டும். அக் கங்கைப் புனிதப் புனலைத் திருப்புள்ளிருக்கு வேளூரில் (வைதீச்சுவரன் கோயிலில்) செல்வமுத்துக்குமார சுவாமிக்கு ஒரு திருத்திகை நாளில் அபிஷேகம் செய்வித்துப் புள்ளிருக்கு வேளூர் தேவஸ்தான பரிபாலனத் தலைவர் அவர்களிடம் அத் தாட்சி பெற்று இத்தருமத்தை நிறுவியவர்களுக்கும் அவர் களுக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்கட்கும் அனுப்பிக்கொள்ள வேண்டும்.

எ. எந்த ஆண்டிலேனும் காசியாத்திரை செய்யாவிடில் அத்தொகையும், உதவித் தொகை பெற்றவர் மேல் 'உ'-பிரிவில் குறித்த கால எல்லைக்குள் காசி யாத்திரை செய்யாமையால் திருப்பிய தொகையும், அவ்வவ் வாண்டுகளில் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தில் ஒரு நன்னாளில் ஏழை களுக்கு அன்னமளித்தற்பொருட்டு அம் மடத்து மானேஜிங் டிரஸ்டி அவர்களுக்கு அனுப்பப்பெறும்.

5. (a) மேல் 3, 4 பாராக்களில் விவரித்துள்ள இரண்டு தருமங்களுக்குரிய தொகையை ஒதுக்கிய பிறகு எஞ்சியுள்ள நிகர வருமானத் தொகை (Net Income) முழுதும் தஞ்சை ஜில்லா செங்கிப்பட்டியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு சானடோரியத்தில் நம்மால் நன்கொடையளித்து நிறுவப்பெற்றுள்ள ஸ்ரீ செந்திலாண்டவன் வார்டில் சிகிச்சை பெறுபவர்களுக்கு, ஆண்டுதோறும் அனுப்பப்பெறும் தொகைக் கேற்றவாறு, இலவசமாக அன்னம் பாலிக்கப் பயன்படுத்தப்பெறும். இவ் வுதவித் தொகை மெ. சானடோரியத்தின் நிர்வாகக் குழுவின் தலைவர் (Chairman, Board of Trustees) ஆகிய தஞ்சை ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு ஆண்டுதோறும் ஜூலை மாசம் முதல் தேதி அனுப்பப்பெறும்.

(b) இவ்வுதவித் தொகையைக்கொண்டு ஆண்டுதோறும் மெ. சானடோரியத்தில் செந்திலாண்டவன் வார்டில் இலவசமாக அன்னமளித்த விஷயமும், இத்தொகைக்குரிய வரவு செலவுக் கணக்கும் இத்தருமத்தை நிறுவியவர்களுக்கும் அவர்களுக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் மெ. சானடோரியத்தின் நிர்வாகக் குழுத் தலைவர் அனுப்பிவைக்கவேண்டும்.

6. (1) மேலே விவரித்துள்ள மூவித தருமங்களுக்கெனப் பயன்படுத்தப்பெறும் தொகைகள் நிகர வருமானத்துக்கு ஏற் பக் குறைக்கவும் கூட்டவும் பெறும்.

(2) மேற்கண்ட நிகர வருமானத் தொகை மேற்குறித்த தருமங்களுக்கன்றி இதர வகைகளுக்குப் பயன்படுத்தப்பெற மாட்டாது.

7. இந்த தருமங்கள் நடத்துவதற்கென ஒதுக்கப்பெற் றுள்ள நிலபுலங்களின் உத்தேச மதிப்பு ரூ. 50,000. உத்தேச ஆண்டு வருமானம் (Gross Income) ரூ. 2500. இந்த நிலபுலங்கள் இதுவரை நம்மால் பட்டா மிராசுடன் அனுபவித்து வந்தது போல இனிமேலும் நம்மாலும் நமக்கும் பின்வரும் உரிமையுள்ள வர்களாலும் அனுபவிக்கப்பெற்று இந்த தரும பரிபாலனம் நடத்திவரப்பெறும்.

செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு எங்கும் என்றும் நின்று நிலவுவதாருக.

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office as No. 2377, Book No. 1 Volume No. 1030 pages 64-70 dated 20—10—1952.

## 108

## Sri Kumaragurupara Swamigal Daily Maheswarapooja at Tiruchendur Endowment Rs .12,000

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal for the performance of the daily Maheswara Pooja at Saiva Vellala Aikya Sangam at Tiruchendur where the MarbleImage of Sri Kumaragurupara Swamigal is installed.

2. This endowment consists of the Madras Government's 4% Rs. 5 Crore Loan to the value of Rs. 12,000 (Rs. Twelve thousand only) fetching interest at 4% per annum. Govt. of Madras Promissory Notes No. MS. 019687 for Rs. 5000; MS. 019622 for Rs. 1000; MS. 019623 for Rs. 1000; Ms. 019624 for Rs. 1000; MS. 019625 for Rs. 1000; MS. 019626 for Rs. 1000; MS. 019532 for Rs. 1000; MS. 019533 for Rs. 1000; Total Rs. 12000. The administration of the fund shall vest in the Mananing Committee of Sri Kumaraguruparan Sangam, having its registered office in Masi Street at Srivaikuntam, Tirunelveli District.

3. The interest derived from the endowed capital shall be sent to the President of the Saiva Vellala Aikya Sangam at Tiruchendur in 12 monthly instalments, after deducting the incidental charges thereto, for conducting the Daily Maheswara Pooja at the said Vellala Sangam, Tiruchendur whereat the marble image of Sri Kumaragurupara Swamigal is installed. The amount will depend on the interest received on the capital.

4. At the end of each month the President of the Saiva Vellala Aikya Sangam, Tiruchendur, shall send a report to the President, Sri Kumaraguruparan Sangam, Srivaikuntam, about the regular performance of the Daily Maheswara Pooja.

5. If the President, in consultation with the Managing Committee of Kumaraguruparan Sangam, Srivaikuntam should be convinced that the Maheswara Pooja has not been properly conducted, the President of the Kumaraguruparan Sangam, Srivaikuntam, shall have powers to withhold payment and make some other arrangements for conducting the daily Maheswara Pooja at Tiruchendur and shall report the fact to the Donor or Successors-in-interest.

6. The President of Kumaraguruparan Sangam, Srivaikuntam shall send every year to the Donor and his successors-in-interest a copy of the receipts and expenditure pertaining to this fund.

7. The endowed capital shall not be diverted to any purpose otherwise than as stated above.

8—11—1952 *(Sd. Kasivai Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 11-11-1952 as No. 86 of 1952 of Book 4, Volume 44, pages 214-215.

## 109

## ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறிவிளக்கப் பரிசு திருச்செந்தூர்—ஸ்ரீவைகுண்டம் முதற்பொருள் ரூ. 7000

*செந்திலாண்டவன் திருவருளால் ஸ்ரீவைகுண்டத்தில் கைலாசபுரத்தில் திருவவதாரம் செய்து ஐந்து வயதிலேயே பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்கப்பெற்றுக் கந்தர் கலிவெண்பாப்*

பாடியும், மதுரையில் கலம்பகமும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் பாடியும், 1623-1659-ல் தமிழ் நாட்டில் ஆட்சிபுரிந்து 1626ல் திருச்சிராப்பள்ளியினின்று மதுரைக்குத் தலைநகரை மாற்றியமைத்து அரசு செலுத்திய திருமலை நாயக்கர் வேண்டு கோளினால் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றி ஸ்ரீ மீனாட்சியம்மையாரால் முத்தாரம் அணியப்பெற்றும், அந் நாயக்க மன்னர் வேண்டுகோட்படி திருக்குறட் சாரமாகிய நீதி நெறி விளக்கம் எனும் நூலியருளியும், திருவாரூரில் நான்மணி மாலை பாடியும், தருமையம்பதியில் ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்பால் திருப்பெருகு சிவஞானம் பெற் றுப் பண்டார மும்மணிக்கோவை பகர்ந்தும், புள்ளிருக்கு வேளூரில் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழும், சிதம்பரத்தில் மும்மணிக்கோவையும், சிதம்பர செய்யுட்கோவையும் யாத்தும் ஸ்ரீ காசிக்கெழுந்தருளிச் சகலகலாவல்லிமாலை பாடி, இந்துஸ் தானி மொழி கைவரப்பெற்று, முகலாய மன்னனைச் சிங்கத்தின் மீதேறிச் சென்று, தம் இனியிலாச் சொல் வன்மையாலும் நடையழகுப் பெருந்துறவாலும் அவனை வணக்கிச் செயற்கரிய செயல் பல புரிந்து, இடம்பெற்றுக் கேதாரத்துறை, கேதார மந்திரம், அறச்சாலை இவை யிற்றை நிறுவியும், ஆங்குக் காசிக் கலம்பகம் முதலிய பிரபந்தங்களைப் பாடியும், வெள்ளியம்பல வாண முனிவர் முதலிய அரிய புலவர்களுக்கு ஆசானுகத் திகழ்ந்தும், குமரிமுதல் காசிவரையில் தண்டமிழைப் பரப்பி பருளிய மெய்ஞ்ஞானப் புலவர் ஆகிய **ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமி கள் அவர்களை** நினைவுகூர்தற் பொருட்டும், நீதிநெறி விளக்கத்தில் வகுக்கப்பெற்றுள்ள அறநெறியை மாணவர் கடைப்பிடித் தொழுகி உய்தற் பொருட்டும் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ **காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இப்பரிசு நிறுவப்பெற்றது. இது **ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு** எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 7000 (ரூபாய் ஏழா பிரம்.) இத்தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் 100க்கு ரூபாய் 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. **3% Conversion Loan of 1946 CA No. 129829 for Rs. 2000,**

**CA No. 127371 for Rs. 5000.** ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுரு பரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் இந்நிதியைப் பரிபாலனம் செய்வர்.

3. இம்முதற்பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 210. இவ்வட்டித் தொகையினின்று (அ) ஸ்ரீவை குண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, (ஆ) ஸ்ரீவைகுண்டம் குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர் நிலைப்பள்ளி, (இ) திருச்செந்தூர் போர்டு உயர்நிலைப்பள்ளி ஆகிய இம்மூன்று கல்விக்கூடங்களிலும் (ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் ரூ. 55 வீதம்) மொத்தம் ரூ. 165 (ரூபாய் நூற்றறுபத்தைந்து) பரிசுகளாக அளிக்கவும், ஒவ்வொரு உயர் நிலைப் பள்ளியிலும் பரிசுத் தேர்வு நடத்துதல் பரிசு அளிப்பு முதலியவற்றுக்குரிய செலவுக்கெனத் தேவையிருப்பின் ரூ. 10 வீதம் இம்மூன்று உயர்நிலைப் பள்ளிகளிலும் சேர்ந்து ரூ. 30ம் ஆண்டுதோறும் செலவு செய்யப்பெறும். எஞ்சிய வட்டித் தொகை இந்நிதியைப் பரிபாலனஞ் செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவுகளுக்குப் பயன்படுத்தப்பெறும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

க. மேல் 3-வது பாராவில் குறித்துள்ள மூன்று உயர் நிலைப்பள்ளிகளிலும் 5, 6 பாரங்களில் படிக்கும் மாணவர்க்கு ஆண், பெண், சாதி, மத, குல வேறுபாடின்றிப் பரிசுகள் வழங் கப்பெறும்.

ங. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த நீதிநெறி விளக்கம் எனும் நூலில் 51 வெண்பாக்களை மனப்பாடஞ் செய்தல் வேண்டும்.

ச. ஆங்கில ஆண்டில் ஒற்றைப்படை எண்ணுள்ள ஆண்டில் நீதிநெறி விளக்கத்தில் ஒற்றைப்படை எண் உள்ள பாடல்களும், ஆங்கில ஆண்டில் இரட்டைப்படை எண் உள்ள ஆண்டில் இரட்டைப்படை எண் உள்ள பாடல்களும் இப்பரிசுப் போட் டிக்குப் பாடமாகும்.

ஞ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு; 50 கூறுகள்; இரண்டு மணிநேரம்; நீதிநெறி

விளக்கத்தில் போட்டிக்கென்று அமைக்கப்பெற்ற 51 பாடல் களிற் கண்ட பொருளோப்பற்றியும் சொற்சுவை பொருட்சுவை குறித்தும் வினவப்பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு: 50 கூறுகள்; அந்த 51 பாடல்களில் தேர்வுக்குழுவினர் கேட்கும் எல்லாவற்றையும் மனப் பாடமாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்கவேண்டும்.

ட. இப்பரிசுத் தேர்வுகளை நடத்தப் பிற்குறித்தவாறு தேர்வுக்குழு அமைக்கப்பெறும்.

ஸ்ரீவைகுண்டம்—போட்டியிடும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களும், ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவரும், ஸ்ரீவைகுண்டம் பஞ்சாயத்துப் போர்டு தலைவரும் தேர்வுக் குழுவினர் ஆவர்.

திருச்செந்தூர்—போட்டியிடும் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியரும், திருச்செந்தூர் பஞ்சாயத்து போர்டு தலைவரும், ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந் தரத் தலைவரும், திருச்செந்தூர் சைவ வேளாள ஐக்கிய சங்கத் தின் தலைவரும் தேர்வுக் குழுவினர் ஆவர்.

ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவரே மேற்குறித்த இரண்டு தேர்வுக் குழுக்களுக்கும் தலைவர் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவர்.

ண. மேற்குறித்தவாறு நடத்தப் பெறும் இரு தேர்வுகளி லும் சேர்ந்து பெறும் கூறுகளில் முதற்கூறு பெற்றவர்க்கு ரூபா 30-ம் (முப்பதும்), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு ரூபா 25-ம் (ரூபா இருபத்தைந்தும்) ஆகப் பரிசு இரண்டுக்கு ரூபா 55 வீதம் 1. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், 2. ஸ்ரீவை குண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், 3. திருச்செந்தூர் போர்டு உயர்நிலைப்பள்ளியிலும் தனித்தனி ஆண்டுதோறும் அளிக்கப்பெறும்.

த. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்க ளைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர்க்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்

குரிய இரு தேர்வுகளும் போட்டியிடும் அவ்வவ்வுயர்நிலைப் பள்ளிகளிலேயே டிசம்பர்த் திங்களில் தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளில் நடைபெறும்.

8. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறுதற் குரியரல்லர்.

5. பரிசளிப்பு—ஸ்ரீவைகுண்டத்தில் ஏற்படுத்தப் பெற் றுள்ள ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசுகள், ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு ஆகியவை அளிக்கப்பெறும் நாளில் அளிக்கப்பெறும். திருச்செந்தூரில் நம்மால் நிறுவப்பெற்றுள்ள ஸ்ரீ செந்திலாண்டவன் நினைவுத் தேவாரப்பரிசு அளிப்பு நாளில் இப்பரிசுகள் அளிக்கப்பெறும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், பரிசளிப்புக் கூட்டம் நடத்துதல் ஆகிய இவற்றுக்குச் செலவிடப்பெறும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள் ளாகவே இருத்தல் வேண்டும். வட்டி வரவுக் கேற்றவாறு பரிசுத் தொகைகளைக் குறைக்கவும் கூட்டவும் கூடும்.

7. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை, பரிசு பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும் ஸ்ரீவை குண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் இக் கட்டளை நிறுவியவர்களுக்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

8. இத்தருமத்தை வேறு எந்த முறையிலும் பயன்படுத்தக் கூடாது.

9. இம் மூலதனம் திரும்ப அளிக்கப் பெற்றதும் மீண்டும் அதிக வட்டித்தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே முதலீடு செய்யவேண்டும். மூலதனம் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமர குருபரன் சங்கத்தின் பேரிலேயே இருத்தல் வேண்டும்.

திருப்பனந்தாள்
29—12—52

*(Sd) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office as No. 97 of 1952 Book No. 4 Volume 44 pages 228-232 dated 29—12—1952.

## 110

## ஸ்ரீ காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு சேமவைப்பு ரூ. 7000

காஞ்சிபுரத்துச் சிவவேதியரும், குமரகோட்டத்து அருச்சக ராயிருந்த காளத்தியப்ப சிவாசாரியரது தவப்புதல்வரும், தென் மொழி வடமொழிக் கடல்களைக் கரைகண்டுணர்ந்தவரும், நவின்றோர்க்கினிமையும் நன்மொழி புணர்த்தலும் நவையின் மையும் அமையக் கவி பாடலில் வல்ல அருட்புலமையாளரும், 10346 பாடல்களையுடைய அறுமுகமுடையவோர் அமலன் மாக்கதையாகிய கந்தபுராணம் பாடுவதற்குத் "நிகடசக்கர" என்று முருகப் பெருமானால் அடியெடுத்துக் கொடுக்கப் பெற்ற வரும், புலவர் குழாம் மகிழ்ந்து போற்றச் "சகாத்தம் எழு நூற்றின் மேலாய் இலகு கந்தபுராணம்" அரங்கேற்றிய வித்தார கவியுமாகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளை நினைவுகூர்ந்து ஸ்ரீ காசியில், ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் (விருச்சிக மாசத்தில்) ஏழைகளுக்கு அன்னமளித்தற் பொருட்டு, திருபனந் தாள் காசிமடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இந்நிதி நிறுவப்பெற்றது. இது, "காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு" என்று பெயர்பெறும்.

2. இதற்குரிய மூலதனம் ரு. 7000 (ரூபாய் ஏழாயிரம்.) இது ஆண்டொன்றுக்கு ரூ. 100 க்கு ரூ. 3 வீதம் வட்டி தரக் கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களாக உள்ளது. (3% Conversion Loan of 1946 - Nos. CA 129794 - Rs. 2000; CA 128652 Rs. 5,000). இந்நிதி நம் பேரிலும் நமக்குப் பின்வரும் உரிமை யுள்ளவர் பேரிலும் இருந்துவரும்.

3. ஸ்ரீ காசியில் நம்முடைய சத்திரத்தில் நாடொறும் நடைபெற்று வருகின்ற அன்னதானத்துடன் இம் மூலதனத்தி னின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்தில் பிராமண போஜனமும், மாகேசர பூஜையும் (ஏழைகட்கு அன்னம் பாலிப்பும்) நடத்தப் பெற்று வரும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு ஏற்பவும், கால விலைக்கு ஏற்பவும், தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம் பாலிப்பு நடைபெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. நம்மாலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ள வர்களாலும் இத்தருமம் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

திருப்பனந்தாள்
1—1—53

*(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

The above deed has been registered in the Sub-Registrar's Office, Tiruvidamarudur on 2—1—1953, as Document No. 1 of 1953 Book No. 4 Volume No. 44 pages 232-234.

## 111

## Sri Gurugnanasambanda Swamigal Memorial Sivabogasaram Prize at Madras Endowment Rs. 5000

This endowment is founded by His Holiness Sri-la-sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl., Tirupanandal in grateful memory of Sri Gurugnanasambanda Swamigal, an illustrious Saint, Scholar and the famous founder of the Dharmapuram Adhinam in the second half of the 16th Century and to encourage the study of his masterpiece "Siva bogasaram" (Essence of Sivabogam) in which the talented author has expressed his spiritual experiences in simple, elegant, sweet and heartmelting Tamil verses to enlighten and elevate humanity.

2. The capital of the endowment shall be Rs. 5000 which shall be invested in highest interest yielding Government Securities. The fund shall be called "Sri Gurugnanasambanda Swamigal memorial Sivabogasaram Prize."

3. The fund shall be administered by the Principal of the Presidency College, Madras and he shall act in consultation with the head of the Tamil Department of the College.

4. A competitive examination in Sivabogasaram by Sri Gurugnana Sambanda Swamigal shall be held every year. Out of 139 verses of this work in Tamil not less than 60 (Sixty) shall be selected and announced in the mouth of July. The examination (written) shall be conducted in the month of January next by the Head of the Tamil Department in the Presidency College, Madras under the supervision of the Principal of the College. It will be open to all pupils studying in the Colleges within the city of Madras without distinction of sex, caste, creed or religion.

5. Out of the interest accruing on the capital three prizes, in the ratio of 6 : 4 : 3 shall be awarded to the first three best students who come out successful in the competition. If in any year more than one student become entitled to any of the three prizes, lots should be cast and the winner paid the prize. In such cases, the unsuccessful competitor for the first prize will be eligible for the second prize. This will apply to the other two prizes also. The decision of the administrator shall be final in all matters.

6, The three cash prizes shall be awarded to the winners each year on the day when the " Dr. U. V. Swaminatha Iyer memorial Tirukkural Prize " founded by us is awarded in the Presidency College, or on any other date found convenient for the administrator.

7. The balance of interest if any after meeting the expenses connected with the holding of the annual competitive examination shall be added to the corpus of the fund.

8. A prize winner of one year shall not be eligible to compete for the prize in any other year.

9. The administrator shall send every year to the Donor or his Successors-in-interest particulars of the prize awarded with the name of winners and expenses incurred in connection with the endowment.

10. The amount of the fund shall not be diverted to any purpose other than the one intended by the Donor.

11. Whenever found necessary the amount may be withdrawn and reinvested in Government Securities fetching a higher rate of interest.

23—8—1952 (*Sd*) *Kasivasi Arulnandi Tambiran*

---

The endowment has been accepted by the Government of Madras, Education Department in their Memo No. 36710/G/52-4 Education dated 6—11—1952.

The receipt of cheque for Rs. 5000 and of another for Rs. 100 was acknowledged by the Treasurer, Charitable Endowments Madras in his letters T. C. E. No. 624 dated 26—11—52 and T. C. E. No. 719 dated 26—12—52 respectively.

## 112

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகப் பரிசு, தஞ்சாவூர்
## சேமவைப்பு ரூ. 5000

திருவாதவூர்ச் சிவபாத்தியரும், பாண்டி நாட்டில் 775-825ல் ஆண்ட அரிமர்த்தனன் எனும் முதலாம் வரகுண பாண்டியருக்கு முதல் அமைச்சராகித் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம் ஏற்றவரும், திருப்பெருந்துறையிற் செழு மலர்க் குருந்தமேவிய சிவபெருமானின் அருள்பெற்று மாணிக்க வாசகர் எனும் திட்சாநாமம் பெற்றவரும், ஆவணி மூலத்தில் - நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்தமை - மண் சுமந்து கூலிகொண்டு அக் கோவால் மொத்துண்டு பரகதி பாண்டியர்க் கருளியமை ஆகிய பல திருவிளையாடல்கள் பாடும் பணிதான் கூடும்பொருட்டு இறைவனுல் செயப்பெற்ற

வரும், 'நலமலி தில்லையுள் கோலமார்தரு பொதுவினில் வருக' என இறைவன் ஏவ அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை யம்பலத்தே கண்டவரும், ஈழ மன்னனது மாமைப் பெண்ணைப் பேசுவித்துப் பௌத்தர்களை வாதில் வென்றவரும், பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து நறுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது ஆகிய திருவாசகம் முழுமையும் சிவபெருமான் திருக் கரத்தால் எழுதப்பெற்ற பெருமையுடையவரும், பாவை பாடிய வாயால் கோவை பாடியவரும், 'பாவினைப் பாடுவது உன் பாட்டே' என்று புகழப்பட்டவரும்,' அறிவாற் சிவனே' எனப் போற்றப்பெற்றவரும், ஆனி மாமகத்தில் செப்பரிய நாலெட் டில் தெய்வீகம் பெற்றவருமாகிய ஸ்ரீ மாணிக்கவாசகப் பெரு மானை நினைவு கூர்தற் பொருட்டும், அவர் பாடியருளிய திருவாச கத்தை மாணவர் ஓதிப்பயன் அடைதற்பொருட்டும், திருப்பனந் தாள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்திந் தம்பிரான் சுவாமிகள் அவர் களால்** நிறுவப்பெற்றது. இது **''தஞ்சையில்] ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவுத் திருவாசகப் பரிசு''** எனப் பெயர்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. நூற்றுக்கு ஆண் டொன்றுக்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்) மதிப்புடைய சர்க்கார் கடன் பத்திரங்களில் (அதா வது 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946-ல்) முதலீடு செய்யப் பெறும். இது தஞ்சாவூர் நகர ஆட்சி மன்றத்தினரின் பரி பாலனத்தில் இருக்கும்.

3. இம்முதற் பொருளினின்றும் ஆண்டுதோறும் கிடைக் கும் வட்டி ரூ. 150 (ரூபா நூற்று ஐம்பது). இவ்வட்டிக் தொகை யினின்று ரூ. 140 (ரூபா நூற்று நாற்பது) பரிசாக அளிக்கப் பயன்படுத்தவேண்டும். எஞ்சிய தொகை பரிசுத் தேர்வு நடத் துதல் முதலிய செலவுகளுக்குத் தேவையிருப்பின் பயன்படுத்த வேண்டும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. தஞ்சாவூர் நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக் கல்விக்கூடங்களில் 4, 5, 6 பாரங்களில் படிப்பவர்கட்கு ஆண்,

பெண், சாதி, மத, குல வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப் பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கீழ்க்குறித்துள்ள வாறு திருவாசகத்தில் சிவபுராணத்தில் 32 அடிகளும், மற்ற மூன்று அகவல்களில், அதாவது 2, 3, 4-ல் ஏதேனும் ஒன்றும், திருவெம்பாவை 20 பாடல்கள், திருச்சதகம் 10 பாடல்கள், திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்கள் ஆக 40 பாடல்களையும் மனப்பாடஞ் செய்து சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்கவேண்டும். வாய்மொழியாகக் கேட்கும் வினாக்களுக் கும் விடையிறுத்தல் வேண்டும்.

தேர்வுப்பாடற் குறிப்பு

1. சிவபுராணம் அடி 1 முதல் 32 வரை 'நமச்சிவாய வா அழ்க' என்பது முதல் 'மெய்யேயுன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்பதுவரை அடிகள் 32
2. கீர்த்தித் திருவகவல் அடி 115 முதல் 146 வரை 'அரியொடுபிரமற்கு' என்பது முதல் 'ஒலிதருகயிலை யுயர்கிழ வோனே' என்பது வரை அடிகள் 32
3. திருவண்டப்பகுதி அடி 1 முதல் 28 வரை 'அண்டப்பகுதியின்' என்பது முதல் 'அனைத்தனைத் தவ்வயினடைத்தோன்' என்பது வரை அடிகள் 28
4. போற்றித் திருவகவல் அடி 137 முதல் 168 வரை 'பாரிடை ஐந்தாய்' என்பது முதல் 'அருளிடவேண்டும் அம்மான் போற்றி' என்பது வரை அடிகள் 32

5. திருவெம்பாவை முழுதும் பாடல்கள் 20
6. திருச்சதகம் (ஒவ்வொரு தலைப்பிலும் முதற் பாடல் வீதம் 10 தலைப்புக்களிலும் சேர்ந்து) பாடல்கள் 10
7. திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் 10

ஆகப்பாடல்கள் 40

இ. இப்பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். தஞ்சாவூர் நகராட்சி மன்றத் தலைவரும், பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமை யாசிரியர் அல்லது அவர் களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும் இத்தேர்வுக்குழு வின் உறுப்பினராவர். தஞ்சை சரஸ்வதி மகால் நிர்வாகக் கமிட்டியின் கௌரவ காரியதரிசி அவர்களையோ அல்லது அவர் களால் அனுப்பப்பெறும் ஒருவரையோ இத்தேர்வுக் குழு வினருள் ஒருவராக ஏற்றுக்கொள்ளவேண்டும். தஞ்சை நகராட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக்குழுவின் தலைவரும் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவர். இத் தேர்வுக்குழுத் தலைவர் தீர்ப்பே முடிவானது.

ஈ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங் களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் தஞ்சை நகர மன்றத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வு டிசம்பர்த் திங்களில் தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் இடத்தில் நடைபெறும்.

உ. பரிசுத் தேர்வில் முதற் கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 45 (ருபாய் நாற்பத்தைந்து), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 40 (ருபாய் நாற்பது), மூன்றாவது கூறு பெற்றவர்க்கு மூன்றாவது பரிசு ரூ. 30 (ருபாய் முப்பது), நான்காவது கூறு பெற்றவர்க்கு நான்காவது பரிசு ரூ. 25 (ருபாய் இருபத்தைந்து) ஆக நான்கு பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஊ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக் கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வத் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்குபேரை மேல் (ஈ) பிரி வில் குறித்தவாறு டிசம்பரில் நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

எ. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசுபெறற் குரியவரல்லர்.

5. பரிசுத் தேர்வு முடிந்ததும் தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளில் தஞ்சை நகர மன்றத்து உறுப்பினர் கூடும் மண்டபத்திலோ (முனிசிபல் கவுன்சில் ஹால்) அல்லது முதற் பரிசு பெற்றவர் கற்கும் கல்விக்கூடத்திலோ பரிசளிப்புக் கெனக் கூட்டிய ஒரு பொதுக்கூட்டத்தில் இப் பரிசுகள் அளிக் கப் பெறல் வேண்டும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், பரிசளிப்புக் கூட்டம் நடத்துதல் ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே யிருத்தல் வேண்டும். எஞ்சிய தொகைகள் மூலதனத்தோடு சேர்க்கப்பெறல் வேண்டும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற் பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றால் உயர்ந்த வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் தாள்களில் முதலீடு செய்ய வேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு தஞ்சை ஜில்லா ஆடுதுறையிலுள்ள ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மானேஜிங் கமிட்டி பிரசிடென்ட் அவர்களுக்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்களுக்கும் அவர் கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவர வேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்தல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை ரூ. 140 (ரூபாய் நூற்று நாற்பதும்) ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மானேஜிங் கமிட்டி பிரசிடென்ட் அவர்கட்கு அனுப்பப் பெறல் வேண்டும். ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

உயர்நிலைப்பள்ளி மானேஜிங் கமிட்டி பிரசிடென்ட் அவர்கள் இத் தொகையைக்கொண்டு மடி ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளியிலுள்ள நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த தருமத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பு :- தஞ்சாவூர் நகர மன்றம் 5—3—53ல் நடந்த கூட்டத்தில் தீர்மானம் எண் சி. ஆர். நெ. 126 (ஸ்பெஷல் 5—3—53) ன்படிக்கு இந்நிதியை ஏற்றுக்கொள்ள ஒப்புறுதியளித்தது. தஞ்சாவூர் நகர ஆட்சி ஆணையர் அவர்களுக்கு 10—3—53ல் முதற் பொருள் ரூ. 5000 அனுப்பப் பெற்றது. 12—3—53 தேதிகொண்ட எஸ். ஆர். 239/5253 எண்ணுள்ள இரசீது மூலம் முதற்பொருள் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

திருப்பனந்தாள்
4—4—1953

*(Sd) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudur Sub-Registrar's Office on 6—4—53 as number 30 of 1953, Book No. 4, Volume 44, Pages 282 to 285.

## 113

## மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு சேமவைப்பு ரூ. 5000

திருவாதவூர்ச் சிவபாத்தியரும், பாண்டி நாட்டில் 775—825-ல் ஆண்ட அரிமர்த்தனன் என்னும் முதலாம் வரகுணபாண்டியனுக்கு முதல் அமைச்சராகித் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம் ஏற்றவரும், திருப்பெருந்துறையிற் செழுமலர்க் குருந்த மேவிய சிவபெருமானின் அருள் பெற்று மாணிக்கவாசகர் எனும் நீட்சாநாமம் பெற்றவரும், ஆவணி மூலத்தில் நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நீகழ்வித்தமை-மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு பரகதி பாண்டியர்க் கருளியமை ஆகிய பல திருவிளை

யாடல்கள்-பாடும் பணிதான் கூடும் பொருட்டு-இறைவனும் செயப்பெற்றவரும், 'நலமலி தில்லையுள் கோலமார்தரு பொதுவினில் வருக' என இறைவன் ஏவ அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை யம்பலத்தே கண்டவரும், ஈழ மன்னனது ஊமைப் பெண்ணைப் பேசுவித்துப் பௌத்தர்களை வாதில் வென்றவரும், பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து நறுங்கனித்தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது ஆகிய திருவாசகம் முழுமையும் சிவபெருமான் திருக்கரத்தால் எழுதப்பெற்ற பெருமையுடையவரும், பாவை பாடிய வாயால் கோவைபாடியவரும், 'பாவெனப்படுவது உன் பாட்டே' என்று புகழப்பட்டவரும், ஆனி மகத்தில் செப்பரிய நாலெட்டில் தெய்வீகம் பெற்றவருமாகிய ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானை நினைவு கூர்தற்பொருட்டும், அவர் பாடியருளிய திருவாசகத்தை மாணவர் ஓதிப் பயன் அடைதற்பொருட்டும், திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ **காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** நிறுவப்பெற்றது. இது **"மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு"** எனப் பெயர்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்) மதிப்புடைய சர்க்கார் கடன் பத்திரங்களில் (அதாவது 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946-ல்) முதலீடு செய்யப்பெறும். இது மதுரை நகர ஆட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம்முதற் பொருளினின்றும் ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 150 (ரூபா நூற்றைம்பது). இவ்வட்டித் தொகையினின்று ரூ. 135 (ரூபா நூற்றுமுப்பத்தைந்து) பரிசாக அளிக்கப் பயன்படுத்தவேண்டும். எஞ்சிய தொகை பரிசுத் தேர்வு நடத்துதல் முதலிய செலவுகளுக்குத் தேவையிருப்பின் பயன்படுத்தவேண்டும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. மதுரை நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக் கல்விக்கூடங்களில் 4, 5, 6, பாரங்களில் படிப்பவர்கட்கு ஆண்,

பெண், சாதி, மத, குல வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப் பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கீழ்க்குறித்தவாறு திருவாசகத்தில் சிவபுராணத்தில் 32 அடிகளும், மற்ற மூன்று அகவல்களிலும் அதாவது 2, 3, 4-ல் ஏதேனும் ஒன்றும், திருவெம்பாவை 20 பாடல்கள், திருச்சதகம் 10 பாடல்கள், திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்கள் ஆக 40 பாடல்களையும் மனப்பாடஞ் செய்து சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்க வேண்டும். வாய்மொழியாகக் கேட்கும் வினாக்களுக்கும் விடை பிறுத்தல் வேண்டும்.

தேர்வுப்பாடற் குறிப்பு :

| | | |
|---|---|---|
| 1. | சிவபுராணம் அடி 1 முதல் 32 வரை 'நமச்சிவாய வாஅழ்க' என்பது முதல் 'மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்பதுவரை | அடிகள் 32 |
| 2. | கீர்த்தித் திருவகவல் அடி 115 முதல் 146 வரை 'அரியொடுபிரமற்கு' என்பது முதல் 'ஒலிதருகயிலை யுயர்கிழவோனே' என்பது வரை | அடிகள் 32 |
| 3. | திருவண்டப்பகுதி அடி 1 முதல் 28 வரை 'அண்டப்பகுதியின்' என்பது முதல் 'அனைத்தனைத் தவ்வயிடைத்தோன்' என்பது வரை | அடிகள் 28 |
| 4. | போற்றித் திருவகவல் அடி 137 முதல் 168 வரை 'பாரிடை ஐந்தாய்' என்பது முதல் 'அருளிடவேண்டும் அம்மான் போற்றி' என்பது வரை | அடிகள் 32 |
| 5. | திருவெம்பாவை முழுதும் | பாடல்கள் 20 |
| 6. | திருச்சதகம் (ஒவ்வொரு தலைப்பிலும் முதற் பாடல் வீதம் 10 தலைப்புக்களிலும் சேர்ந்து) | பாடல்கள் 10 |
| 7. | திருப்பள்ளியெழுச்சி | பாடல்கள் 10 |
| | | ஆகப்பாடல்கள் 40 |

இ. இப்பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக் குழு அமைக்கப்பெறும். மதுரை நகராட்சி மன்றத் தலைவரும், பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது அவர் களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும் இத்தேர்வுக் குழு வின் உறுப்பினராவர். மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் திருமடத்து அதிபரால் அனுப்பப்பெறும் அவர்கள் பிரதிநிதி ஒருவரையும் இத்தேர்வுக் குழுவினருள் ஒருவராக ஏற்றுக்கொள் ளலாம். மதுரை நகராட்சி மன்றத்தலைவரே இத்தேர்வுக் குழுவின் தலைவரும் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப் படுத்துவர். இத்தேர்வுக் குழுத்தலைவர் தீர்ப்பே முடிவானது.

ஈ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங் களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டு தோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் மதுரை நகர மன்றத் தலை வருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வு டிசம்பர்த் திங்களில் தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

உ. பரிசுத் தேர்வில் முதல்கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 50 (ரூபாய் ஐம்பது), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்து), மூன்று வது கூறு பெற்றவர்க்கு மூன்றுவது பரிசு ரூ. 40 (ரூபாய் நாற்பது) ஆக மூன்று பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஊ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக் கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வத் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்குபேரை மேல் (ஈ) பிரி வில் குறித்தவாறு டிசம்பரில் நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

எ. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற் குரியரல்லர்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன் நிறுவப் பெற்று மதுரை நகர ஆட்சி மன்றத்தினரால் நடத்தப்பெற்று வரும் **திருமலை நாயக்கர் நினைவுத் திருமுறைப் பரிசு** அளிக்கப்பெறும் நாளில் இப்பரிசுகள் அளிக்கப்பெறல் வேண்டும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே யிருத்தல் வேண்டும். எஞ்சிய தொகைகள் மூலதனத்தோடு சேர்க்கப்பெறல் வேண்டும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம் முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்ய வேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துக்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்களுக்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை ரூ. 135 (ரூபாய் நூற்று முப்பத்தைந்து) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் அவர்கட்கு அனுப்பப் பெறல் வேண்டும். ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரன் சங்கத்துத் தலைவர் அவர்கள் அத் தொகையைக்கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலுள்ள குமரகுருபரன் கலைக்கோயில் நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

திருப்பனந்தாள்
20—3—53

*(Sd) Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office on 20-3-53 as No. 27 of 1953 Book No. 4 Volume No. 44 Pages 272 to 276.

## 114

## திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் தருமம்
## முதற்பொருள் ரூ. 3500

திருநெறிவாழத் திருவாமூரில் திருவவதாரஞ் செய்தருளிய வரும், திலகவதியாரால் திருநீறளிக்கப்பெற்றுத் திருவதிகை வீரட்டானேசுவரரால் சூலை நோய் தீர்த்து சமண மதத்தினின்று தடுத்தாட்கொள்ளப் பெற்றவரும், நற்றமிழ் பாடி நாவுக்கரசு எனும் நாமம் பெற்றவரும், நீற்றறையிலிடப்பெற்று நலியா தெழுந்தும்-நஞ்சு கலந்த பாற் சோறுண்டும்-சமணர் ஏவிய மத வெங்களிற்றை அச்சமணரையே எதிர்த்து ஓடச்செய்தும்-கல்லே தெப்பமாகக்கொண்டு கரையேறியும் சோதனைகளை வென்று கி. பி. 615-630-ல் பல்லவ அரசனுக இருந்த முதலாம் மகேந்திர வர்மனைச் சமண மதத்தினின்று சைவ சமயஞ்சாரச் செய்தவரும், சம்பந்தரால் அப்பர் என்று அழைக்கப்பெற்றவரும், திங்களூரில் அராத்தீண்டிய அப்பூதியடிகளின் மூத்த சேயை உயர்ப்பித்தும் —வையமெங்கும் வற்கடமாய்ச் செல்லத் திருவீழி மிழலையில் வாசியில்லாக் காசுபெற்று அடியார்கட்குச் சோறிட்டும்—வேதா ரணியத்தில் மறைக் கதவினைப் பாடித்திறந்தும்—கைலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டும்—திருப்பூந்துருத்தியில் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்தும்— சிவத் தலங்கள்தோறும் உழவாரப்பணிபுரிந்து, பதிகமேழுழு நூறு பகர்ந்தருளிச் சித்திரைச் சதயமாம் திருநாளில் திருப்பு கலூரில் சிவபெருமான் திருவடியை அடைந்தவருமாகிய திரு நாவுக்கரசு சுவாமிகளை உலகு நினைந்து உய்தற்பொருட்டும், அப்பூதியடிகள் அப்பர் பேரால் நிறுவிய தண்ணீர்ப் பந்தர் தருமத்தை நினைவுகூர்தற் பொருட்டும், இத்தருமம் திருப்பனந் தாள் ஸ்ரீ காசி மடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** நிறுவப்பெற்றது. இத்தருமம் "தத்து வாஞ்சேரியில் திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தர் தருமம்" எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 3500, 3% வட்டி தரக் கூடிய கடன் பத்திரங்களாக உள்ளது. (3% Conversion Loan

of 1946) கடன் பத்திரம் எண் C A 129797 Rs. 2,000; C A 129806 Rs. 1,000; C A 126458 Rs. 500.

3. மேற்குறித்த மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு, திருப்பனந்தாள் அணைக்கரைப் பாதையில் தத்துவாஞ் சேரியில், ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பத் தயாரிக்கப்பெறும் திட்ட ஸ்டாவின் படி ஒவ்வொரு வருஷமும் பங்குனி உத்தர முதல் வைகாசி விசாகம் முடிய இத் தண்ணீர்ப் பந்தல் தருமம் நடத்தப்பெறும்.

4. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது.

5. இம் மூலதனமும் இதன்கண் குறித்த தருமத்திற்குச் செலவு செய்ததுபோக எஞ்சிய தொகையும் நம் பேரிலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருக்கும்.

திருப்பனந்தாள்
16—2—1953 } *(Sd) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office on 17-2-1953 as No. 4 of 1953, Book 4, Volume No. 14, pages 249 to 251.

## 115

## காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம்பாலிப்பு சேமவைப்பு ரூ. 7000

காஞ்சிபுரத்துச் சிவ வேதியரும், குமரகோட்டத்து அருச்சகராயிருந்த காளத்தியப்ப சிவாசாரியரது தவப்புதல்வரும், தென்மொழி வடமொழிக் கடல்களைக் கரை கண்டுணர்ந்தவரும், நவின்றோர்க் கினிமையும் நன்மொழி புணர்த்தலும் நவையின்மையும் அமையக் கவிபாடலில் வல்ல அருட் புலமையாளரும், 10346 பாடல்களையுடைய அறுமுக முடையவோர் அமலன் மாக்கதையாகிய **கந்த புராணம்** பாடுவதற்குத் "**தீகடசக்கர**" என்று முருகப்பெருமானால் அடியெடுத்துக் கொடுக்கப் பெற்ற

வரும், புராண நன்னூயகமாகிய இந்நூலைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றுவதற்குத் தொண்டை மண்டலத்து இருபத்து நான்கு கோட்டகத்தாராலும் தந்தப் பல்லக்குச் சிவிகையும் தாங்கி வரப்பெற்ற பெருமையாளரும், புலவர் குழாம் மகிழ்ந்து போற்றச் "சகாத்தம் எழுநூற்றின் மேலாய் இலகு கந்த புராணம்" அரங்கேற்றிய வித்தாரகவியும், மாசித் திங்களில் மிருகசீருஷ நாளில் சிவப்பேறு பெற்றவருமாகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளை நினைவுகூர்ந்து, அவர்கள் குலத்தில் உதித்த சிவவேதியர்களுக்கும், மற்றுமுள்ள சிவனடியார்களுக்கும் ஆண்டுதோறும் மாசி மிருகசீருஷ நாளில் அன்னம் பாலித்தற் பொருட்டுத் **திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இந்நிதி நிறுவப்பெற்றது. இது 'காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம்பாலிப்பு' என்று பெயர் பெறும்.

2. இதற்குரிய மூலதனம் ரூ. 7000 (ரூபா ஏழாயிரம்). இது ஆண்டொன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களாக உள்ளது. கன்வர்ஷன்லோன் ஆப் 1946 சி. ஏ. 131519 ரூ. 5000; சி. ஏ. 129808 ரூ. 1000; சி. ஏ. 129809 ரூ. 1000 ஆக ரூபாய் 7000). இந்நிதி நம்பேரிலும் நமக்குப் பின்வரும் உரிமை உள்ளவர் பேரிலும் இருந்து வரும்:

3. இம் மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக்கொண்டு காஞ்சிபுரத்தில் 'கருக்கடல் முருக்கி முத்திக் கரைதருகாந்த நூல்' அரங்கேற்றப் பெற்ற குமரகோட்டத்தில் ஆண்டுதோறும் மாசித் திங்கள் மிருகசீருஷ நட்சத்திரம் கூடிய நாளில் சிவவேதியர்க்கும் சிவனடியார்களுக்கும் அன்னம்பாலிக்கப் பயன்படுத்தப்பெறும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு ஏற்பவும், கால விலைக்கு ஏற்பவும், தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடைபெறும்.

5. இத் தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. நம்மாலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களாலும் இத்தருமம் பரிபாலனஞ் செய்யப்பெற்றுவரும்.

Tirupanandal
27—2—1953. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's Office on 2—3—53 as No. 21, Book No. 4, Volume No. 44, pages 262—264.

## 116

## திருக்காளத்தியில் திருக்கண்ணப்பர் நினைவு அன்னம் பாலிப்பு சேமவைப்பு ரூ. 5000

வேட ரதிபதியும் உடுப்பூர் வேந்தனுமான நாகன் புதல்வரும், திண்ணனார் என்ற இயற் பெயரினரும், கலிவளர் திங்களேபோல் எண்ணிரண்டாண்டில் செவ்வி எய்தியவரும், வேட்டை மேற் சென்று திருக்காளத்தி மலைமிசைக் குடுமித் தேவரைக் கண்டு ஆர்வம் பொங்கத் தாம் சுவைத்த ஊனே இறைவற்குப் படைத்தவரும், இறைவன் திருமுன் இறைச்சிப் பாரம் சிதறியுள்ளதைக் கண்டு வருந்திய சிவகோசரியார் என்னும் சிவவேதியர்க்குக் கனவில்—அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு - அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவு - அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனிய - மலர் நீக்கும் ஆதரவால் வீழ்ந்த செருப்படி இளம் பருவச்சேய் அடியின் சிறப்புடைத்து - உயர் கங்கை முதல் தீர்த்தப் பொருபுனலின் எனக்கு அவன் தன் வாய் உமிழும் புனல் புனிதம் - எம்மலரும் அவன் தலையால் இடுமலர்போல் எனக்குஒவ்வா - அவன் இட்ட ஊன் எனக்கு இனிய - என்று இவ்வாறு திருக்காளத்தியப்பர் சிறப்பித்து மொழியத்தக்க தொண்டு செய்தவரும், மறுநாள் சிவகோசரியார் மறைந்திருந்து பார்க்குங்கால் -கோசரிக்கு அன்று அவன் நேசம் காட்டக் - காளத்தியப்பரது திருநயனத்தில் ஒன்று துண்ணென உதிரம் பாய்தல் - திண்ணனார் தன் ஒரு கண் இடந்து அப்புதல் - இறைவனது மற்றைக்

கண்ணிலும் குருதிசோரல் - எம்பிரானது திருக்கண்ணில் இடக் காலை ஊன்றி ஒரு தனிப்பகழி கொண்டு தன் கண்ணில் ஊன் றுதல் - " நில்லு கண்ணப்பா நில்லு கண்ணப்ப, என் அன் புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப " என்று காளத்தியப்பர் அருளிச் செய்தல் ஆகிய அற்புதங்கள் நிகழ, அன்று 'கண்ணப் பர்' என்று திருநாமம் பெற்றுத் தைத்திங்கள் மிருக சீருஷ வீண்மீன் கூடிய அந்நன்னாளில் சிவகதி பெற்றவரும். " கண் ணப்ப னெப்பதோர் அன்பின்மை " என்று திருவாசகத்தில் மணிவாசகப் பெருந்தகையாரும்—' கலிமலிந்த சீர்நம்பி ' என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்– 'தொண்டு செய்து நாள் ஆறில் கண் இடந்து அப்பவல்லேன் அல்லன் ' என்று பட்டினத்து அடிகளும்—' உள்ளத்தில் தெளி கின்ற அன்பின் மெய்ம்மையுரு' என்று ஞானசம்பந்தர் புராணத் தில் சேக்கிழார் சுவாமிகளும்-புகழ்ந்து உரைத்த பெற்றியரும் ஆகிய திருக்கண்ணப்ப நாயனாரை மக்கள் நினைந்து மறங்கடிந்து, அன்புநெறியைக் கடைப்பிடித்தற் பொருட்டும், சிவகோசரி யாரால் கண்ணப்பரது நேசம் வெளிப்பட்டமையின் சிவகோசரி யாரின் மரபில் உதித்த சிவவேதியர்களுக்கும் மற்றச் சிவனடி யார்களுக்கும் திருக்காளத்தியில் அன்னம் பாலித்தற் பொருட் டும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இந்நிதி நிறுவப்பெற்றது. இத் தருமம் ' திருக்காளத்தியில் திருக்கண்ணப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ' என்று பெயர் பெறும்.

2. இதற்குரிய மூலதனம் ரூபாய் 5000 (ரூபாய் ஐயாயி ரம்). அது ஆண்டொன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. 3%கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சி. ஏ. நெ. 131521 ரூ. 5000. இந்நிதி நம் பேரிலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

3. இம்மூலதனத்தினின்று வரும் வட்டித் தொகை ஆண்டு தோறும் திருக்காளத்தியில் சிவவேதியர்களுக்கும் மற்றும் சிவனடியார்களுக்கும் அன்னம் பாலிக்கப் பயன்படுத்தப்பெறும். திருக்காளத்தீசரின் மாசி மகா சிவராத்திரி மகோற்சவ காலத்

தில் திருக்காளத்தியப்பர் கைலாயகிரி பிரதக்ஷணம் எழுந்தருளும் நாளில் இவ்வன்னம் பாலிப்பு நடைபெறும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு ஏற்பவும், காலவிலக்கு ஏற்பவும் தயாரிக்கப்பெறும் திட்ட ஸ்டாவின்படி இவ்வன்னம் பாலிப்பு நடத்தப்பெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. நம்மாலும் நமக்குப் பின்வரும் உரிமை உள்ள வர்களாலும் இத்தருமம் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

Tirupanandal
7—3—1953. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 10-3-53 as No 24, Book No. 4, Volume No. 44. pages 268-269.

## 117

## Saint Sundarar Memorial Feeding Charity at Benares in the Month of Adi Endowed Capital Rs. 7000

This endowment is founded by His Holiness **Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal,** Sri Kasi Mutt Tirupanandal in revered memory of Sri Sundaramoorthi Swamigal one of the sixty three Nayanars, known also as Nambi Arurar and Van Thondar, whose partner in spiritual life at Tiruvarur was Paravaiyar, who sang "Tiruthondathogai" which formed the basis for the Periapuranam, for whose sake were wrought such miracles as-Mountain-like stock of paddy being carried to the house of Paravaiyar by the Demons-the transformation of bricks into gold at Tirupugalur and the appearance of gold bars in Kamalalaya tank at Tiruvarur which were thrown into the river at Vriththachalam, who became united in wedlock to Sangiliar at Tiruvotriyur, who brought back to life a boy devoured by a

crocodile at Avinasi, who sang 37,000 pathigams in praise of Lord Siva (though about a hundred pathigams only now remain), who graced the world during the reign of the Pallava King Nandivarman III (825–850 A. D.) known as Kalar Chinga Nayanar and who in his eighteenth year on Adi Swathi day departed for Kailas on a white elephant along with the Chera King St. Cheraman Perumal Nayanar from the Chera Capital, Tiruvanchaikalam.

2. The object of the endowment is to conduct feeding Charity at Benares throughout the month of Adi (Kataka) every year.

3. This endowment consists of Government Promissory Notes to the value of Rs. 7000; No. C A 129798 for Rs. 2000 and C A 131522 for Rs. 5000 invested in 3% Conversion Loan of 1946. The administration of the fund shall vest in us and our successors-in-interest.

4. The annual interest accruing on the capital shall be utilised for the special feeding of Brahmins and Maheswara Pooja (Saivite feeding) in the month of Adi in addition to the usual daily feeding in our Choultry at Benares.

The feeding shall be conducted in accordance with the Thitta Japtha prepared at the time each year which will depend upon the amount of interest realised and the price of commodities then current.

5. This endowment shall not be diverted to any purpose other than the one mentioned above.

Tirupanandal,
12—3—1953. } (Sd) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub-Registrar's office on 14--3—53 as No, 25 of Book No. 4 Volume No. 44, Pages 270—271.

## 118

## Sri Kumaragurupara Swamigal Sakalakalavalli Malai Prize Endowment in the Government Girls' High School at Mayuram for Rs. 1000

This endowment is founded by His Holiness SILASRI KASIVASI ARULNANDI TAMBIRAN SWAMIGAL of Tirupanandal in greatful memory of Saint Kumaragurupara Swamigal who spread Tamil culture from Cape-Comorin to Benares in the 17th century and who sang Sakalakalavalli Malai and by the grace of goddess Saraswathi obtained fluency in Hindustani, worked several miracles and established the Kumaraswami Mutt and Kedar Ghat, at Benares.

2. This endowment will consist of Government Promissory Note to the face value of Rs 1,000 (One thousand only) invested in 3 per cent Conversion Loan of 1946. It shall be administered by the Municipal Council, Mayuram.

3. The interest accruing on the capital or suitable articles approximating its value shall be awarded as prize to the girl in the Government Girl's High School, Mayuram, who recites best the verses in Sakalakalavalli malai in Tamil sung by Saint Kumaragurupara Swamigal.

4. All the girls in the High School may compete for it irrespective of caste, creed or religion. The Headmistress and the High School Advisory Committee shall hold the competition along with a representative of the Municipality as may be chosen by the Council before the School annivere sary function, apply to the Municipal Council for the prizamount or articles, (as decided by the council) and award it to the prize winner at the function.

5. The Headmistress should report to the Donor and his sucessors-in-interest every year, the name of the prize winner and the amount or the articles awarded.

6. (*a*) The Mayuram Municipal Council shall have the discretion to reinvest the capital in high interest yielding Government Securities if this loan is repaid by the Government at any time.

(*b*) If for any reason the competition is not held in any year the interest amount shall be added to the corpus of the fund.

7. This endowment shall not be diverted to any purpose other than the one mentioned above.

**Note** :—This endowment has been accepted by the Municipal Council, Mayuram in its resolution No. 1083 dated 17–3–53 and the fact communicated by the Chairman Municipa Council, Mayuram in his R. C. No. 1188/53 dated 20—3—53. A sum of Rs. 1000 was sent to the Chairman, Municipal Council, Mayuram on 21–3–53 and acknowledged by him in his M. F. Form No. 156 Receipt No. 35 dated 23—3—53.

Tirupanandal, 4—4—1953. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarurdhur Sub-Registrar's Office on 4-4-53 as No. 29 of Book No. 4 Volume No. 44, pages 280—282.

## 119

## சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு சேமவைப்பு ரூ. 5000

திருவாதவூர்ச் சிவபாத்தியரும், பாண்டிநாட்டில் 775–825ல் ஆண்ட அரிமர்த்தனன் எனும் முதலாம் வரகுண பாண்டிய னுக்கு முதல் அமைச்சராகித் தென்னவன் பிரமராயன் என்னும்

பட்டம் ஏற்றவரும், திருப்பெருந்துறையிற் செழுமலர்க் குருந்த மேவிய சிவபெருமானின் அருள்பெற்று மாணிக்கவாசகர் எனும் நீட்சாநாமம் பெற்றவரும், ஆவணி மூலத்தில்–நரியைக்குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்தமை – மன் சுமந்து கூலி கொண்டு அக்கோவான் மொத்துண்டு பரகதி பாண்டியர்க்கு அருளியமை – ஆகிய பல திருவிளையாடல்கள் – பாடும் பணிதான் கூடும்பொருட்டு – இறைவனால் செயப்பெற்றவரும்,

“ பூமிலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி னுலில வளாகமும்
ஏனைப் புவனமு மெண்ணிங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தவித்தவி வருந்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் அமைத்தபோற் கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்
றாட்டுவ தாகுநின் னுன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் கனவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
இத்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொருதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட வையரித் தடங்கண்
திருமான் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த ”

என்று ஆதி குமரகுருபர சுவாமிகள் சிதம்பர மும்மணிக் கோவையில் பாடியருளிய நலமலி தில்லையுள் கோலமார்தரு பொதுவினில் ‘ வருக ’ என இறைவன் ஏவ, அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை யம்பலத்தே கண்டவரும், ஈழ மன்னனது ஊமைப் பெண்

ணைப் பேசுவித்துப் பௌத்தர்களை வாதில் வென்றவரும், பாடுங் கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து நறுங் கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டா மல் இனிப்பது ஆகிய திருவாசகம் முழுமையும் சிவபெருமான் திருக்கரத்தால் எழுதப்பெற்ற பெருமையுடையவரும், பாவை பாடிய வாயால் கோவை பாடினவரும், 'பாவெனப்படுவது உன் பாட்டே' என்று புகழப்பெற்றவரும், 'அறிவாற்சிவனே' எனப் போற்றப்பெற்றவரும், ஆனி மா மகத்தில் செப்பரிய நாலெட்டில் தெய்வீகம் பெற்றவருமாகிய ஸ்ரீ மாணிக்கவாசகப் பெரு மானை நினைவு கூர்தற்பொருட்டும், அவர் பாடியருளிய திருவாச கத்தை மாணவர் ஓதிப் பயன் அடைதற் பொருட்டும், **திருப்பனந் தாள், ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** நிறுவப்பெற்றது. இது **"சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமி கள் நினைவுத் திருவாசகப் பரிசு"** எனப் பெயர் பெறும்.

— 2. இதற்குரிய முதற்பொருள் நூற்றுக்கு ஆண்டொன் றுக்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்) மதிப்புடைய சர்க்கார் கடன் பத்திரங்களில் (அதாவது 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946-ல்) முதலீடு செய்யப்பெறும். இது சிதம்பரம் நகராட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம் முதற்பொருளினின்றும் ஆண்டுதோறும் கிடைக் கும் வட்டி ரூ. 150 (ரூபா நூற்றைம்பது). இவ்வட்டித் தொகையினின்று ரூ. 135 (ரூபா நூற்றுமுப்பத்தைந்து) பரிசாக அளிக்கப் பயன்படுத்தவேண்டும். எஞ்சிய தொகை பரிசுத் தேர்வு நடத்துதல் முதலிய செலவுகளுக்குத் தேவை யிருப்பின் பயன்படுத்தவேண்டும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. சிதம்பரம் நகரஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக் கல்விக் கூடங்களில் 4, 5, 6 பாரங்களில் படிப்பவர்கட்கு ஆண், பெண், சாதி, மத, குல வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப் பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கீழ்க்குறித்துள்ள வாறு திருவாசகத்தில் சிவபுராணத்தில் 32 அடிகளும், மற்ற மூன்று அகவல்களில் (அதாவது 2, 3, 4-ல்) ஏதேனும் ஒன்றும், திருவெம்பாவை 20 பாடல்கள், திருச்சதகம் 10 பாடல்கள், திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்கள், ஆக 40 பாடல்களையும் மனப் பாடஞ் செய்து சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்க வேண்டும். வாய்மொழியாகக் கேட்கும் வினாக்களுக்கும் விடை யிறுத்தல் வேண்டும்.

தேர்வுப்பாடற்குறிப்பு :—

1. சிவபுராணம் அடி 1 முதல் 32 வரை 'நமச்சிவாய வாஅழ்க' என்பது முதல் 'மெய்யே யுன் பொன்னடிகள் கண் டின்று வீடுற்றேன்' என்பது வரை — அடிகள் 32
2. கீர்த்தித் திருவகவல் அடி 115 முதல் 146 வரை 'அரியொடுபிரமற்கு' என் பது முதல் 'ஒலிதருகயிலையுயர் கிழ வோனே' என்பது வரை — அடிகள் 32
3. திருவண்டப்பகுதி அடி 1 முதல் 28 வரை 'அண்டப் பகுதியின்' என்பது முதல் 'அனைத்தனைத் தவ்வயினடைத் தோன்' என்பது வரை — அடிகள் 28
4. போற்றித் திருவகவல் அடி 137 முதல் 168 வரை 'பாரிடை ஐந்தாய்' என்பது முதல் 'அருளிடவேண்டும் அம்மான் போற்றி' என்பது வரை — அடிகள் 32
5. திருவெம்பாவை முழுதும் — பாடல்கள் 20
6. திருச்சதகம் (ஒவ்வொரு தலைப்பிலும் முதற்பாடல்வீதம் 10 தலைப்புக்களிலும் சேர்ந்து) — பாடல்கள் 10
7. திருப்பள்ளியெழுச்சி — பாடல்கள் 10

ஆகப்பாடல்கள் 40

இ. மேல் 'ஆ' பிரிவிற் குறிக்கப்பெற்ற திருச்சதகம் 10 பாடல்களுக்கும் திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்களுக்கும் மாறுக வேறு இருபது திருவாசகப் பாடல்களை 4 ஆண்டுகட் கொருமுறை அமைக்கத் தேர்வுக்குழுத் தலைவருக்கு உரிமை யுண்டு. மற்றப்பகுதிகள் எப்பொழுதும் பாடமாக இருத்தல் வேண்டும்.

ஈ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடைத்து. ஒன்று எழுத்துத் தேர்வு ; 50 கூறுகள்; இரண்டு மணி நேரம்; பரிசுத் தேர்வுக்குரிய பாடல்களில் கண்ட பொருளைப்பற்றியும், சொற்சுவை பொருட்சுவைகளைக் குறித்துப் வினவப்பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு; 50 கூறுகள் ; மேற் திருவாசகப் பாடல்களையும் (தேர்வுக்குழுவினர் கேட்கும் பாடல்களை) மனப்பாடமாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்புவிக்கவேண்டும்.

உ. இப்பரிசுக்குரிய தேர்வுகளை நடத்த ஒரு தேர்வுக் குழு அமைக்கப்பெறும். சிதம்பரம் நகராட்சி மன்றத் தலைவரும் (சேர்மென், முனிசிபல் கௌன்சில்), சிதம்பரம் நகராட்சி ஆணையரும் (கமிஷனர், முனிசிபல் கௌன்சில்), பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது அவர்களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும், இத்தேர்வுக்குழுவின் உறுப்பினர் ஆவர். சிதம்பரம் நகராட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக் குழுவின் தலைவர் ஆவர். இவரே தேர்வு முடிவு களை வெளிப்படுத்துவர். அவர் தீர்ப்பே முடிவானது.

ஊ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப் பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31ம் நாளுக்குள் சிதம்பர நகரமன்றத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய இரண்டு தேர்வுகளும் டிசம்பர்த் திங்களில் தேர்வுக்குழுத் தலைவர் குறிப் பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

எ. பரிசுத் தேர்வில் முதற்கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 45 (ரூபா நாற்பத்தைந்து), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 35 (ரூபா முப்பத்

தைந்து), மூன்றாவது கூறு பெற்றவர்க்கு மூன்றாவது பரிசு ரூ. 30 (ரூபா முப்பது), நான்காவது கூறு பெற்றவர்க்கு நான்காவது பரிசு ரூ. 25 (ரூபா இருபத்தைந்து) ஆக நான்கு பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஏ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வத் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்கு பேரை மேல் (ஈ) பிரிவில் குறித்தவாறு டிசம்பரில் நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

இ. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசுபெறற் குரியரல்லர்.

5. இப்பரிசுகள் மார்கழித் திங்களில் திருவாதிரை விண்மீன் கூடிய நாளிலோ அல்லது வேறு ஒரு சிறந்த நாளிலோ, சிதம்பரம் நடராஜப் பெருமான் எழுந்தருளும் ஆயிரக்கால் மண்டபத்திலோ அல்லது நகர மன்றத்துறுப்பினர் கூடும் மண்டபத்திலோ (முனிசிபல் கௌன்சில் ஹால்) பரிசு வழங்குவதற்கெனக் கூட்டிய ஒரு பொதுக்கூட்டத்தில் அளிக்கப் பெறும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், ஆகியவற் றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே யிருத்தல் வேண்டும். எஞ்சியதொகை மூலதனத்தோடு சேர்க்கப்பெறல் வேண்டும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற் பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத

ஆண்டில் பின் 9வது பிரிவில் கூறியவாறு தஞ்சை ஜில்லா ஆடுதுறையிலுள்ள ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மானேஜிங் கமிட்டி பிரசிடென்ட் அவர்கட்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்களுக்கும் அவர் களுக்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவர வேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டிலேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத்தொகை ரூ. 135 (ரூபா நூற்று முப்பத்தைந்தும்) ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி மானேஜிங்கமிட்டி பிரசிடென்ட் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி மானேஜிங் கமிட்டி பிரசிடெண்ட் அவர்கள் அத்தொகையைக்கொண்டு ஸ்ரீ குமரகுருபர சுவாமி கள் உயர்நிலைப்பள்ளியிலுள்ள நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்கட்குப்பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

**குறிப்பு** :—சிதம்பரம் நகராட்சி மன்றம் 17—3—1953-ல் நடந்த கூட்டத்தில் எம். சி. ஆர். 1073 எண் கொண்ட தீர்மானத்தின்படி இந்நிதியை ஏற்று நடத்த ஒப்புறு தியளித்தது. சிதம்பரம் நகர மன்ற ஆணையர் அவர் களின் 22—4—53 தேதியிட்ட பி. 1-2554/53 எண் கொண்ட கடிதத்தால் முதற் பொருள் ரூபா 5000 ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

Tirupanandal,
24—4—1953. } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran.*

---

Registered at Tiruvidamurudhur Sub-Registrar's Office on 27-4-53 as No, 35 of 1953 Book No. 4 Volume No, 44 pages 293 to 298.

## 120

### Kamalai Velli Ambalavana Munivar Memorial Muthumozhi Melvaippu Prize at the University of Travancore, Trivandrum—Endowed Capital Rs. 3,500

This endowment has been founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Sri Kasimutt, Tirupanandal in revered memory of Kamalai Velli Ambalavana Munivar a great thinker, commentator, poet and philosopher, who was initiated by Sri Masilamani Desika Gnana Sambanda Paramacharya Swamigal the fourth Mahasannithanam of the Dharmapuram Adhinam, who attained proficiency in Tamil and Sanskrit studies under the able guidance of Sri Adi Kumaragurupara Swamigal founder of Kumaraswami Mutt Kedar Ghat Benares, under whose guidance many men of letters of the 17th Century like Sivaprakasa Swamigal and Sambanda Saranalaya Swamigal became famous poets and great Scholars, who wrote two commentaries (one elaborate and another condensed) on Muthi Nischayam a philosophical treatise in verse form composed by Sri Gurugnanasambanda Swamigal the founder the Dharmapuram Adhinam, who also wrote an excellent commentary called Gnanavarana Vilakkam on Sivagnana Siddhiyar of Arulnandi Sivacharya which are monuments of his vast learning, and who composed Muthumozhi Melvaippu which contains 196 stanzas in Venba metre the former part of each stanza bearing illustration to the latter part of the stanza being an important Kural of Tiruvalluvar quoted for the Dharma Artha and Kama part of the four Purusharthas and for the Moksha part of which ten Kurals from Tiru Arutpayan of Umapathi Sivacharya were used. To perpetuate the

memory of this distinguished Scholar and encourage the study of his work Muthumozhi Melvaippu and thereby mould the students into good citizens this endowment is made. This endowment shall be styled as "Kamalai Velli Ambalavana Munivar memorial Muthumozhi Melvaippu Prize at the University of Travancore, Trivandrum."

2. This endowment consists of Government Securities of the face value of Rs. 3500 (Rs. Three thousand five hundred only) fetching interest at 3% per annum. The administration of the fund shall vest in the University of Travancore. It shall be at the discretion of the University to reinvest it in highest interest yielding Government Securities from time to time.

3. Out of the annual interest accruing on the capital a sum of Rs. 90 shall be set apart for awarding two cash prizes of Rs. 50 (Rs. Fifty) and Rs. 40 (Rs. Forty) for the two best candidates that compete for the prizes and the balance shall be utilised for conducting the competitive examination each year and incidental expenses.

4. (*a*) The students studying in all University Classes in colleges affiliated to the University of Travancore shall be eligible to compete for the prizes irrespective of Sex, Caste, Creed or Religion.

(*b*) The prizes shall be awarded every year on the results of a competitive examination oral or written or both in Tamil on 98 out of 196 stanzas in Muthumozhi Melvaippu conducted at a place or places fixed by the Vice Chancellor of the Travancore University according to the number of candidates applying for the competition from various colleges affiliated to the University of Travancore.

(c) The portions for the competition for the year in the Christian era with odd number shall be the stanzas with odd numbers and the portions for the competition for the year in the Christian era with even number shall be the stanzas with even numbers.

(d) The applications for the competition shall be received in the month of July each year by the University and the competitive examination shall be conducted by the Professor of Tamil of the University of Travancore ordinarily in the month of December, each year.

(e) The first prize of Rs. 50 (Rs. Fifty) shall be awarded to the pupil who secures the highest number of marks and the second prize of Rs. 40 (Rs. Forty) to the pupil who secures the next highest number of marks in the said competitive examination. The prize amounts shall be remitted to the pupils by M. O.

(f) No T A. or D. A. or H. A. etc. shall be paid to the pupils competing for the prize even if the place of the test should be different from the place from which the pupils compete.

5. The prize winner of one year shall not be eligible to compete for the prize in the succeeding year or years.

6. The amount spent for conducting the competitive examination shall on no account exceed the balance left after awarding the prize amounts each year.

7. The names of the recepients of the prizes, the amount of prize awarded together with the amount spent for conducting the competition, and the balance if any shall be communicated to the Donor and his Successors-in-interest every year.

8. This fund shall not be diverted to any purpose other than that for which it is intended under this scheme.

9. If in any year or series of years the prizes be not awarded, the amount of interest thus unspent shall be added to the Corpus of the fund. If the interest received accumulates to a sufficient sum by the above process, it shall be within the discretion of the Vice Chancellor to suitably increase the number or amount of prizes and inform the Donor of what he has done.

(*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran.*

---

Note: This endowment has been accepted by the Syndicate of the Travancore University at its meeting held on 16—4—53 and the receipt of the amount of Rs. 3500 has been acknowledged by the Registrar in his letter A. A. 5. 1196/53 dated 4th May 1953.

## 121

## The Japalle Zamindar Memorial Feeding Charity At Banaras Rs. 6000

This endowment is founded by **His Holiness Si-la-sri Kasi Vasi Arulnandi Tambiran Swamigal Avergal,** Kasi Mutt, Tirupanandal, in memory of Maharajasri Japalle Venkatarama-nayaningaru of Kalahasti who made the gift of Thanamoherla village, Rapur Taluk, Nellore District, to our predecessor-in-title Kasi Vasi Kumaragurupara Tambiran Swamigal in the year 1779 A. D. (Salivahana 1701, Vikari year Ashadah month, Suklapaksham 15th) by a gift deed (Bhoothanam) for feeding pilgrims at Holy Banaras. Now that under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) 1948-Madras Act XXVI of 1948-the said village was taken over by Government and a cash-compensation of Rs. 5,683 (Rupees five thousand six hundred and eighty three only) in respect of the said village was deposited with the Estates Abolition Tribunal, Chittoor, by the Government and that

on a petition put in by His Holiness Kasi Vasi Arulnandi Tambiran Swamigal Avergal, Proprietor and Trustee of the village, in O. P. No. 1563 of 1952 before the Tribunal, Chittor for the payment of the amount, and the same having been paid to us, this endowment is made in memory of the said Maharajasri Japalle Venkataramanayaningaru of Kalahasti for daily feeding of pilgrims at Banaras. The endowment will be styled as "THE JAPALLE ZAMINDAR MEMORIAL FEEDING CHARITY AT BANARAS."

2. The endowment consists of Government Promissory notes to the face value of Rs. 6,000 (Rupees six thousands) purchased from out of the compensation amount received from the Government—3% Conversion Loan of 1946—(G. P. Note Nos. C A 131541 Rs. 2,000; C A. 131542 Rs. 2,000; C A. 131543 Rs. 2,000). The administration of the fund shall vest with **His Holiness Kasi Vasi Arulnandi Tambiran Avergal,** and his Successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for the feeding of pilgrims in our choultry at Banaras.

4. The feeding shall be in accordance with the thitta-japtha prepared annually.

5. This endowment shall not be diverted to any other purpose than the one specified above.

Tirupanandal,
23—4—1953. } *Sd. Kasivasi Arulnandi Tambiran*

---

The above deed has been registered in the Sub Registrars' Office, Tiruvidamarudur, as Document No. 34 Book No. 4 Volume 44 pages 292—293 on 23—4—1953.

## 122

## மதுரையில் கமலை வெள்ளியம்பலவாணர் இனவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு சேமவைப்பு ரூபா. 5,000

கமலை என்ற திருவாரூரிற் பிறந்தவரும், தருமபுரவாதீனத்து நான்காவது குரவராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடத்தில் சைவசந்நியாசம் பெற்றவரும், ஸ்ரீ காசியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளிடத்தில் கல்வி பயின்று தென்மொழி வடமொழிக் கடல்களைக் கரை கண்டுணர்ந்தவரும், தருமையாதீனத்து ஐந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகளிடம் ஞானதீக்கை பெற்றவரும், திருநெல்வேலியில் சிந்து பூந்துறையில் தங்கியிருந்த காலத்துக் கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப் பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இலக்கணக் கல்வி நிரம்பச் செய்தவரும், கந்தபுராணச் சுருக்கம் இயற்றிய சம்பந்தசரணுலய சுவாமிகள் முதலானவர்களுக்குப் போதகாசிரியராகத் திகழ்ந்தவரும், தருமையாதீன முதற் குரவராகிய குருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த 'முத்தி நிச்சயம்' எனும் பண்டார சாத்திரத்துக்குப் பேருரை ஒன்றும் சிற்றுரை ஒன்றும் அருளிச் செய்தவரும், சைவ சமய சந்தானாசாரியருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிய "சிவஞான சித்தியார்" எனும் சைவ சித்தாந்த சாத்திரத்துக்கு "ஞானவரண விளக்கம்" எனும் பாஷ்யம் இயற்றியவரும், நீதிகளை விளக்கும் வரலாறு முன்னும் அதற்கியைந்த திருக்குறளைப் பின்னும் அமைத்துப் பாடப்பெற்றதும் - அறம் பொருள் இன்பங்களை விளக்கும் நீதிகட்குத் திருக்குறளும், வீட்டின் பகுதியை விளக்கச் சைவசமய சந்தானாசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிய சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றுகிய திருவருட் பயனும் அமைக்கப்பெற்றதும் - இனிய எளிய 196 வெண்பாக்கள் கொண்டதும் ஆகிய **முதுமொழிமேல் வைப்பு** என்னும் நூலை அருளியவரும், சிதம்பரத்தில் சிவப்பேறு அடைந்தவருமாகிய கமலை வெள்ளியம்பலவாண முனிவரை

நினைவு கூர்தற்பொருட்டும், அவர் அருளிய முதுமொழிமேல் வைப்பினை மாணவர் கசடறக்கற்று அதற்குத் தக நின்று நல் வாழ்வு பெறும் பொருட்டும் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது "மதுரையில் கமலை வெள்ளியம்பல வாண முனிவர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு" எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்) இத்தொகை நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப் பெறும். (3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946). இது மதுரை நகராட்சி மன்றத் தலைவரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம்முதற்பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகை ரூ. 150. இவ்வட்டித் தொகையினின்று ரூ. 140 பரிசாக அளிக்கப்பயன்படுத்த வேண்டும். எஞ்சிய தொகை பரிசுத் தேர்வு நடத்துதல் பரிசளிப்புவிழா முதலிய செலவுகளுக் குத் தேவையிருப்பின் பயன்படுத்தலாம்.

4. பரிசுக்குரிய கட்டுபாடுகளாவன :—

அ. மதுரை நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக் கல்விக்கூடங்களில் 4, 5, 6 பாரங்களில் படிக்கும் மாணவர்க்கு ஆண், பெண், சாதி, மத, குல வேறு பாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கமலை வெள்ளியம்பல வாண முனிவர் அருளிச்செய்த முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் 98 வெண்பாக்களை மனப்பாடஞ் செய்தல் வேண்டும்.

இ. ஆங்கிலஆண்டில் ஒற்றைப்படை எண் உள்ள ஆண்டில் முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் ஒற்றைப்படை எண்உள்ள பாடல்களும், ஆங்கில ஆண்டில் இரட்டைப் படை எண் உள்ள ஆண்டில் இரட்டைப்படை எண் உள்ள பாடல்களும் இப்பரிசுப் போட்டிக்குப் பாட மாகும்.

ஈ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு; 50 கூறுகள்; இரண்டு மணி நேரம்; முதுமொழிமேல் வைப்பில் போட்டிக்கென்று அமைக்கப்பெற்ற 98 வெண்பாக்களிற்கண்டபொருளைப்பற்றியும், சொற்சுவை பொருட்சுவை குறித்தும் வினவப் பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு; 50 கூறுகள்; அந்த 98 வெண்பாக்களில் தேர்வுக் குழுவினர் கேட்கும் எல்லாப் பாடல்களையும் மனப்பாடமாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்க வேண்டும்.

உ. இப்பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். மதுரை நகராட்சி மன்றத் தலைவரும், பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது அவர்களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும் இத்தேர்வுக்குழுவின் உறுப்பினராவர். மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடத்து அதிபரால் அனுப்பப்பெறும் அவர்கள் பிரதிநிதி ஒருவரையும் இத்தேர்வுக்குழுவினருள் ஒருவராக ஏற்றுக்கொள்ளலாம். மதுரை நகராட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக்குழுவின் தலைவரும் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவர். இத் தேர்வுக்குழுத் தலைவர் தீர்ப்பே முடிவானது.

ஊ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டு தோறும் ஐலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் மதுரை நகர மன்றத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வு டிசம்பர்த் திங்களில் தேர்வுக்குழுத் தலைவர் குறிப்பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

எ. பரிசுத் தேர்வில் முதற்கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 45 (ரூபா நாற்பத்தைந்து), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 40 (ரூபா நாற்பது),

மூன்றுவது கூறு பெற்றவர்க்கு மூன்றுவது பரிசு ரூ. 30 (ரூபா முப்பது), நான்காவது கூறு பெற்றவர்க்கு நான்காவது பரிசு ரூ. 25 (ரூபா இருபத்தைந்து) ஆக நான்கு பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஏ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடத்திலும் விண்ணப்பித்துக்கொண்ட மாணவர்கட்கு அவ்வத் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்குபேரை மேல் (ஈ) பிரிவில் குறித்தவாறு டிசம்பரில் நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

ஐ. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற் குரியரல்லர்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன் நிறுவப் பெற்று, மதுரை நகர ஆட்சி மன்றத்தலைவரால் நடத்தப்பெற்று வரும், "திருமலைநாயக்கர் நினைவுத் திருமுறைப் பரிசும்" "ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசும்" அளிக்கப்பெறும் நாளில் இப்பரிசுகளும் அளிக்கப்பெறல் வேண்டும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே யிருத்தல் வேண்டும். எஞ்சிய தொகைகள் மூலதனத்தோடு சேர்க்கப்பெறுதல் வேண்டும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றால் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துக்குத்

தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்கட்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவர வேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை ரூ. 140 (ரூபாய் நூற்று நாற்பது) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரன் சங்கத்துத் தலைவர் அத்தொகையைக்கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலுள்ள குமரகுருபரன் கலைக்கோவில் - நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

**குறிப்பு :—மதுரை நகர மன்றம் 10-6-53-ல் நடந்த கூட்டத்தில் நிர்மான எண் 659ல் படிக்கு இந்த நிதியை மகிழ்ச்சியுடன் ஏற்று நடத்த ஒப்புறுதியளித்தது. முதற்பொருள் மதுரை நகரமன்றத் தலைவர் திரு. அ. சிதம்பரம் அவர்கள் எழுதிய எ 2/18844/53 என் உடைய 5-8-53 தேதிகொண்ட கடிதத்தில் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.**

திருப்பனந்தாள்
10—8—1953 } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

The above document has been registered in the Sub Registrar's Office, Tiruvidamarudur on 10—8—53 as No. 54 of 1953, Book No. 4, Volume No. 45, pages 17—22.

## 123

## திருவாதவூரில் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் நினைவு அன்னம் பாலிப்பு சேமவைப்பு ரூ, 5,000

மணிவாசகப் பெருந்தகையாரை நினைவு கூர்ந்து அவர் அவதரித்த வாதவூரில் ஆனிமகத்தன்று சிவவேதியர்கட்கும், சிவனடியார்கட்கும், ஏழைகட்கும் அன்னமளித்தற் பொருட்டுத் **திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களால் அளிக்கப் பெற்ற தொகை ரூ. 5000 (ரூபா ஐயாயிரத்தைக்) கொண்டு ஸ்ரீவை குமரகுருபரன் சங்கத்தின் நிரந்தரத் தலைவர் ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது "திருவாதவூரில் மாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி" என்று பெயர் பெறும். மூலதனம் ரூபா ஐயாயிரம் 4% Madras Loan of 1964ல் முதலீடு செய்யப் பெறும். ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கத்தின் நிரந்தரத் தலைவர் இந்நிதியைப் பரிபாலனஞ் செய்து வருவர்.

2. இப் மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக்கொண்டு ஆண்டுதோறும் ஆனிமகநாளில் மாணிக்கவாசக சுவாமிகள் அவதரித்த திருவாதவூரில் சிவவேதியர்கட்கும், ஏழைகட்கும் அன்னதானம் நடத்தப்பெறும்.

3. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்திற் கேற்பவும், கால விலைக்கேற்பவும் தயாரிக்கப்பெறும் திட்ட ஸ்டாவின்படி அன்னம் பாலிப்பு நடைபெறும்.

4. இத்தருமம் வேறு எக்காரியத்துக்கும் பயன்படுத்தப் பெறமாட்டாது.

5. வருடந்தோறும் வாதவூரில் அன்னம் பாலிப்பு நடத்திய விவரமும் செலவுக்கணக்கும் ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கத்தின் நிரந்தரத் தலைவர், இத்தருமம் நிறுவ மூலதனம் அளித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கட்கும் அவர் களுக்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில் மாடியில் 26—7—53 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்ற **ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்** நிர்வாகக் குழுவினர் கூட்டத்தின் நடவடிக்கை.

**விஷயம்**

திருப்பனந்தாள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** மாணிக்கவாசகப் பெருந்தகையாரை நினைவு

கூர்ந்து அவர் அவதரித்த திருவாதவூரில் ஆனிமகத்தன்று சிவ வேதியர்கட்கும், ஏழைகட்கும் அன்னம் அளித்தற்பொருட்டு "மாணிக்கவாசகர் நினைவு அன்னம்பாலிப்பு நிதி (திருவாதவூர்) ரூ. 5000" மூலதனத்தில் பேரறக் கட்டளை நிறுவி மெ. பணியாற்றும் உரிமையை இச்சங்கத்திற்கு வழங்கி அருள்பாலித்து அதற்குரிய மசுவிதா அனுப்பியிருப்பதை வரவேற்று ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்கு இச்சங்கத்தின் நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளல்.

## நிர்மானம்

ஊன் கலந்து உயிர் கலந்து இனிப்பதுவும், கேட்ட கீழ்ப் பறவைக் சாதிகளும் பொல்லா விலங்குகளும் சிவஞானப் பேறு பெறுவதுமான கனியினும் கட்டிகரும்பினும் தித்திக்கும் திருவாசகத் தேனை உலகுய்ய அருளிய மணிவாசகப் பெருந்தகையாரின் திருநாளாகிய ஆனி மக நாளன்று ஆண்டுதோறும் நினைவு கூர்ந்து அவர் அவதரித்த திருவாதவூரில் சிவ வேதியர் கட்கும் ஏழைகட்கும் உணவளிக்கத் திருவுளங்கொண்டு திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** சாசுவத அன்னம் பாலிப்பு நிதி ரூபா. 5000 (ஐயாயிரம்) நன்கொடை வழங்கி மெ. தர்மமும் இச்சங்கத்தின் நிரந்தரத் தலைவர் ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை பேரால் நிறுவப்பெற்று மெ. நிதியையும் பரிபாலனம் செய்துவரக் கட்டளையிட்டருளிய சாசன மசுவிதாவை இச்சங்கம் மகிழ்ச்சியுடன் வரவேற்று, ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் பெருங் கருணைக்கும் பூரண அபிமானத்திற்கும் இலக்காகும் பெரும்பேற்றை இச்சங்கத்திற்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் அளித்துவரும் பெருந்தகைமைக்கு இச்சங்கம் பெரிதும் கடமைப்பட்டிருப்பதைப் பொறுப்புடன் உணர்ந்து தன் நன்றியை வணக்கத்துடன் விண்ணப்பித்துக்கொள்கிறது.

**T. M. குமரகுருபரன் பிள்ளை**
**S. கோமதி நாயகம் பிள்ளை**
**ஆசு. கருப்பசாமி பிள்ளை**
**O. S. சொக்கலிங்கம் பிள்ளை**

## 124

## Sri Kumaragurupara Swamigal Memorial Endowment Fund for Supply of Milk to Poor Children in Sirkali Endowed Capital Rs. 3,500

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal in revered memory of Sri Kumaragurupara Swamigal who was the founder of Kumaraswami Mutt at Kedar Ghat, Benares and who spread Tamil Culture from cape Comorin to the Himalays in the 17th century. This fund shall be called "Sri Kumaragurupara Swamigal memorial Endowment fund for supply of milk to poor children in Sirkali, (Tanjore District).

2. The Collector of Tanjore shall be the administrator of the fund. He may also depute any Government Officer under his control to carry out the objects of the endowment.

3. The capital of the endowment shall consist of Government Securities to the face value of Rs. 3500 (Rs. Three thousand five hundred only) which shall be invested in 3% Conversion Loan of 1946.

4. The interest accruing on the fund shall be utilised for distributing milk or milk powder added with sugar to poor children below 5 years of age at Sirkali on the "Tirumulaippal" festival day i. e., the second day of Chitrai festival in Sirkali Sattanatha Swami temple in the month of Chitrai (Tamil month Chithirai) every year. It may be recalled here that Sirkali was the birth place of Saint Tiruganansambandar and that, while he was three years old, he was fed with Divine milk by Siva Sakthi on the bank of the Bramha Thirtham Tank of Sattanatha Swami temple.

5. The administrator shall send every year to the Donor or his successors-in-interest particulars regarding (1) the number of children that were supplied milk on the above said day and (2) the expenses incurred in connection with the endowment.

6. The amount of the fund shall not be diverted to any purpose other than the one intended by the Donor.

7. Whenever found necessary the amount of the fund may be withdrawn and re-invested in Government Securities fetching a higher rate of interest.

Tirupanandal
12—8—1953. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran.*

---

The endowment was accepted by the State Government of Madras in letter No. 44076 P3/53-1 Health dated 19—8—53 from the Secretary to Government, Health Department, Fort St. George, Madras. The sum of Rs. 3500 was sent to the Treasurer Charitable endowments, Madras on 28—8—1953.

## 125

## திருவண்ணமலையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு சேமவைப்பு ரூ. 5,000

சிவலோகம், அருணசலம், சோணசலம் என்றின்னோரன்ன பல திருப்பெயர்களை உடையதும், நடுநாட்டுத் தலங்களுட் சிறந்ததும், சிவபெருமானே மலையாயிருப்பதும், வச்சிராங்கத பாண்டியன் பேறுபெற்றதும், மாலும் அயனும் சிவபெருமானது அடியும் முடியும் தேடிய தல வரலாற்றுச் சிறப்புடையதும், ஐம்பூதத் தலங்களுள் தேயுத்தலம் எனப்பெறுவதும், நினைக்க முத்தி தருவதும், அருணகிரிநாதரால் திருப்புகழ்பாடிச் சிறப்பிக்கப்பெற்றதும், குகைநமச்சிவாயர் குருநமச்சிவாயர் முதலிய பெரியோர்கள் தங்கிச் சித்திகள் செயப்பெற்றதும், சைவ எல்

லப்ப நாவலரால் புராணமும் அந்தாதியும் கலம்பகமும் பாடப் பெற்றதும், திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பதிகம் பெற்றுள்ளதும், மாணிக்கவாசக சுவாமிகளால் திருவெம்பாவை திருவம்மானை பாடியருளப்பெற்றதும் ஆன திருவண்ணுமலையில் 'அறிவாற் சிவனே' எனப் போற்றப்பெற்ற மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை, மாணவர் ஒதி நற் பேறு அடைதற்பொருட்டுத் திருப்பனந்தாள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இப்பரிசு நிதி நிறுவப்பெற்றது. இது 'திருவண்ணுமலையில் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்) மதிப்புடைய சர்க்கார் கடன் பத்திரங்களில் (அதாவது 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946ல்) முதலீடு செய்யப்பெறும். இது திருவண்ணுமலை நகராட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம்முதற் பொருளினின்றும் ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 150 (ரூபாய் நூற்றைம்பது.) இவ்வட்டித் தொகையில் ரூ. 135 (ரூபாய் நூற்றுமுப்பத்தைந்து) பரிசாக அளிக்கப் பயன்படுத்தவேண்டும். எஞ்சிய தொகை பரிசுத் தேர்வு நடத்துதல் முதலிய செலவுகளுக்குத் தேவையிருப்பின் பயன்படுத்தவேண்டும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. திருவண்ணுமலை நகராட்சி எல்லைக்குட்பட்ட உயர் நிலைப்பள்ளிக்கூடங்களில் 4, 5, 6, பாரங்களில் படிப்பவர்கட்கு ஆண், பெண், சாதி, மத, குல வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கீழ்க்குறித்துள்ள வாறு திருவாசகத்தில், சிவபுராணத்தில் 32 அடிகளும், மற்ற மூன்று அகவல்களில் அதாவது 2, 3, 4-ல் ஏதேனும் ஒன்றும், திருவெம்பாவை 20 பாடல்கள், திருச்சதகம் 10 பாடல்

கள், திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்கள் ஆக 40 பாடல்களையும் மனப்பாடஞ் செய்து சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பு விக்கவேண்டும். வாய்மொழியாகக் கேட்கும் வினாக்களுக்கும் விடையிறுத்தல் வேண்டும்.

தேர்வுப்பாடற் குறிப்பு :—

1. சிவபுராணம் அடி 1 முதல் 32 வரை 'நமச்சிவாய வாஅழ்க' என்பது முதல் 'மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்பது வரை — அடிகள் 32

2. கீர்த்தித் திருவகவல் அடி 115 முதல் 146 வரை 'அரியொடு பிரமற்கு' என்பது முதல் 'ஒலிதரு கயிலையுயர் கிழவோனே' என்பது வரை — அடிகள் 32

3. திருவண்டப்பகுதி அடி 1முதல் 28வரை 'அண்டப்பகுதியின்' என்பது முதல் 'அனைத்தனைத் தவ்வயினடைத்தோன்' என்பது வரை — அடிகள் 28

4. போற்றித் திருவகவல் அடி 137 முதல் 168 வரை 'பாரிடை ஐந்தாய்' என்பது முதல் 'அருளிட வேண்டும் அம்மான் போற்றி' என்பது வரை — அடிகள் 32

5. திருவெம்பாவை — பாடல்கள் 20

6. திருச்சதகம் (ஒவ்வொரு தலைப்பிலும் முதற்பாடல் வீதம்) 10 தலைப்புக்களிலும் சேர்த்து — பாடல்கள் 10

7. திருப்பள்ளியெழுச்சி — பாடல்கள் 10

ஆகப் பாடல்கள் 40

இ. மேல் 'ஆ' பிரிவிற் குறிக்கப்பெற்ற திருச்சதகம் 10 பாடல்களுக்கும் திருப்பள்ளியெழுச்சி 10 பாடல்களுக்கும் மாறாக

வேறு இருபது திருவாசகப் பாடல்களை 4 ஆண்டுகட்கொரு முறை அமைக்கத் தேர்வுக்குழுத் தலைவருக்கு உரிமையுண்டு. மற்றப் பகுதிகள் எப்பொழுதும் பாடமாக இருத்தல்வேண்டும்.

ஈ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு; 50 கூறுகள்; இரண்டு மணி நேரம்; பரிசுத் தேர்வுக்குரிய பாடல்களில் கண்ட பொருளைப்பற்றியும், சொற் சுவை பொருட்சுவைகளைக் குறித்தும் வினவப்பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு ; 50 கூறுகள் ; மேற்படி திருவாசகப் பாடல்களையும் (தேர்வுக் குழுவினர் கேட்கும் பாடல்களை) மனப் பாடமாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்புவிக்க வேண்டும்.

உ. இப்பரிசுக்குரிய தேர்வுகளை நடத்த ஒரு தேர்வுக் குழு அமைக்கப்பெறும். திருவண்ணாமலை நகராட்சி மன்றத் தலைவரும் (சேர்மென் முனிசிபல் கவுன்சில்), திருவண்ணாமலை நகராட்சி ஆணையரும் (கமிஷனர் முனிசிபாலிடி), பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது அவர்களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும், இத்தேர்வுக் குழுவின் உறுப்பினர் ஆவர். திருவண்ணாமலை நகராட்சி மன்றத் தலைவரே தேர்வுக் குழுவின் தலைவர் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவர். அவர் தீர்ப்பே முடிவானது.

ஊ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் திருவண்ணாமலை நகர மன்றத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய இரண்டு தேர்வுகளும் டிசம்பர்த் திங்களில் தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் ஒரிடத்தில் நடைபெறும்.

எ. பரிசுத் தேர்வில் முதல் கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்து), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 35 (ரூபாய் முப்பத்தைந்து), மூன்றுவது கூறு பெற்றவர்க்கு மூன்றுவது பரிசு ரூ. 30 (ரூபாய் முப்பது), நான்காவது கூறு பெற்றவர்க்கு நான்

காவது பரிசு ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து) ஆக நான்கு பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஏ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வத் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத்தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நாலுபேரை மேல் (ஈ) பிரிவில் குறித்த வாறு டிசம்பரில் நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

4. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசுபெறற் குரியரல்லர்.

5. இப்பரிசுகள் மார்கழித் திங்களில் திருவாதிரை விண்மீன் கூடிய நாளிலோ அல்லது வேறொரு சிறந்த நாளிலோ, திருக்கோயில் முன்மண்டபத்திலோ அல்லது நகரமன்றத்தினர் கூடும் மண்டபத்திலோ (முனிசிபல் கவுன்சில் ஹால்) பரிசு வழங்குவதற்கெனக் கூட்டிய ஒரு பொதுக்கூட்டத்தில் அளிக்கப் பெறும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல் ஆகியவற் றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவேயிருத்தல் வேண்டும். எஞ்சிய தொகை மூலதனத்தோடு சேர்க்கப்பெறல்வேண்டும்.

7. முதலீடுசெய்யப்பெற்றுள்ள இம்முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக் காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்திலுள்ள ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துக் குத் தொகை அனுப்பிய விவரமும், இக்கட்டளை நிறுவியவர் கட்கும், அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எந்த முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டிலேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத்தொகை ரூ. 135 (ரூபாய் நூற்றுமுப்பத்தைந்தும்) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து பிரந்தரத் தலைவர் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் சங்கத்துத் தலைவர் அவர்கள் அத்தொகையைக்கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலுள்ள குமரகுருபரன் கலைக்கோயில் நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை நிறுவியவர்கட்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு :— திருவண்ணாமலை நகரமன்றம் 1953-ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ம்நாள் நடந்த கூட்டத்தில் நிர்மான எண் 368-ன் படிக்கு இவ்நிதியை ஏற்று நடத்த ஒப்புறுதியளித்தது. முதற் பொருள் திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் அவர்களின் 7—10—53-ஆ கொண்ட கடிதத்தால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

திருப்பனந்தாள்
9—10—1953. } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's office on 12-10-53 as No. 62 of 1953 of Book 4, Volume 45, Pages 32-36.

## 126

## Sri Kumaragurupara Swamigal Memorial Tamil Prize in the University of Calcutta Capital Rs. 3500

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Sri Kasi Mutt, Tirupanandal for encouragement of Tamil education in the University of Calcutta in the name of Sri Kumaragurupara Swamigal, a great Tamil Saint and Scholar of the 17th

century who by the grace of Lord Senthilandavan got the power of speech in his 5th year and sang Kanthar Kalivenba, who was honoured by being garlanded by Sri Goddess Meenakshi with pearl-necklace at Madura for his inspired songs (viz., Pillai Tamil) in Her praise, who composed "Neethi-nerivilakkam at the request of king Tirumalai Naick for inculcating worldy wisdom to the rich and the poor, who was initiated by Sri Masilamani Desikar in the saintly order of the Dharmapuram Adhinam, who sang Pandaramummani-kovai in praise of that pontiff, who visited the holy shrines of Chidambaram and Tiruvarur and sang Mummanikkovai Nanmanimalai etc., who made a pilgrimage to Benares and sang Kasi Kalambakam and Sakalakalavalli Malai and who, riding on a lion, interviewed the Nawab at Benares during the reign of Emperor Aurangazeb who having been deeply and devoutly impressed by the greatness of the Swamiji very liberally helped him in all his activities viz., re-establishment of Sri Viswanath Mandir, erection of Kedar Ghat and Kedareswarar Mandir on the West Bank of the Ganges and founding a charitable institution nearby which are living monuments to-day of the Saint's mental and moral greatness. This endowment shall be styled "Sri Kumara-gurupara Swamigal Memorial Tamil Prize in the University of Calcutta."

2. This endowment shall consist of Government Securities of the face value of Rs. 3500 (Rs. Three thousand five hundred only) invested in 3% Conversion Loan of 1946 fetching interest at 3% per annum. The administration of the fund shall vest in the University of Calcutta.

3. (*a*) Out of the interest accruing on the capital a cash prize of Rs. 100 (Rs. One hundred only) shall be awarded annually, at the convocation to the student of the University

of Calcutta who, among the candidates passing the Intermediate examination of the University at their first appearance, secures the highest percentage of marks in Tamil.

(*b*) The prize shall be awarded irrespective of caste, creed, sex, or nationality.

4. (*a*) The amount of the prize may vary according to the interest received every year. It shall also be at the discretion of the University to raise the amount of the prize or the number of prizes according to the interest received from time to time.

(*b*) If in any year or series of years the prizes be not awarded under clause 3 (a) supra, the unspent prize amount shall be sent to the Benares Hindu University Benares for purchase of Tamil and English books on Saiva Siddhanta Philosophy and this fact shall be intimated to the Donor or his successors-in-interest.

(*c*) The Benares Hindu University Benares shall on receipt of the amount or amounts as per clause 4 (b) supra, purchase Tamil and English books on Saiva Siddhanta Philosophy, add them to the Benares Hindu University library and intimate the Donor or successors-in-interest the list of books purchased.

5. The University shall at the end of each year communicate to the Donor or his successors-in-interest the name and address of the prize]winner, the amount sent to Benares Hindu University, Benares as per clause 4 (b) supra and the amount at credit at the end of each year.

6. The University shall have powers to re-invest the capital fund from time to time in highest interest yielding Government Securities.

7. The income from the endowment and the accumulations thereto shall not be diverted to any purpose other than those intended by the Donor.

---

The syndicate of the University of Calcutta accepted the endowment in its meeting on 1—10—1953 and the amount of Rs. 3500, has been sent to the University of Calcutta and the receipt of the amount acknowledged by the Registrar in his letter A/870 dated 19—11—53.

## 127

## சிதம்பரத்தில் பல்லாண்டு விளக்கு நிதி ரூ. 5000

திருவிசைப்பா (9-ம் திருமுறை) அருளிய சிவனடியார்கள் ஒன்பதின்மருள் ஒருவரும், திருவீழிமிழலையில் வாழ்ந்தவரும், விறகு விற்பதால் வரும் ஊதியத்தைக் கொண்டு நாடோறும் தில்லையில் ஒரு சிவனடியாரை உண்பித்தவரும், சிவபெருமானே நள்ளிரவில் போந்து கூழுணவு பெற்றுக்கொண்ட பேறு பெற்றவரும், திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்னும் தலங்களுக்குத் திருவிசைப்பா அருளியவரும், நடராஜப் பெருமானுக்குத் தவிட்டையே அமுதாக நிவேதனஞ் செய்த வரலாறு உடையவரும், தில்லையில் தேரோடும்படி **திருப் பல்லாண்டு** பாடிய சிவஞானியுமாகிய சேந்தனாரை நினைவு கூர்தற் பொருட்டும், அவர் அருளிய திருப்பல்லாண்டுப் பாசுரங்களை யாவரும் ஓதியும் கேட்டும் நல்வாழ்வு அடைதற்பொருட்டும், இச்சாசனத்தில் 3-வது பாராவில் விவரித்துள்ள தருமங்களைச் செய்தற்பொருட்டும், திருப்பனந்தாள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இந்நிதி நிறுவப் பெற்றது. இது "தில்லையில் (சிதம்பரத்தில்) பல்லாண்டு விளக்கு நிதி" எனப் பெயர் பெறும்.

2. இதன் சேர்க்கையில் (ஷெடியூலில்) விளக்கம் கண்டிருப்பதும், நமக்குச் சொந்தமாய் நாம் சர்வசுதந்திரத்துடன் அனுபவித்து வருகிறதுமான, திருப்பனந்தாள் வட்டம், திருப்பனந்தாள் கிராமத்தில் அருணசடேசுவரசுவாமி சன்னிதித் தெருவில் தென்பக்கத்தில் நம்மால் கட்டப்பெற்றுள்ள கடை

வகையறாக் கட்டிடத்திலிருந்து கிடைக்கும் வாடகை வருமானத்தில் மேற்படி கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கும் (அதாவது மராமத்துச் செய்வதற்கும்) மேற்படி மனை, கடைக்கட்டிடம் இவற்றுக்கு வரிசெலுத்த வேண்டியிருப்பின் அதனைச் செலுத்துவதற்கும் மேலான செலவுத் தொகை வகையறா போக எஞ்சிய நிகர வருமானம் மேற்படி 3-வது பாராவில் விவரித்துள்ள தருமத்தைச் செய்யப் பயன்படுத்தப்பெறும்.

3. மேற்படி நிகர வருமானம் (1) தில்லையில் நடராஜப் பெருமான் திருநடம்புரியும் பொன்னம்பலத்தின் தெற்கு வாயில் மேற்குப்புறச் சுவரில் துவஜஸ்தம்பத்துக்கருகில் நம்மால் 3-7-1953ல் நிறுவப்பெற்றுள்ள திருப்பல்லாண்டுப் பாசுரச் சலவைக் கற்களுக்கு மூன்று மாதமோறும் விளக்கிடுவதற்குரிய செலவுக்கும் (2) மிச்சத்தொகை மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் நடராஜப் பெருமான் சிவமே நிலைய தில்லைத் திருவீதியில் தேரில் திருவுலா வருங்காலத்தில் திருமுன்பு நம்மால் நியமிக்கப்பெறும் ஓதுவார்கள் திருப்பல்லாண்டு விண்ணப்பம் செய்வதற்கு ஊதியம் அளிக்கவும் பயன்படுத்தவேண்டும்.

4. இதிற்குறித்த சொத்து நம் பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலுமே இருந்துவரும்.

5. இத்தருமம் நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் நடத்தப்பெறும்.

6. இவ்வருமானம் இதில் விவரித்துள்ளவாறே பயன்படுத்தப் பெறல்வேண்டும்.

7. இந்த டிரஸ்டுப் பத்திரச் சேர்க்கையில் கண்ட சொத்தின் மதிப்பு ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்.)

**சேர்க்கை-ஷெடியூல்**

தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்ட், திருவிடைமருதூர் சப்ரிஜிஸ்தரைச் சேர்ந்த கும்பகோணம் தாலுக்கா திருப்பனந்தாள் வட்டம் திருப்பனந்தாள் கிராமத்தில்

ரீ. சர்வே. நெ. 248-1 நத்தம். ஸ்ரீ அருணசடேசுவர சுவாமி கோயில் சன்னிதித்தெரு தென்சரஹில் வீதிக்குத் தெற்கு, சடையப்ப செட்டிவீடு கொல்லிக்கும், ஸ்ரீ அருணசடேசுவர சுவாமி கோயில் வீட்டின் ஹாலுக்கும் வடக்கு, டெ. வீட்டின் திண்ணைக்கும் ஆலோடிக்கும் மேற்கு. மேலவீதிக்குக் கிழக்கு இதற்குட்பட்ட ஓட்டுவில்லைக் சட்டிடம் (ஆறு கடைகளும் ஒரு அறையும்)

கிழமேல் ஜாதியடி 104

தென்வடல் மேற்புறம் ஜாதியடி 5

டெ. கீழ்ப்புறம் ஜாதியடி 9–1/4

திருப்பனந்தாள் }
14—10—1953. }

*(Sd) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 20-10-1953 as 2436 of 1953 book No. 1 volume No. 1041 pages 480-81.

## 128

## ஸ்ரீ காசியில் அரிமர்த்தன பாண்டியன் நினைவு ஆவணித் திங்கள் அன்னம்பாலிப்பு ரூ. 7000

திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளைத் தனது முதல் அமைச்சராகப் பெற்ற பேறுடையவரும், சிவபெருமான் இடைக்காடரது பிணக்குத் தீர்த்த காலத்திய பாண்டிய அரசனுகிய குலேச பாண்டியனது திருமகனும், இறைவன் திருவாதவூரடிகளுக்கு உபதேசித்து ஆட்கொண்டமை – ஆவணித் திங்களில் நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்தமை – வந்தி கைப்பிட்டு வாங்கிப் பருகி, ஆளாய் மாறுபட்டு, ஒரு கூடை மண் கொட்டி, வைகைக் கரையினையுயரச் செய்தமை – கோவான் மொத்துண்டமை முதலிய திருவிளையாடல்கள் நிகழப் பெற்ற மன்னவரும், அறத்தாற்றின் ஈட்டப்பட்டவையாகவின் திருப்பெருந்துறையில் ஆலயம் அமைக்கவும் அடியார்களுக்கு

அளிக்கவும் வாதவூரரால் பயன்படுத்தப்பெற்ற பொருள் படைத்தவரும், 'உம்மை நான் அடுத்த நீரால் உலகியல் வேதநீதி செம்மையால் நன்றுத் தெளிந்தது' என்று மாணிக்கவாசகரால் புகழப்பெற்றவரும், "நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல் பரகதி பாண்டியர்க்கருளினை" என்று திருவாசகம் போற்றித் திருவகவலிலும், "வரகுணனும் தென்னவன்" (306) "சிற்றம் பலம் புகழும் மயிலோங்கிருங்களியானை வரகுணன் வெற்பின் வைத்தகயல்" (327) என்று திருக்கோவையாரிலும் குறிக்கப் பெற்றவரும், பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் "பெரிய அன்பின் வரகுண தேவர்" என்றும், நம்பியாண்டார் நம்பிகள் கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தத்தில் "பொடியேர் தருமேனியன்.....வரகுணன் தன் முடியேதரு கழலம்பலத்தாடிதன் மொய்கழலே" என்றும் புகழப்பெற்ற இரண்டாம் வரகுணன் என்று ஆராய்ச்சியாளர் ஒருசாரரால் கருதப்பெறும் சிவபக்திச் செல்வரும் ஆகிய அரிமர்த்தன பாண்டியனை நினைவுகூர்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது "ஸ்ரீ காசியில் அரிமர்த்தன பாண்டியன் நினைவு ஆவணித் திங்கள் அன்னம்பாலிப்பு" எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 7000 (ருபாய் ஏழாயிரம்) பெறுமானமுள்ள 3 சதவீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. 5% கன்வர்ஷன்லோன் ஆப் 1946 சி ஏ 131602 ரூ. 1000; சி ஏ 131603 ரூ. 1000; சி ஏ 133501 ரூ. 5000; ஆகக் கூடுதல் ரூ. 7000. இந்நிதி நம்மாலும் நமக்குப் பின் உரிமை உள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்றுவரும்.

3. ஸ்ரீ காசியில் நம்முடைய சத்திரத்தில் நாடோறும் நடைபெற்று வருகின்ற அன்னதானத்துடன், இம்மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டுதோறும் ஆவணிமாசம் முழுதும் பிராமண போஜனமும், மகேசுவர பூசையும் (ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பும்) நடத்தப் பெற்றுவரும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் காலவிலக்கு ஏற்பவும் தயாரிக்கப்பெறும் திட்ட ஓர் தாவின்படி இவ்வன்னம் பாலிப்பு நடைபெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப்பெற மாட்டாது. முதற்பொருள் அரசினரால் திரும்பியளிக்கப் பெறின் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன்பத்திரங்களி லேயே திரும்பவும் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள்
15—11—1953.

*(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 19-11-1953 as No. 67 of 1953 Book No. 4, Volume 45, pages 43-44.

## 129

## ஸ்ரீ காசியில் திருமூலநாயனார் நினைவு ஐப்பசி மாத அன்னம்பாலிப்பு சேமவைப்பு ரூ. 7000

சுந்தரநாதர் என்ற இயற்பெயரினரும், அணிமாதி சித்தி பெற்றவரும், நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகளில் ஒருவரும், திருக்கைலாசத்தினின்று புறப்பட்டுப் பொதிகை மலையை நோக்கி வரும் வழியில் திருக்கேதாரம், ஸ்ரீ காசி, ஸ்ரீ சயிலம், திருக்காளத்தி, காஞ்சி முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டே திருவாவடுதுறைக்கு வந்தவரும், அங்கு வதிந்தகாலை யில் ஒருநாள் சாத்தனூரில் இடையர்குலத்துத் தோன்றிய மூலன் என்பான் இறக்க ஆக்களின் துயரை நீக்கக் கருதி மூலனின் உடலில் பாய்ந்து திருமூலராய் எழுந்த தவமுனிவரும், அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவரும், திருத்தொண்டத் தொகை யில் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் " நம்பிரான் திருமூலன் அடி யார்க்குமடியேன் " என்று சிறப்பிக்கப்பெற்றவரும், மூலனுட லிற் புகுந்தபின் திருவாவடுதுறையில் மூவாயிரமாண்டு தவஞ் செய்திருந்து ஆண்டுக்கொருபாடல் வீதம் மூவாயிரம் பாடல்கள் கொண்ட தமிழ் மூவாயிரம் எனப்பெறும் திருமந்திரம் (10-ந் திருமுறை) அருளியவரும், கி. பி. 900-க்கு முன்னர் வாழ்ந்த

வரும், ஐப்பசி அசுவதிநாளில் சிவாசாயுச்சியம் பெற்றவருமாகிய திருமூலநாயனாரை நினைவுகூர்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது "ஸ்ரீ காசியில் திருமூலநாயனார் நினைவு ஐப்பசி மாத அன்னம்பாலிப்பு" எனப் பெயர்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 7000 (ரூபாய் ஏழாயிரம்) பெறுமானமுள்ள 3 சத வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 ரெ. சி ஏ 135478 ரூ. 5000; ரெ. சி ஏ 135476 ரூ. 2000; ஆகக் கூடுதல் ரூ. 7000. இந்நிதி நம்மாலும் நமக்குப் பின் வரும் உரிமை உள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3. ஸ்ரீ காசியில் நம்முடைய சத்திரத்தில் நாடோறும் நடைபெற்றுவருகின்ற அன்னதானத்துடன், இம்மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் முழுதும் பிராமண போஜனமும், மகேசுவர பூசையும் (ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பும்) நடத்தப்பெற்று வரும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் காலவிலக்கு ஏற்பவும் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப் தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடைபெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப்பெற மாட்டாது. முதற்பொருள் அரசினரால் திரும்பியளிக்கப் பெறின் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே இரும்பவும் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள்
3—12—1953.

(Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 12-12-1953 as 69 of 1953 Book No. 4 Volume No. 45 pages 46-47.

## 130

## காஞ்சிபுரத்தில் கமலிவெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு சேமவைப்பு ரூ. 5000

கமலி என்ற திருவாரூரிற் பிறந்தவரும், தருமபுரவாதீனத்து நான்காவது குரவராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடத்தில் சைவ சந்நியாசம் பெற்றவரும், ஸ்ரீ காசியில் ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகளிடத்தில் கல்வி பயின்று தென்மொழி வடமொழிக் கடல்களைக் கரைகண்டு ணர்ந்தவரும், தருமையாதீனத்து ஐந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகளிடம் ஞானதீக்கை பெற்ற வரும், திருநெல்வேலியில் சிந்து பூந்துறையில் தங்கியிருந்த காளத்துக் கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப்பெறும் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இலக்கணக் கல்வி நிரம்பச் செய்தவரும், கந்தபுராணச் சுருக்கம் இயற்றிய சம்பந்தசரணாலய சுவாமிகள் முதலானவர்களுக்குப் போதகாசிரியராகத் திகழ்ந்த வரும், தருமையாதீன முதற் குரவராகிய குருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த "முத்தி நிச்சயம்" எனும் பண்டார சாத்திரத்துக்குப் பேருரை ஒன்றும் சிற்றுரை ஒன்றும் அரு ளிச் செய்தவரும், சைவசமய சந்தானாசாரியருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிய "சிவஞானசித்தி யார்" எனும் சைவ சித்தாந்த சாத்திரத்துக்கு "ஞானவரண விளக்கம்" எனும் பாஷ்யம் இயற்றியவரும், நீதிகளை விளக்கும் வரலாறு முன்னும் அதற்கியைந்த திருக்குறளைப் பின்னும் அமைத்துப் பாடப்பெற்றதும் - அறம் பொருள் இன்பங்களை விளக்கும் நீதிகட்குத் திருக்குறளும், வீட்டின் பகுதியை விளக்கச் சைவ சமய சந்தானாசாரியருள் ஒருவராகிய உமாபதிசிவா சாரிய சுவாமிகள் அருளிய சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய திருவருட் பயனும் அமைக்கப்பெற்றதும்-இனியஎளிய 196 வெண்பாக்கள் கொண்டதும் ஆகிய முதுமொழிமேல் வைப்பு என்னும் நூலை அருளியவரும், சிதம்பரத்தில் சிவப்பேறு அடைந்தவருமாகிய கமலி வெள்ளியம்பலவாண முனிவரை நினைவு கூர்தற்பொருட்டும், அவர் அருளிய முதுமொழிமேல் வைப்பினை மாணவர் கசடறக் கற்று அதற்குத்தக நின்று நல்

வாழ்வு பெறுதற் பொருட்டும் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசி வாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது 'காஞ்சிபுரத்தில் கமலை வெள்ளியம்பல வாண முனிவர் தினவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு' எனப் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்). இத்தொகை நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும். 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946. இது காஞ்சிபுர நகராட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகை ரூ. 150. இவ்வட்டித் தொகையினின்று ரூ. 140 பரிசாக அளிக்கப் பயன்படுத்தவேண்டும். எஞ்சிய தொகையைப் பரிசுத் தேர்வு நடத்துதல் பரிசளிப்பு விழா முதலிய செலவுகளுக்குத் தேவையிருப்பின் பயன்படுத்தலாம்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. காஞ்சிபுர நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக் கல்விக்கூடங்களில் 4, 5, 6 பாரங்களில் படிக்கும் மாணவர்க்கு ஆண், பெண், சாதி, மத, குல வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கமலை வெள்ளியம்பல வாண முனிவர் அருளிச் செய்த முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் 98 வெண்பாக்களை மனப்பாடஞ் செய்தல்வேண்டும்.

இ. ஆங்கிலயாண்டில் ஒற்றைப்படை எண் உள்ள ஆண்டில் முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் ஒற்றைப் படை எண் உள்ள பாடல்களும், ஆங்கில ஆண்டில் இரட்டைப் படை எண் உள்ள ஆண்டில் இரட்டைப்படை எண் உள்ள பாடல்களும் இப்பரிசுப் போட்டிக்குப் பாடமாகும்.

ஈ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு ; 50 கூறுகள் ; இரண்டு மணி நேரம் ; முதுமொழிமேல் வைப்பில் போட்டிக்கென்றே அமைக்கப்பெற்ற 98

வெண்பாக்களிற் கண்ட பொருளைப்பற்றியும், சொற்சுவை பொருட்சுவை குறித்தும் விளுவப்பெறும். இரண்டாவது வாய்மொழித்தேர்வு ; 50 கூறுகள் ; அந்த 98 வெண்பாக்களில் தேர்வுக்குழுவினர் கேட்கும் எல்லாப் பாடல்களையும் மனப்பாட மாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்கவேண்டும்.

உ. இப்பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தலைவரும், பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது அவர்க ளால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும் இத்தேர்வுக் குழுவின் உறுப்பினராவர். காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக் குழுவின் தலைவரும் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவார். இத்தேர்வுக் குழுத் தலைவர் தீர்ப்பே முடிவானது.

ஊ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங் களைத் தக்கம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் காஞ்சிபுரம் நகர் மன்றத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வு டிசம்பர்த் திங்களில் தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

எ. பரிசுத் தேர்வில் முதல் கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்து), இரண்டாவது கூறு பெற்ற வர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 40 (ரூபாய் நாற்பது), மூன்ரு வது கூறு பெற்றவர்க்கு மூன்ரூவது பரிசு ரூ. 30 (ரூபாய் மூப்பது), நான்காவது கூறு பெற்றவர்க்கு நான்காவது பரிசு ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து) ஆக நான்கு பரிசுகள் அளிக்கப் பெறும்.

ஏ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வத் தலைமையாசிரியர் ஆவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்கு பேரை மேல் (ஈ) பிரிவில் குறித்தவாறு டிசம்பரில் நடத்தப்பெறும் பரிசுத்

தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

8. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறத் தகுதியாகார்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன்நிறுவப் பெற்றுக் காஞ்சிபுர நகர ஆட்சித் தலைவரால் நடத்தப் பெற்று வரும் மூவர் தேவாரப் பரிசு முதலியன அளிக்கப்பெறும் நாளில் இப்பரிசுகளும் அளிக்கப்பெறல் வேண்டும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே இருத்தல் வேண்டும். எஞ்சிய தொகைகள் மூலதனத்தோடு சேர்க்கப்பெறல் வேண்டும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றால் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்கட்கும் அவர் கட்குப் பின் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை ரூ. 140 (ரூபாய் நூற்று நாற்பதும்) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துத் தலைவர் அத் தொகையைக் கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலுள்ள குமரகுருபரன் கல்லூரி நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி

நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத் தியவர்கட்கும் அவர்கட்குப் பின் வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

திருப்பனந்தாள்
2—11—1953. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 21-1-1954 as No. 3 of 1954, Book No. 4, Volume 45 pages 50 to 54.

## 131

## திருப்பனந்தாள் ஸ்ரீ அருணசடேசுவரர் கொள்ளிடத் தீர்த்த விழா நிதி ரூ. 12,000

தமிழும் ஆரியமும் கரைகண்டுணர்ந்து ராஜபண்டிதன் என்னும் பட்டம் பெற்றவரும் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தியவரும், தாராசுரத்தில் இராசராசேச் சரம் என்னும் சிவாலயத்தை எடுப்பித்தவரும், வழிவழிச் சிவ பக்திச் செல்வம் மிக்கவரும், கவிராசசிகன் எனப்பெற்ற ஒட்டக் கூத்தரால் உலாப் பாடப்பெற்றவரும் ஆகிய இரண்டாம் இராச ராச சோழன் (1146-1163) தன் பெயரால் இராஜகம்பீரன் திருவீதி என்ற பெருவழியை ஏற்படுத்தித் திருப்பனந்தாள் ஸ்ரீ காடகேச்சரத்து நாயகர் கொள்ளிடத்தில் தீர்த்தமருளுதற்கு எழுந்தருளச் செய்த அரிய செயலை முன்னிட்டு, அதுபோலவே இனியும் ஆண்டுதோறும் சித்திரைப் பெருவிழாவில் கொள்ளி டத்திற்கு அருணசடேசுவரரை (பஞ்சமூர்த்திகளையும்) எழுந் தருளச் செய்து தீர்த்தவாரி மண்டபப்படி நடத்துவித்தற் பொருட்டு இந்நிதி திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது "திருப்பனந்தாள் ஸ்ரீ அருணசடேசுவரர் கொள்ளிடத் தீர்த்த விழா நிதி" எனப்பெறும்.

2. இதன் சேர்க்கையில் விளக்கம் கண்டிருப்பதும், நமக் குச் சொந்தமாய் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்து

வருகிறதுமான திருப்பனந்தாள் வட்டம் திருப்பனந்தாள் இரா மத்தில் மேல வீதி மேல்பக்கம் மனையில் நம்மால் புதிதாகக் கட்டப்பெற்றுள்ள மேல்மாடியுள்ள கடைக் கட்டிடமும், அதன் பின்புறம் இனி ஏற்படும் கட்டிடங்களும் உள்பட ஆகிய இவற்றி னின்று கிடைக்கும் வாடகை வருமானத்தில் 4-ல் 3பங்கு வருமா னம் பின் 3-வது பாராவில் விவரித்துள்ளவாறு கொள்ளிடத் தீர்த்த விழாவை நடத்தத் திருப்பனந்தாள் ஸ்ரீ அருணசடேசு வரர் தேவஸ்தானத்துக்கு அளிக்கப்பெறும்.

3. மேற் தொகையைக் கொண்டு திருப்பனந்தாள் திருத் தாடகையீச்சரத்தில் எழுந்தருளி யுள்ள ஸ்ரீ அருணசடேசுவர ருக்கு ஆண்டுதோறும் சித்திரை மாசத்தில் நடைபெறும் பெரு விழாவில் பத்தாம் திருநாளில் அணைக்கரையில் கொள்ளிடநதிக்கு ஸ்ரீ அருணசடேசுவரரை (பஞ்ச மூர்த்திகளையும்) எழுந்தரு ளச் செய்து தீர்த்தவாரி மண்டபப்படி மேற் தேவஸ்தானத்தார் நடத்துவித்தல் வேண்டும்.

4. (அ) மேற் கொள்ளிடத் தீர்த்த விழாவை நடத்துவ தற்குத் தரப்பெறும் தொகை அந்தந்த ஆண்டு வாடகை வருமா னத்துக்கு ஏற்பக் குறைக்கவும் கூட்டவும் பெறும். எந்த ஆண்டிலாவது ஆண்டு வாடகை வருமானம் விருத்தியாம்சம் ஆனால் இத்திருவிழாத் தருமத்திற்கென ரூ. 500 (ரூபாய் ஐந் நூறு) மட்டுமே அளிக்கப்பெறும்.

(ஆ) முன் 3-வது பாராவில் குறித்தவாறு கொள்ளிடத் தில் தீர்த்தவாரி விழா நடைபெறுவிடில், அதற்கென அந்த ஆண்டில் ஒதுக்கப்பெற்ற தொகை நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் இதுபோன்ற இதர நற்காரியங் களுக்கு விருப்பப்படி பயன்படுத்தப்பெறும்.

5. மேலே குறித்த செலவினத்திற்கு என்று ஒதுக்கிய தொகை போக எஞ்சியுள்ள வருமானம் (அதாவது மொத்த வாடகை வருமானத்தில் 4-ல் 1பங்கு) மேற் கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கும், மேற் மனை கட்டிடம் இவற்றிற்கு வரி செலுத்த வேண்டியிருப்பின் அதனைச் செலுத்துவதற்கும், தேவையிருப்பின் விருத்தியாம்சங்களுக்கும் செலவிடப்பெறும்.

பின்னும் எஞ்சியுள்ள தொகை நம்மாலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களாலும் தம் விருப்பம்போல் பயன்படுத்த உரிமையுண்டு.

6. இதிற் குறித்த மனையும் கட்டிடங்களும் நம் சுவாதீனத்திலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்கள் சுவாதீனத்திலும், அனுபவத்திலும், பரிபாலனத்திலும் இருந்துவரும்.

7. இந்த டிரஸ்ட் பத்திரத்தில் கண்ட கட்டிடத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு வரக்கூடிய உத்தேச வாடகை வருமானம் ரூ. 600 (ரூபாய் ஆறுநூறு); சொத்தின் உத்தேச மதிப்பு ரூ. 12,000.

**வெடியூல்**

தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்ட்டு திருவிடைமருதூர் சப் ரிஜிஸ்தரைச் சேர்ந்த கும்பகோணம் தாலுக்கா திருப்பனந்தாள் வட்டம், திருப்பனந்தாள் கிராமத்தில்,

ரி. சர்வே. நெ. 264-22 நத்தம். மேல வீதி மேல் சரகில் வீதிக்கு மேற்கு, நம்முடைய ஓட்டு வீடு கொல்லிக்கும் சந்துக்கும் வடக்கு, நம்முடையதான கொல்லிக்கும் நாகராஜ செட்டியார் தோட்டத்திற்கும் கிழக்கு, நாகராஜ செட்டியார் கூறை வீட்டுக்கும் தோட்டத்திற்கும் தெற்கு, இதற்குட்பட்ட தென்வடல் ஜாதியடி 61-1/2, கிழமேல் ஜாதியடி 86-1/2 டி மனையில் புதிதாக்கக் கட்டியிருக்கும் கடைக் கட்டிடம் மாடி அறைகள் உட்படவும் டி கட்டிடம் பின்புறம் இனி ஏற்படும் கட்டிடங்கள் உட்படவும்.

திருப்பனந்தாள்
2—1—1954.

(Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at the Sub Registrar's Office, Tiruvidamaruthur on 2—1—54 as No. 1 of 1954, of Book No. 1, Volume No. 1049 pages 267—269.

## 132

## The Raja of Karvetnagar Sri Bhommaraju Bahadur Sri Maharajulingaru Memorial Feeding Charity At Rameswaram Capital Rs. 5,000

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl., Kasi Mutt, Tirupanandal in memory of Sriman Mahamandaleswara Katari Salwa Makaraju Umade Rajaha Maharaja Rajasri Bommaraju Bahadur Sri Maharajulingaru of Karvetnagar who made the gift of Padarla village (Padiri) together with Chintalanettham Kandiga in Karvetnagaram Taluk to our Predecessor-in-title Silasri Kasivasi Sadayappa Tambiran Swamigal Avergal in the year 1800 A. D. (Salivahana Saka Year 1721, Roudri Year, Chitra month, 5th day after the fullmoon) by a gift deed for feeding Brahmins at Rameswaram. Now that under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948—Madras Act XXVI of 1948 – the said village was taken over by Government and a cash compensation of Rs. 4817 (Rs. Four thousand eight hundred and seventeen only) in respect of the said village was deposited with the Estates Abolition Tribunal, Chittoor, by the Government and that on a petition put in by His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Proprietor and Trustee of the village, in O. P. No. 2062/1953 before the Tribunal, Chittoor for this payment of the amount and the same having been paid to him, this endowment is made in memory of the said Sri Bhommaraju Bahadur Sri Maharajulingaru Rajah of Karvetnagar for daily feeding of Brahmins at Rameswaram. This endowment shall be styled as "The Raja of Karvetnagar Sri Bhommaraju Bahadur Sri Maharajulingaru memorial feeding charity at Rameswaram."

2. The endowment consists of Promissory Note to the face value of Rs. 5000 (Rs. Five thousand only) fetching interest at 3% per annum, purchased from out of the compensation amount received from the Government (3% Conversion Loan of 1946 G. P. Note No. C A 135579 for Rs. 5000. The administration of the fund shall vest in us and our Successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for the feeding of Brahmins in our choultry, at Rameswaram.

4. The feeding shall be in accordance with the Thitta Japtha prepared annually.

5. The endowment shall not be diverted to any other purpose than the one specified above.

Tirupanandal
2—1—1954. } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamaruthur Sub Registar's Office on 2—1—54 as No. 2 of 1954 of Book No. 4, Volume No. 45, pages 49—50.

## 133

## The Raja of Karvetnagar Sri Venkata Perumal Rajalingaru Memorial Feeding Charity At Kumbakonam Capital Rs. 3500

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Kasimutt, Tirupanandal in memory of Sriman Mahamandaleswara Katara Salwa Makaraju Umade Raja, M. R. Ry., Venkata Perumal Raja Bahadur Dev Maharajulingaru, the Raja of Karvetnagar who made the gift of Chavarambaka village,

Narayanavanam Taluk, Karvetnagaram to our Predecessor-in-title Sri Kasivasi Sadayappa Tambiran Swamigal Avergal in the year 1817 A. D. (Salivahana year 1739]; Easwara year, Jeshta month, S. 15 Friday) by a gift deed for feeding Brahmins at Kumbakonam. Now that under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948–Madras Act XXVI of 1948, the said village wsa taken over by Government and a cash compensation of Rs. 3185 (Rs. Three thousand, one hundred and eighty five only) in respect of the said village was deposited with the Estates Abolition Tribunal, Chittoor, by the Government and that on a petition put in by His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Proprietor and Trustee of the village in O. P. No. 2037 of 1953 before the Tribunal, Chittoor for the payment of the amount and the same having been paid to him, this endowment is made in memory of the said Sri Venkata Perumal Rajalingaru of Karvetnagar for feeding Brahmins on the Masi Makham day every year at Kumbakonam. This endowment shall be styled as "The Raja of Karvetnagar Sri Venkata Perumal Rajalingaru Memorial Feeding charity at Kumbakonam."

2. This endowment consists of Government Promissory Notes to the face value of Rs. 3500 (Rs. Three thousand five hundred only) fetching interest at 3% per annum, purchased from out of the compensation amount received from the Government (3% Conversion Loan of 1946) (G. P. Note No. C A 112521 for Rs. 500 ; C A 132812 for Rs. 1000 and C A 135571 for Rs. 2000 ; total Rs. 3500. The administration of the fund shall vest in us and our successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for feeding Brahmins on the Masi Makham day every year at Kumbakonam.

4. The feeding shall be conducted in accordance with the Thitta Japtha prepared at the time each year which will depend upon the amount of interest realised and the price of commodities then current.

5. This endowment shall not be diverted to any purpose other than the one mentioned above.

Tirupanandal
2—1—1954. } (*Sd*). *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudur Sub-Registrar's Office on 2-1-1954 as No. 1 of 1954 of Book No. 4, Volume No. 45, pages 47-48.

## 134

Installation of Tiruvembavai marble slabs at Tiruvannamalai in Parasakthi Amman Sannithi Rs. 2,500

## 135

Installation of Tirupallandu and Siva Puranam marble slabs, Tiruvembavai and Tirupalli Yeluchi, Decorated cloth to the chariots, Shed to the chariots and Loud speaker Set at Chidambaram etc. Rs. 14,500

## 136

Donation for renovation and electrification of Sakshinatha Swami Temple and decorated cloth to the chariot at Tirupurambiyam (Kumbakonam) Rs. 7,700

## 137

"*Siva Siva*" Neon Sign light at Swamimalai, Kanchipuram Kumara Kottam, Tiruchendore, Tiruthanigai Mylapore Kapaleeswarar Temple etc., Rs. 2,500

## 138

## தில்லையில் இராஜராஜ அபயகுலசேகர சோழன் நினைவு தேவார வைப்பு நிதி ரூ. 16,000

சிவபாத சேகரன் என்ற சிறப்புப் பெயர் பூண்டவரும், அருண்மொழி தேவர் என்ற இயற்பெயரினரும், தில்லைச் சிற்றம்பலத்துக்கு நிபந்தங்கள் பல அளித்து வழிபட்டதன் பயனாகத் தில்லை வாழ் அந்தணரால் இராசராசன் என்று பட்டம் சூட்டப் பெற்றவரும், "திருவாருர்த் தியாகேசர் பதம் பணிந்து செங்கோலோச்சி அலகில் புகழ்பெறு ராஜ ராஜ அபயகுல சேகரன்" என்று திருமுறை கண்ட புராணத்தில் குறிக்கப் பெற்றவரும், "தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார்" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய தஞ்சைத் தளிக்குளத்தைப் பெரிய கற்றளியாக எடுப்பித்து அதற்கு இராசராசேச்சரம் என்று பெயரிட்டவரும், திருமுறைகள் தில்லைக் கூத்தப் பிரான் திருக்கோயிலில் இருந்ததை நம்பியாண்டார் நம்பி வாயிலாக அறிந்து அவற்றை வெளிப்படுத்தி நம்பியைக்கொண்டு திருமுறைகளாக வகுத்த சிவபக்திச் செல்வரும், தஞ்சை இராசராசேச்சரத்தில் மூவர் திருமேனிகளையும் எழுந்தருளுவித்துப் பூசித்தவரும், அத்திருக்கோயிலில் முறையாக நாள் தோறும் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய 48 ஒதுவார்களை நியமித்தவரும்,

"வேங்கை நாடும், கங்க பாடியும்,
தடிகை பாடியும், நுளம்ப பாடியும்,
குடமலை நாடும், கொல்லமும், கலிங்கமும்,
முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டலமும்,
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்,
முன்நீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
.....
கோராச கேசரி வர்ம ரான
உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்"

என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றவரும், 985 முதல் 1014 வரை அரசு செலுத்தியவருமான முதலாம் இராச ராச

சோழன் திருமுறைகளைத் தில்லையில் தொகுத்து முறைப்படுத்திய சிவபுண்ணியச் செயலை நினைவு கூர்தற்பொருட்டும், திருமுறை யெடுத்த தில்லையில் (சிதம்பரத்தில்) அத்திருமுறைகளை நாடோறும் விண்ணப்பிக்கச் செய்து திருமுறைகளைப் பரப்புதற் பொருட்டும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசி வாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது "தில்லையில் (சிதம்பரத்தில்) ராஜ ராஜ அபயகுலசேகர சோழன் நினைவு தேவார வைப்பு நிதி" எனப் பெயர் பெறும்.

2. (அ) இதன் சேர்க்கையில் (ஷெடியூலில்) விளக்கம் கண்டிருப்பதும் நமக்குச் சொந்தமாய் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்து வருவதுமான திருப்பனந்தாள் வட்டம் திருப்பனந்தாள் கிராமத்தில் உள்ள வீடு கடைகள் உட்பட 15 கட்டிடங்களினின்று வரக்கூடிய வாடகை வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்குத் தொகை, பின் மூன்றாவது பாராவில் விவரித்துள்ளவாறு தில்லையில் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார்க்கு ஊதியம் அளிப்பதற்குப் பயன்படுத்தப்பெறும்.

(ஆ) மேற்படி செலவு போக எஞ்சியுள்ள (அதாவது வாடகை வருமானத்தில் மூன்றில் ஒருபங்கு) தொகையிலிருந்து தில்லைத் திருக்கோயில் கிழக்குச் சன்னிதி கோபுரத்தில் தெற்குப் பக்கத்தில் குடவரையில் சிவ சிவ ஒலிமண்டபத்தில் நம்மால் நிறுவப்பெற்றுள்ள சிவ சிவ ஒலிபெருக்கியின் பொருட்டு ஏற்படக்கூடிய (லைசென்ஸ், மின் கட்டணம், ரிப்பேர் முதலிய) எல்லாச் செலவுகளுக்கும் வேண்டியதொகை செலவிடப்பெறும். எஞ்சியுள்ள தொகைகள் மேற்படி கட்டிடங்கள் கடைகள் இவற்றைப் பழுது பார்ப்பதற்கும், மேற்படி மனை கட்டிடங்கள், கடைகள் இவற்றுக்கு வரி செலுத்த வேண்டியிருப்பின் செலுத்தவும், தேவையானால் விருத்தியாம்சம் செய்வதற்கும் செலவிடப் பெறும். இன்னும் எஞ்சியுள்ள தொகைகள், ஒலிபெருக்கியைப் புதுப்பிப்பதற்கு மூலதனமாக (Reserve Fund) சேர்த்து வைக்கப் பெறும்.

3. (அ) தில்லையில் (சிதம்பரத்தில்) நம்மால் நியமிக்கப் பெறும் ஒதுவார் ஒருவர் நாடோறும் தில்லைக் கூத்தப்பெருமான்

திருமுன்னிலையிலும், தில்லைத் திருக்கோயில் கிழக்குக் கோபுரத்தில் தெற்குப் பக்கத்தில் குடவரையில் சிவ சிவ ஒலி மண்டபத்தில் நம்மால் நிறுவப்பெற்றுள்ள சிவ சிவ ஒலிபெருக்கியிலும், காலையிலும், மாலையிலும் தேவாரத் திருமுறைகளை ஓதுதல் வேண்டும். அன்றியும் காலையில் மாணிக்கவாசகர் அருளிய திருப்பள்ளியெழுச்சியும், மாலையில் சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டும் ஓதுதல் வேண்டும். மார்கழி மாசத்தில் திருவாதிரைத் திருவிழா நாட்களில் திருவெம்பாவை ஓதுதல் வேண்டும். ஒவ்வொரு வேளையிலும் ஒரு மணி நேரத்துக்குக் குறையாது சிவவொலி பெருக்கும் திருப்பணியை அவ்வோதுவார் புரிதல் வேண்டும்.

(ஆ) தேவார ஓதுவார்க்கு மாசம் ஒன்றுக்கு ரூ. 30 (ரூபாய் முப்பது) வீதம் சம்பளம் அளிக்கப்பெறும். வாடகை வருமானத்துக்கு ஏற்ப இவ்வுதியம் குறைக்கவும் கூட்டவும் பெறும்.

(இ) தேவாரம் விண்ணப்பிக்கும் ஓதுவாரை நியமிக்கவும் நீக்கவும், நமக்கும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்குமே உரிமையுண்டு.

4. இதிற் குறித்த மனையும் வீடுகளும் கடைகளும் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் சுவாதீனத்திலும், அனுபவத்திலும், பரிபாலனத்திலும் இருந்துவரும்.

5. இத்தருமம் நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் நடத்தப்பெற்றுவரும்.

6. மேலே விளக்கம் பெற்றுள்ள செலவினங்கட்கன்றி வேறு எவற்றுக்கும் இவ்வருமானம் பயன்படுத்தப்படமாட்டாது.

7. இதிற் குறித்த வீடு கடைகளினின்று ஆண்டுதோறும் வரக்கூடிய உத்தேச வாடகை வருமானம் ரூ. 800. இந்தச் சொத்துக்களின் உத்தேச மதிப்பு ரூ. 16,000.

Date 11—1—1954. *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on 11-1-1954 as No. 74 of 1954 Book No. 1, Volume 1050, pages 138 to 141.

## 139

## திருப்பனந்தாளில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் மகேசுவர பூசை நிதி நிலப்பெறுமானம் ரூபா 1,00,000

ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்தில் (17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளால் ஐந்தாவது ஆண்டில் ஊமை நீங்கிக் "கந்தர் கலிவெண்பா" பாடி அருள் பெற்றார்; மதுரை மீனாட்சியம்மை மீது "பிள்ளைத் தமிழ்" பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றார்; திருமலை நாயக்க மன்னன் விருப்பத்திற்கிணங்க "நீதிநெறி விளக்கம்" என்னும் நீதிநூலை அருளினார்; தருமபுரம் ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகளை வழிபட்டுப் "பண்டார மும்மணிக்கோவை" பகர்ந்தார்; ஆரூர், வேளூர் தில்லை தரிசித்து நான்மணி மாலை, முத்துக்குமரசாமி பிள்ளைத் தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை, செய்யுட் கோவை, முதலியன அருளினார்; காசி சென்று "சகலகலாவல்லி மாலை", காசிக்கலம்பகம் முதலியன பாடினார்; இந்துஸ்தானி மொழி கைவரப்பெற்றுச் சிங்கத்தின்மீதேறிச் சென்று முகலாய மன்னனைக்கண்டு அம்மன்னனால் போற்றப்பெற்றுக் கேதார மந்திரம், கேதாரத்துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியவர்களுக்கு வித்யா குருவாக திகழ்ந்தார். இங்ஙனம் திகழ்ந்த ஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் ஒரு வைகாசி மாசத்தில் கிருஷ்ணபக்ஷத் திருதியையிலே சிவராஜதானியாகிய காசியில் சிவப்பேறு எய்தினர்.

1. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள்
2. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கநாத சுவாமிகள்
3. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணாசல சுவாமிகள்
4. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அம்பலவாண சுவாமிகள்

5. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சடையப்ப சுவாமிகள் I
(இவ்வைந்து தலைவர்கள் காலம் ஏறக்குறைய 100 ஆண்டுகள் ஆகலாம்)
6. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி தில்லைநாயக சுவாமிகள் 1720-56
இவர்கள் திருப்பனந்தாளில் காசிமடத்தை நிறுவியவர்கள்
7. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி குமரகுருபர சுவாமிகள் II 1756-90
8. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சிதம்பரநாத சுவாமிகள் 1790-98
9. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சடையப்ப சுவாமிகள் II 1798-1836
10. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கணபதி சுவாமிகள் I 1836-38
11. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் I 1838-41
12. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் I 1841-52
13. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கணபதி சுவாமிகள் II 1852-53
14. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் II 1853-80
15. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி பொன்னம்பல சுவாமிகள் 1894-98
16. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சோமசுந்தர சுவாமிகள் 1898-1914
17. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் II 1914-19
18. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் III 1919-30
19. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் 1930-44
20. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் 26—3—1944ல் முதல்

இங்ஙனம் மேற்குறித்தவர்களால், இதுவரை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் அவர்களை நினைவுகூர்ந்து அத்தற்பொருட்டு ஏறக்குறைய 265 ஆண்டுகளாக, ஆண்டு தோறும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிவப்பேறு பெற்ற நாளாகிய வைகாசி கிருஷ்ணபக்ஷம் திருநியமமில் சிறப்பாக நடைபெற்று வருகிற மகேசுவர பூசையும் (சுத்தாத்துவித சைவ அன்பர்கட்கு அன்னம்பாலிப்பும்) ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பும், சந்திர சூரியர் உள்ளவரை நிகழ்த்துதற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இக்கட்டளை நிறுவப்பெற்றது. இது "திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் மகேசுவர பூசை நிதி" எனப்பெயர் பெறும். இம் மகேசுவர பூசை திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நடைபெற்றுவரும்.

2. இத்தருமத்தை நிறுவியவர்கள் தம் பேரில் பட்டா பிராகுகளுடனும் சர்வ சுதந்திரத்துடனும் அனுபவித்து வருகிறதும் இதன் சேர்க்கையில் ஷெடியூலில் விவரிக்கப்பெற்றுள்ளதுமான கும்பகோணம் தாலுக்கா கட்டாநகரம் வட்டம் கட்டாநகரம் கிராமத்திலிருக்கும் நன்செய், புன்செய், 89 ஏக்கர், 39 சென்டும், நரிக்குடி வட்டம், முட்டக்குடி கிராமம் நன்செய், புன்செய், 3 ஏக்கர், 49 சென்டும், சிக்கனுயகன்பேட்டை வட்டம் சிக்கனுயக்கன்போட்டை கிராமம் நன்செய், 14 ஏக்கர், 60 சென்டும், ஆக மூன்று கிராமங்களில் மொத்தம் நன்செய், புன்செய், நத்தம், 107 ஏக்கர், 48 சென்டும் இத்தருமத்தை நடத்துவதற்கென ஒதுக்கப்பெற்றுள்ளன. இந்தச் சொத்துக்களின் ஆண்டு வருமானத்தில் சர்க்கார் இஸ்தி, கிராம சிப்பந்திச் செலவு, கிராம சமுதாயம், மராமத்துச் செலவு வகையரு போக எஞ்சிய நிகரவருமானம் முழுதும், இதிற்குறித்த மகேசுவர பூசை, ஏழைகளுக்கு அன்னம்பாலிப்புக்கே செலவிடப்பெறும்.

3. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபரசுவாமிகள் நினைவு நாள் மகேசுவர பூசையும் ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பும், ஆண்டுதோறும், வைகாசி மாசம் கிருஷ்ணபக்ஷம் திருதியையில் இத்தருமத்தை நிறுவியவர்களாலும் பின்வரும் உரிமையுள்ளவர்களாலும், ஆண்டுதோறும் காலவிலக்கேற்பத் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி சிறப்பாக நடத்த மிகு நிகர வருமானம் முழுதும் பயன்படுத்தப்பெறும்.

4. மேலே குறித்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் மகேசுவர பூசை ஏழைகளுக்கு அன்னம் பாலிப்புச் செலவினத்துக்கன்றி வேறு எம்முறையிலும் இவ் வருமானம் செலவு செய்யப்பெறமாட்டாது.

5. இந்தத் தருமத்துக்கென ஒதுக்கப்பெற்றுள்ள நில புலங்கள் இதை நிறுவியவர்கள் பேரிலும் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் பரிபாலனத்திலும் இருந்துவரும்.

இந்தச் சொத்துக்களின் பெறுமானம் ரூ. 1,00,000; உத்தேச ஆண்டு வருமானம் ரூ. 5,000.

Tirupanandal,
Dated : 19-1-54 } *Sd. Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvi'amarudhur Sub Registrar's office on 20-1-54 as No. 92 of 1954 Book No. 1 Volume No. 1030, pages 218 to 223.

## 140

## காஞ்சிபுரத்தில் கந்தபுராணப் பிரசங்க நிதி ரூ. 3500

ஸ்ரீ முருகப் பெருமானின் கருணைப் பெருக்கினை உலக மக்கள் எளிதில் பெற்றுய்யுமாறு வாரிவாரி வழங்குவதும், மாந்தரைக் "கருக்கடல் முருக்கி முத்திக்கரை"தனில் சேர்க்க வல்லதும், பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைதியான ஆற்று நீரோட்டம் போன்று செந்தமிழ் நடையிலுள்ளதும், மெய்யடியார்களால் நாடோறும் பாராயணம் செய்யும் பனுவலாகத் திகழ்வதும், "உரைப்போர் கேட்போர் முன்னெலாம் புரிந்த வினை அனைத்தும் தீர்த்து முத்தி" தரவல்லதும், "புராண நன்னூயகம்" என்று புகழப்பெறுவதும், 10345 பாடல்களைக் கொண்டதும், முருகப் பெருமானால் "திகட சக்கர" என்று அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றுக் கச்சியப்பசிவாசாரியரால் அருளப்பெற்றதும், பொய்யடிமையில்லாத புலவர் குழாம் மலிந்து போற்றக் காஞ்சிபுரம் குமரக்கோட்டத்தில் "சகாத்தம் எழுநூற்றின் மேலாய்" அரங்கேற்றப் பெற்றதுமான கந்தபுராணத்தைச் "சொற்றிருத்தும் ஆராய்ந்திடுவாரும் துகளுறுமே கற்றிருத்தும் கற்பான் முயல்வாரும் கசிந்து கேட்கல் உற்றிருத்தும் வீடு நெறிப்பாலின் உறுவர்" ஆகலின் "ஆறுமுக முடைய வோர் அமலன் மாக்கதையாகிய கந்தபுராணத்தைக் காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் கந்தசட்டித் திருவிழா நாட்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தும் கேட்பித்தும் மக்களை நற்பேறடைவித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்திச் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்

பெற்றது. இது "காஞ்சிபுரத்தில் கந்தபுராணப் பிரசங்க நிதி" எனப்பெறும்.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ. 3500 (ரூபாய் மூவாயிரத்து ஐந்நூறு) ஆண்டொன்றுக்கு ரூ. 4 வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. (4% Madras Loan of 1963–Book Debt Certificate No. MS. 471 of Madras.) இந்நிதி நம் பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

3. இம்மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையினின்று ஆண்டுதோறும் காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் கந்த சட்டித் திருவிழாவில் கந்தபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்த ரூ. 96 (ரூபாய் தொண்ணூற்றாறு) செலவு செய்யப்பெறும். தபாற்செலவு முதலிய சில்லறைச் செலவு போக எஞ்சிய தொகையைக் கொண்டு நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் காஞ்சிபுரம் குமரகோட்டத்துக் கந்தப்பெருமானுக்கு நிவேதனப் பொருள் படைத்துக் கந்தசட்டித் திருவிழாவில் பிரசங்கம் கேட்பவருக்குப் பிரசாதமாக வழங்குவதற்கு பயன்படுத்தப் பெறும்.

4. கந்தபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தக் கட்டுப்பாடுகளாவன :—

அ. ஆண்டுதோறும் காஞ்சிபுரம் குமரக்கோட்டத்தில் கந்த சட்டித் திருவிழா ஆறு நாட்களிலும் கந்தபுராணச் சொற்பொழிவுகள் சைவ சிலமுள்ள பழுத்த தமிழ்ப் புலவர் ஒருவரால் நிகழ்த்தப்பெறும்.

ஆ. மே புலவர் பல்கலைக்கழகத்து வித்துவான் அல்லது புலவர் தேர்வில் வெற்றிபெற்றவராகவும் அல்லது பி. ஏ., பி. ஓ. எல். முதலிய பட்டதாரிகளாகவும், சொல்வன்மையுடையவராகவும், சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சி பெற்றுச் சைவ நல்லொழுக்கமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய தகுதிகள் உடைய ஒருவர் ஆண்டுதோறும் நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் கந்தபுராணப் பிரசங்கம் செய்ய நியமிக்கப் பெறுவர்.

இ. நியமனம் பெற்றவருடைய பெயரும் விலாசமும் காஞ்சி புரம் குமரக்கோட்டத்து டிரஸ்டி அவர்களுக்கு உரிய காலத்தில் அறிவிக்கப்பெறும். மே டிரஸ்டி அவர்கள் மே சொற்பொழி வாளரைக் கொண்டு குமரகோட்டத்தில் கந்தசட்டித் திருவிழா வில் ஆறு நாட்களிலும் நாடோறும் மாலையில் சொற்பொழிவு களை நிகழ்த்துவிக்க வேண்டும்.

ஈ. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காண்டம் வீதம், ஆறு நாட்களும் கந்தபுராணத்து ஆறு காண்டங்களிலுள்ள பொரு ளைச் சொற்பொழிவாளர் தெளிவாகக் கேட்போர் மனங் கொள்ளுமாறு பக்திப்பெருக்குடன் சொற்பெருக்காற்ற வேண் டும். உசிதப்போல் சிறிது மாற்றியமைக்கச் சொற்பொழிவா ளருக்கு உரிமையுண்டு.

உ. மேற்குறித்தவாறு சொற்பொழிவுகள் ஆற்றியதற்கு அத்தாட்சியாகக் காஞ்சிபுரத்துக் குமரகோட்டத்து டிரஸ்டி அவர்களிடம் சான்றிதழ் பெற்று நமக்கும் நமக்குப் பின் உரிமை உள்ளவர்களுக்கும் மே சொற்பொழிவாளர் அனுப்பவேண்டும்.

ஊ. கந்தசட்டி நாளில் நிகழ்த்தப்பெறும் ஆறுவது சொற் பொழிவு நிகழ்த்தி முடிந்ததும் (6×16 ஆக) ரூ. 96 சன்மான மாகச் சொற்பொழிவாளருக்கு அளிக்கப்பெறும். வட்டி வருமா னத்துக்கு ஏற்ப இத்தொகை கூட்டவும் குறைக்கவும் பெறும். இச் சன்மானத் தொகை பிரசங்க சன்மானம், பிரயாணச் செலவு, நித்தியப் படிச்செலவு முதலிய செலவினங்களையும் உட் கொண்டதாகும்.

எ. மேற்குறித்த சன்மானத் தொகை கந்தசட்டித் திருவிழாத் தொடக்கத்திலேயே காஞ்சிபுரம் குமரகோட்டத்து டிரஸ்டி அவர்களுக்கு அனுப்பப்பெறும். அச்சன்மானத்தொகை யைச் சொற்பொழிவாளருக்கு அளித்து இரசீது பெற்று நமக் கும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களுக்கும் மே டிரஸ்டி அவர்கள் அனுப்பவேண்டும்.

ஏ. நம்மாலும் நமக்குப் பின் உரிமை உள்ளவர்களாலும் நியமிக்கப்பெற்று அனுப்பப்பெறும் சொற்பொழிவாளர் தவிர்க்கமுடியாத காரணங்களால் சொற்பொழிவாற்றக் கூடாமை

புரத்துக்குச் செல்லத் தவறினும், சொற்பொழிவாற்றுகையில் தவிர்க்கமுடியாத காரணங்களால் சொற்பொழிவாற்ற முடியாது போயினும் வே. குமரகோட்டத்து டிரஸ்டி. அவர்கள் தக்கவர் ஒருவரை உடனே நியமித்து இச்செய்தியை நமக்கும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் தெரிவித்து ஒப்புதல் பெறவேண்டும். இங்ஙனம் நியமிக்கப்பெற்றவருக்கு நாட் சொற்பொழிவுக்கு ரூ. 16 (ரூபாய் பதினாறு) வீதம் சன்மானம் அளித்தல் வேண்டும். இவரும் இப்பகுதியில் குறித்துள்ள கட்டுப்பாடுகளின்படியே நடந்துகொள்ளக்கடவர்.

4. ஒரு ஆண்டு சொற்பொழிவாளராக நியமிக்கப்பெற்றவர் மீண்டும் மூன்று ஆண்டுகள் வரை நியமிக்கப்பெறற்குரியரல்லர்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. நம்மாலும் நமக்குப்பின் உரிமை உள்ளவர்களாலும் இக்கந்தபுராணப் பிரசங்க நிதி பரிபாலனஞ் செய்யப் பெற்றுவரும்.

கந்தப் பெருமான் திருவருள் வாழ்க!

Tirupanandal,
26—1—1954

(*Sd*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's office on 27-1-1954 as No. 5 of 1954, Book No. 4 Volume, No. 45 pages 56 to 59.

## 141

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி நிலப்பேறுமானம் ரூபாய் 2,00,000

செந்திலாண்டவன் திருவருளால் ஸ்ரீ வைகுண்டத்தில் கைலாசபுரத்தில் திருவவதாரம் செய்து ஐந்து வயதிலேயே பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்கப்பெற்றுக் கந்தர்கலிவெண்பாப் பாடியும், மதுரையில் கலம்பகமும் மீனாட்சியம்மை பிள்ளைத்

தமிழும் பாடியும், திருமலைநாயக்கர் வேண்டுகோளினால் மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றி ஸ்ரீ மீனாட்சி அம்மை யாரால் முத்தாரம் அணியப்பெற்றும், அந்நாயக்க மன்னர் வேண்டுகோட்படி திருக்குறள் சாரமாகிய நீதிநெறி விளக்கம் எனும் நூலியருளியும், திருவாரூரில் நான்மணிமாலை பாடியும், தருமைபம்பதியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்பால் திருப்பெருகு சிவஞானம் பெற்றுப் பண்டார மும்மணிக்கோவை பகர்ந்தும், புள்ளிருக்கு வேளூரில் முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழும் சிதம்பரத்தில் மும்மணிக்கோவை யும் சிதம்பர செய்யுட் கோவையும் யாத்தும், ஸ்ரீ காசிக்கலம்பகம் தருளிச் சகலகலாவல்லிமாலை பாடி இந்துஸ்தானி மொழி கைவரப்பெற்று முகலாய மன்னனைச் சிங்கத்தின் மீதேறிச் சென்று கண்டு தம் இணையிலாச் சொல்வன்மையாலும் நடை யழகுப் பெருந்துறவாலும் அவனை வணக்கிச் செயற்கரிய செயல் பல புரிந்து, கேதாரத்துறை கேதாரமந்திரம் அறச்சாலை இவை யிற்றை நிறுவியும், ஆங்குக் காசிக்கலம்பகம் முதலிய பிரபந்தங் களைப் பாடியும், வெள்ளியம்பலவாண முனிவர் முதலிய அரிய புலவர்களுக்கு ஆசானுகத் திகழ்ந்தும், குமரி முதல் காசி வரை யில் தண்டமிழைப் பரப்பியருளிய மெய்ஞ்ஞானப் புலவரும் தவமுதல்வரும் ஆகிய ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அவர் களின் நினைவுகூர்ந்து, திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடம் நிறுவப் பெற்ற நாள்முதல் இன்றுவரை ஸ்ரீ காசிமடத்து அதிபர்களால் நடத்தப்பெற்றுவந்த நித்திய மகேசுவர பூசை (சுத்தாத்துவித சைவர்களுக்கு அன்னம்பாலிப்பு) இனியும் சந்திராதித்தர் உள்ள வரை, நாடோறும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நடத்து வித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இக் கட்டளை நிறுவப்பெற்றது. இது 'திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி' எனப் பெயர்பெறும்.

2. இத்தருமத்தை நிறுவியவர்கள் தம் பேரில் பட்டா பிராசுகளுடன் சர்வ சுதந்திரத்துடனும் அனுபவித்து வரு கிறதும், இதன் சேர்க்கையில் (ஷெடியூலில்) விவரிக்கப்பெற்றது

மான கும்பகோணம் தாலுக்கா, வீராக்கண் வட்டம், திருவாப் பாடி கிராமம் நன்செய், புன்செய், நத்தம், களம், மனை வீடுகள், 2 சி. கணக்கிலுள்ளதும் பிறவும் ஆன மரந்தலை வகையரு 348 ஏக்கர், 13 செண்டும் இத்தருமத்தை நடத்துவதற்கென ஒதுக்கப் பெற்றுள்ளன. இந்தச் சொத்துக்களில், ஆண்டு வருமானத்தில் சர்க்கார் இஸ்தி, பிப்பந்திச் செலவு, கிராம சமுதாயம், மராமத்துச் செலவு வகையரு போக எஞ்சிய நிகர வருமானம் இதிற் குறித்த நித்திய மகேசுவர பூசை - சுத்தாத்துவித சைவ அன்பர்களுக்கு அன்னம்பாலிக்கச் செலவு செய்யப்பெறும்.

3. அந்தந்த வருஷ வருமானத்திற்கும் கால விலக்கும் ஏற்ப இக்கட்டளையை நிறுவியவர்களாலும், பின் உரிமையுள்ளவர்களாலும், மாதந்தோறும் தயாரிக்கப்பெறும் திட்ட ஸ்டாவின்படி, நாடோறும் வழி நித்திய மகேசுவரபூசை திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்திலே நடத்தப்பெற்றுவரும். எஞ்சிய தொகையைத் தம் விருப்பம்போல் செலவு செய்து கொள்ள இதை நிறுவியவர்களுக்கும் பின் உரிமை உள்ளவர்களுக்கும் உரிமையுண்டு.

4. இந்தத் தருமத்திற்கென ஒதுக்கப்பெற்ற நிலபுலங்கள் இதை நிறுவியவர்கள் பேரிலும், பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும், சுவாதீனத்திலும், பரிபாலனத்திலும் இருந்துவரும்.

5. இச்சொத்தின் மதிப்பு ரூ. 2,00,000.

Tirupanandal,
Dated 4–2–1954 } *Sd. Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 8–2 54 as No. 193 of 1954, Book No. 1, Volume No. 1039, pages 177—181.

## 142

## The Rajah of Kalahasti Memorial Kalahasti Pateeswara Puja Charity at Benares Rs. 5,000

**This endowment is founded by His Holiness Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Kasimutt,**

Tirupanandal in memory of Rajasri Mude Rajah Raje Damara Kumara Pedda Venkatappa Naidu Bahadur of Kalahasti who made the gift of Sriyyavaram (Chiyyavaram) village in Kalahasti Taluk to our Predecessors-in-title in the year 1826 AD. (2nd day of the bright fortnight of the month of Palguna of Parthiva year 1747 of the Era of Salivahana) by a gift deed for the daily Naivedya and diparadhana of Kalahasti Pateeswara at Benares and distributing the prasadams to the Brahmin worshipping the deity and Saiva Pandarams. Now that under the Madras Estates (Abolition and conversion into Ryotwari) Act 1948 – Madras Act XXVI of 1948, the said village was taken over by Government and cash compensation of Rs 4299 (Rs. Four thousand two hundred and nintynine) only in respect of the said village was deposited with the Estates Abolition Tribunal Chittoor, by the Government and that on a petition put in by His Holiness Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal Proprietor & Trustee of the village in O. P. No. 2039/1953 before the Tribunal Chittoor for the payment of the amount and the same having been paid to him, this endowment is made in memory of the said Rajesri Mude Rajaha Raja Damara Kumara Pedda Venkatappa Naidu Bahadur for the Kalahasti Pateeswara Puja charity at Benares. This endowment shall be styled as "*The Rajah of Kalahasti Memorial Kalahasti Pateeswara Puja Charity at Benares.*"

2. The endowment consists of Government Promissory Notes to the face value of Rs. 5000 (Rs. Five thousand only) fetching interest at 3% per annum, purchased from out of the compensation amount received from the Government (3% Conversion Loan of 1946, No. C A 135540 for Rs. 1000 ; C A 135541 for Rs. 1000 ; C A 135542 for Rs. 1000; C A 135543 for Rs. 1000 ; C A 135544 for Rs. 1000 ; Total Rs. 5000) The administration of the fund shall vest in the Donor and his successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for the Kalahasti Pateeswara Puja at Benares.

4. The Puja shall be conducted according to the Thitta Japtha prepared by the Donor and his successors-in-interest monthly which will depend upon the interest realised and the price of commodities then current.

5. The endowment shall not be diverted to any other purpose than the one specified above.

Tirupanandal
4—2—1954. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 6—2—54 as No. 9 of 1954, Book No. 4, Volume No. 45, pages 65 and 66.

## 143

## Sri Thanumalaya Peruman Library Endowment in the Religious Library at Nagercoil Rs. 3500

This endowment is founded by His Holiness Srilasri Kasivasi Arulnandi Tambiran Avl., of Tirupanandal for encouraging Library movement in general and the study of Tamil and Sanskrit literature in particular in the sacred name of "Sri Thanumalaya Peruman" the presiding deity in Suchindram, very near Nagercoil, South Travancore.

2. This endowment shall be styled as "Sri Thanumalaya Peruman Library Endowment in the Religious Library at Nagercoil".

3. The capital of the endowment shall be Rs. 3500. The amount shall be vested in the Travancore Devaswom Board who shall be the trustees thereof and shall administer it in accordance with the provisions of this Deed.

4. The amount of the endowment namely Rs. 3500 shall be invested in (*a*) a Scheduled Bank as defined in the Reserve Bank of India Act 1934 or in any Sate Treasury or (*b*) in Promissory Notes, Debentures, Stock or other securities of the Government or of the Government of India.

5. After meeting incidental charges the interest derived from the capital shall be allotted each year to the Religious Library at Nagercoil very near Suchindram a famous place of pilgrimage.

6. Half the interest amount viz, 50% should be spent in purchasing Tamil Books on Philosophy, Art and Literature. Books in other languages such as Sanskrit etc. may be purchased from the remaining half.

7. At the end of each year a statement showing receipts and expenditure during the year shall be sent to the Donor and his successors-in-interest together with a list of books purchased in the year.

Tirupanandal,
*1—1—1954.*

(*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

Note :—This endowment has been accepted by the Travancore Devaswom Board in its letter No. Roc. 912/1952 dated 12-2-1954.

## 144

## ஸ்ரீ காசியில் திருஞானசம்பந்தர் நினைவு வைகாசித் திங்கள் அன்னம் அளிப்பு நிதி ரூ. 7,000

பிரமபுரம் முதலாய பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய சீகாழிப் பதியில் அவதரித்தவரும், மூன்றும் வயதில் உமை யம்மையாரால் திருப்பெருகு சிவஞானம் கலந்த திருமுலைப்பால் உண்பிக்கப்பெற்றவரும், திருக்கோலக்காவில் பொற்றாளம்

பெற்றவரும், திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச்சிவிகை குடை சின்னங்கள்பெற்று அச்சிவிகையிலூர்ந்து தல யாத்திரை செய்தவரும், திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லி மழவன் மகளுக்குண்டான முயலகன் என்னும் நோயைப் போக்கியவரும், திருப்பட்டீச்சரத்தில் முத்துப் பந்தரும் - திருவாவடுதுறையில் பொற்சிவிகையும் – திருவீழிமிழலையில் படிக்காசும் அருளப்பெற்றவரும், திருமருகலில் அராத்தீண்டிய வணிகனை உயிர்ப்பித்து மணம் செய்வித்தவரும், திருமறைக்காட்டில் மறைக்கதவினைத் திருநாவுக்கரசர் திறக்கப்பாடச் செந்தமிழ் உறைப்புப்பாடி அடைப்பித்தவரும், மதுரையில் 640-670 வரை ஆட்சிபுரிந்த கூன் பாண்டியனது வெப்புநோயைப் போக்கி நெடுமாறன் ஆக்கியவரும், திருப்பதிக ஏட்டை எரியிலிட்டுப் பசுமையாக எடுத்தும் ஆற்றில் ஏடு எதிர்த்துச் செல்லுமாறு செய்தும் சமணரை வென்றவரும், திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனையாக்கியவரும், மயிலையில் எலும்பைப் பெண் உருவாக்கியவரும், அருட் பெருகுதனிக் கடலும் அன்பு செறிகடலும் எனவும் – பொருட்சமய முதற் சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் இரண்டெனவும் – புவனமுய்ய இருட் கடுவுண்டவர் அருளும் ஈன்றாள் தன் திருவருளும் எனவும் - தெருட்கலி ஞானக்கன்றும் அரசும் எனவும்- கூடிச் சோழநாட்டிலே மூன்று முறை திருநாவுக்கரசரோடு தலயாத்திரை செய்தவரும், தமது பதினாறாவது ஆண்டில் திருநல்லூர்ப் பெருமணத்தில் நம்பாண்டார் நம்பிகளின் மகளைத் திருமணம் செய்துகொண்டு வைகாசி மூலத்தில் திருக்கோயிலில் தோன்றிய சோதியிற் கலந்தவரும், பத்தித் தனித் தெப்பம் பார்வாழத் தந்த பிரானும் ஆகிய திருஞானசம்பந்த சுவாமிகளை நினைவு கூர்ந்து ஸ்ரீ காசியில் வைகாசி மாதத்தில் அன்னம் பாலித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது "ஸ்ரீ காசியில் திருஞானசம்பந்தர் நினைவு வைகாசித் திங்கள் அன்னமளிப்பு நிதி" எனப் பெறும்.

2. இதற்குரிய மூலதனம் ரூ. 7000 ரூபாய் ஏழாயிரம். இது ஆண்டொன்றுக்கு ரூ. 100க்கு ரூபாய் 3 வீதம் வட்டி

தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களாக உள்ளது. (3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946) சர்க்கார் கடன் பத்திரம் நெ. கி. ஏ. 137064 ரூ. 5000 கி. ஏ. 137029. ரூ. 2000 ஆக ரூ. 7000 இந்நிதி நம்போரிலும் நமக்குப்பின் உரிமையுள்ள வர்கள் போரிலும் இருந்துவரும்.

3. ஸ்ரீ காசியில் நம்முடைய சத்திரத்தில் நாடோறும் நடைபெற்று வருகின்ற அன்னதானத்துடன் இம் மூலதனத் தினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டு தோறும் வைகாசி மாசத்தில் பிராமண போஜனமும் மகேசுவர பூசையும் ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பும் நடத்தப்பெற்று வரும்.

4. ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் காலவிலக்கு ஏற்பவும் தயாரிக்கப்பெறும் திட்ட ஸ்டாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடைபெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர் களாலும் இத்தருமம் பரிபாலனம் செய்யப்பெற்றுவரும்.

திருப்பனந்தாள்,
21—2—1954 } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 25-2-1954 as No. 11 of 1954 of Book No. 4, Volume No. 45, pages 67—69.

## 145

## திருவாரூரில் கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு சேமவைப்பு ரூ. 3500

கமலை என்ற திருவாரூரிற் பிறந்தவரும், தருமபுரவாதீனத்து நான்காவது குரவராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடத்தில் சைவ சந்நியாசம் பெற்றவரும், ஸ்ரீ காசியில் ஆதி குமரகுருபர சுவாமிகளிடத்தில் கல்வி பயின்று தென்மொழி வடமொழிக் கடல்களைக் கரை கண்டுணர்ந்தவரும், தருமையாதீனத்து ஐந்தாவது மகாசந்நி தானம் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகளிடம் ஞானதீக்கை

பெற்றவரும் திருநெல்வேலி சிந்து பூந்துறையில் தங்கியிருந்த காலத்தில் கற்பனைக் களஞ்சியம் எனப்போற்றப்பெறும் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இலக்கணக் கல்வி நிரம்பச் செய்தவரும், கந்தபுராணச் சுருக்கம் இயற்றிய சம்பந்த சரணாலய சுவாமிகள் முதலானவர்களுக்குப் போதகாசிரியராகத் திகழ்ந்தவரும், தருமையாதீன முதற்குரவராகிய குருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த 'முத்தி நிச்சயம்' எனும் பண்டார சாத்திரத்துக்குப் பேருரை ஒன்றும் சிற்றுரை ஒன்றும் அருளிச் செய்தவரும், சைவ சமய சந்தானாசாரியருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிய 'சிவஞான சித்தியார்' எனும் சைவ சித்தாந்த சாத்திரத்துக்கு 'ஞானவரண விளக்கம்' எனும் பாஷ்யம் இயற்றியவரும், நீதிநெறி விளக்கும் வரலாறு முன்னும் அதற்கியைந்த திருக்குறளைப் பின்னும் அமைத்துப் பாடப்பெற்றதும்—அறம்பொருள் இன்பங்களை விளக்கும் நீதிகட்குத் திருக்குறளும், வீட்டின் பகுதியை விளக்கச் சைவ சமய சந்தானாசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிய சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றுகிய திருவுட் பயனும் அமைக்கப்பெற்றதும்—இனிய எளிய 196 வெண்பாக்கள் கொண்டதும் ஆகிய முதுமொழிமேல் வைப்பு என்னும் நூலை அருளியவரும், சிதம்பரத்தில் சிவப்பேறு அடைந்தவருமாகிய கமலை வெள்ளியம்பலவான முனிவரை நினைவு கூர்தற் பொருட்டும், அவர் அருளிய முதுமொழிமேல் வைப்பினை மாணவர் கசடறக்கற்று அதற்குத்தக நின்று நல்வாழ்வு பெறுதற் பொருட்டும், திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது " திருவாரூரில் கமலை வெள்ளியம்பலவான முனிவர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு " எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 3500 (ரூபாய் மூவாயிரத்தைந்நூறு). இத்தொகை நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பெறும். (3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946). இது திருவாரூர் நகராட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகை ரூ. 105. இவ்வட்டித் தொகையினின்று ரூ. 95 பரிசாக அளிக்கப் பயன்படுத்தவேண்டும். எஞ்சிய தொகையைப் பரிசுத் தேர்வு நடத்துதல் பரிசளிப்பு விழா முதலிய செலவுகளுக்குத் தேவையிருப்பின் பயன்படுத்தலாம்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

அ. திருவாரூர் நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக் கல்விக் கூடங்களில் 4, 5, 6 பாரங்களில் படிக்கும் மாணவர்க்கு ஆண், பெண், சாதி, மத, குலவேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கமலை வெள்ளியம் பலவாண முனிவர் அருளிச் செய்த முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் 98 வெண்பாக்களை மனப்பாடஞ் செய்தல் வேண்டும்.

இ. ஆங்கில யாண்டில் ஒற்றைப்படை எண் உள்ள ஆண்டில் முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் ஒற்றைப் படை எண் உள்ள பாடல்களும், ஆங்கில ஆண்டில் இரட்டைப் படை எண் உள்ள ஆண்டில் இரட்டைப்படை எண் உள்ள பாடல்களும் இப்பரிசுப் போட்டிக்குப் பாடமாகும்.

ஈ. பரிசுக்குரிய தேர்வு இரண்டு பிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு ; 50 கூறுகள் ; இரண்டு மணிநேரம் ; முதுமொழிமேல் வைப்பில் போட்டிக்கென்று அமைக்கப் பெற்ற 98 வெண்பாக்களிற்கண்ட பொருளைப்பற்றியும், சொற்சுவை, பொருட்சுவை, குறித்தும் வினவப்பெறும். இரண்டாவது வாய்மொழித் தேர்வு ; 50 கூறுகள் ; அந்த 98 வெண்பாக்களில் தேர்வுக்குழுவினர் கேட்கும் எல்லாப் பாடங்களையும் மனப் பாடமாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்க வேண்டும்.

உ. இப்பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவரும், பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது

அவர்களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியரும், இத்தேர்வுக் குழுவின் உறுப்பினவராவர். தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருவாரூர் ராஜாங்கக் கட்டளை விசாரணையிலிருக்கும் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்களும் இக்குழுவில் ஒருவராக ஏற்றுக் கொள்ளப் பெறவேண்டும். திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக்குழுவின் தலைவரும் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவர். இத்தேர்வுக்குழுத் தலைவர் தீர்ப்பே முடிவானது.

ஊ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் திருவாரூர் நகர மன்றத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய தேர்வுகள் டிசம்பர்த் திங்களில் தேர்வுக் குழுத்தலைவர் குறிப்பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

எ. பரிசுத் தேர்வில் முதல் கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 40 (ரூபாய் நாற்பது) இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 30 (ரூபாய் முப்பது) மூன்றாவது கூறு பெற்றவர்க்கு மூன்றாவது பரிசு ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து) ஆக மூன்று பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஏ. ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற் குரியரல்லர்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன் நிறுவப் பெற்றுத் திருவாரூரில் ஆண்டுதோறும் நடத்தப்பெற்றுவரும் மூவர் தேவாரப்பரிசு முதலியன அளிக்கப்பெறும் நாளில் இப் பரிசுகளும் அளிக்கப்பெறல் வேண்டும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல் ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே இருத்தல் வேண்டும். எஞ்சிய தொகைகள் மூலதனத்தோடு சேர்க்கப்பெறல் வேண்டும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றால் உயர்ந்த வட்டி

தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்ய வேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு திருநெல்வேலி தில்லா ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துக்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்கட்கும் பின் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை ரூ. 95 (ரூபாய் தொண்ணூற்றைந்து) ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துத் தலைவர் அத் தொகையைக் கொண்டு ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள குமரகுருபரன் கலைக்கோவில் நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்கட்குப் பின் வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

---

திருவாரூர் நகரமன்றம் 15—2—54-ல் நடந்த கூட்டத்தில் நிர்மான எண் 1388-ன் படிக்கு இக்கோயை ஏற்று நடத்த ஒப்புறுதியளித்தது. முதற் பொருள் ரூ. 3,500 திருவாரூர் நகராட்சி ஆணையர் அவர்கட்குக் குடந்தை இம்பீரியல் பாங்கு BZ/108 30896 என்னுள்ள உண்டியல் மூலம் அனுப்பி ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

திருப்பனந்தாள்,
29—1—1954 } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

## 146

## திருப்பனந்தாளில் செந்திலாண்டவன் அருளிப்பாடு நிதி நிலப்பெறுமானம் ரூ. 2,00,000

செந்திலாண்டவன் திருவருளால் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் திருமெய்ஞ்ஞானத்தவ முதல்வராய்க் குமரி முதல் காசி

(வாரணாசி) வரை திருப்பெருகு சிவஞான இன்பத் தமிழ் பரப்பிச் செயற்கரிய செயல் பல புரிந்து அறம் பல வளர்த்த மையை நினைவு கூர்தற்பொருட்டும், செந்திப்பதிபுரக்கும் செவ்வேள் சந்ததமும் பல்கோடி சன்மப் பகையும் செய்வினையும் பல் பிணியும் போக்கித் தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தந்து தடுத்தாட்கொள்ளும் அருளிப்பாட்டினைப் போற்றி போற்றி சய சய போற்றி ஓய்யும் பொருட்டும், திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடம் நிறுவப்பெற்ற நாள்முதல் இன்றுவரை ஸ்ரீ காசிமடத்து அதிபர்களால் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நிகழ்த்திவந்த நித்திய ஆன்மார்த்த சொக்கநாதர் பூசையும், விசுவநாதர் பூசையும், வார, பக்ஷ, மாச, வருஷ சிறப்பு மகேசுவரபூசை ஏறுபடிகளையும் சந்திராதித்தர் உள்ளவரை நிகழ்த்துதற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இக்கட்டளை நிறுவப் பெற்றது. இது 'திருப்பனந்தாளில் செந்திலாண்டவன் அருளிப்பாடு நிதி' எனப்பெறும்.

2. இத்தருமத்தை நிறுவியவர்கள் தம் பேரில் பட்டா பிராசுடனும் சர்வ சுதந்திரத்துடனும் அனுபவித்து வருகிறதும், இதன் சேர்க்கை (ஷெடியூல்) Bயில் விவரிக்கப்பெற்றுள்ளதுமான கும்பகோணம் தாலுக்கா, வீராக்கண் வட்டம், வீராக்கண் கிராமத்திலிருக்கும் நன்செய், புன்செய், தோப்பு, நத்தம், மனை 280 ஏக்கர், 47 செண்டும், இதன் சேர்க்கை Aயில் விவரித்துள்ள விசேஷ ஏறுபடிகளை நிகழ்த்துவதற் பொருட்டு ஒதுக்கப் பெற்றுள்ளன. இந்த நிலபுலங்களின் ஆண்டு வருமானத்தில் சர்க்கார் கிஸ்தி, கிராம சிப்பந்திச் செலவு, கிராம சமுதாயம், மராமத்துச் செலவு வகையறு போக எஞ்சிய நிகர வருமானம் இவ்விசேஷ ஏறுபடிகளை நிகழ்த்தச் செலவிடப்பெறும்.

3. இதன் சேர்க்கை (ஷெடியூல்) Aயில் விவரிக்கப்பெற்றுள்ளவாறு திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நித்திய ஆன்மார்த்த சொக்கநாதர் பூசையும், விசுவநாதர் பூசையும், வார, பக்ஷ, மாச, வருஷ சிறப்பு மகேசுவர பூசை ஏறுபடிகளை அவ்வவற்றுக்குரிய நாட்களிலும், இக்கட்டளை நிறுவியவர்களாலும் பின் உரிமையுள்ளவர்களாலும், அவ்வப்பொழுதுள்ள கால

விலக்கு ஏற்பத் தயாரிக்கப்பெறும் திட்ட ஸ்டாவின்படி, சிறப்பாக நடத்த மெ. ரிகர வருமானம் பயன்படுத்தப்பெறும்.

4. எஞ்சியுள்ள தொகையை விருப்பம்போல் இதுபோன்ற இதர தருமங்களுக்குச் செலவு செய்ய இதனை நிறுவியவர்களுக்கும் பின் உரிமையுள்ளவர்களுக்கும் உரிமையுண்டு.

5. இந்தத் தருமங்களுக்கென ஒதுக்கப்பெற்றுள்ள நிலபுலங்கள் இதை நிறுவியவர்கள் பேரிலும், பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும், சுவாதீனத்திலும், அனுபவத்திலும், பரிபாலனத்திலும் இருந்துவரும்.

இந்தச் சொத்தின் பெறுமானம் ரூ. 2,00,000.

**சேர்க்கை (ஷெடியூல்) A**

**1. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் ஆள்மார்த்த சோக்கநாதர் பூசை**

1. நித்திய பூசை—நைவேத்தியம்
2. விநாயக சதுர்த்தி
3. கார்த்திகை (மாசந்தோறும்)
4. ஆவணி மூலம் (திருநாட்கள் 10)
5. கேதார பூசை
6. கந்தர் சஷ்டி 6 நாட்கள்
7. அன்னபிஷேகம்
8. திருக்கார்த்திகை
9. திருப்பள்ளியெழுச்சி (மார்கழி மாத முழுவதும்)
10. திருவெம்பாவை 10 நாட்கள்
11. மார்கழித் திருவாதிரை
12. மகாவியதீபாதம்
13. மகா சிவராத்திரி
14. கார்த்திகை மாத சோமவாரங்கள்.

**2. திருப்பனந்தாள் ஸ்ரீ விசுவநாதர் பூசை**

1. நித்திய பூசை—நைவேத்தியம்
2. பௌர்ணமி
3. விநாயக சதுர்த்தி
4. நவராத்திரி—விஜயதசமி
5. கந்தர் சஷ்டி 1 நாள்

6. அன்னாபிஷேகம்
7. கார்த்திகை மாத சோமவாரங்கள்
8. திருக்கார்த்திகை
9. திருப்பள்ளியெழுச்சி (மார்கழி மாத முழுவதும்)
10. மார்கழித் திருவாதிரை
11. மகா சிவராத்திரி
12. வருஷப் பிறப்பு
13. சந்திர சூரிய கிரகணங்கள்
14. நடராஜர் அபிஷேகம் (6 தடவைகள்).

3. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் விசேட மகேசுவர பூசை வகையரு

1. பரிகலம்
2. விநாயக சதுர்த்தி
3. சரஸ்வதி பூசை
4. விஜயதசமி
5. தீபாவளி
6. கார்த்திகை மாத சோமவாரங்கள்
7. தருமையாதீன 18-வது பட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞான சம்பந்த சுவாமிகள் அவர்கள் குருபூஜை
8. ஸ்ரீ காசிமடத்து அதிபர்கள் பரிபூரணமான நினைவு நாட்கள்
9. அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருநட்சத்திரம்
10. விதை முகூர்த்தம்
11. கதிர் முகூர்த்தம்
12. மகா சிவராத்திரி
13. சங்கராந்தி
14. கோபூஜை.

Tirupanandal
24—2—1954. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudhur Sub Registrar's office on 25-2-1954, as No. 307 of 1954, Book No. 1, Volume No. 1051, Pages 133 to 136.

## 147

## திருவிடைமருதூரில் தைப்பூச அன்னம் பாலிப்பு நிதி ரூ. 5,000

காவிரிக்குத் தென்பாலமைந்ததும், மூவர் தமிழ் மெய்ஞ் ஞானத் திருநெறித் தேவாரம் பெற்றதும், மத்தியார்ச்சுனம் எனப்பெறுவதும், மருதுதல விருக்ஷமாக உடையதும், பட்டினத் தாரும் பத்திரகிரியாரும் மருதவாணரைப் பூசித்து முறையே மேற்கோபுர வாயிலிலும் மேலைக் கோபுர வாயிலிலும் தங்கித் தவம் செய்த பெருமையுடையதும், பெரிய அன்பின் வரகுண தேவருக்கு நேர்ந்த பிரமகத்தி தோஷம் நீங்கப்பெற்றதும், பட்டினத்தடிகளால் மும்மணிக்கோவை பாடப் பெற்றதும் ஆகிய பல சிறப்புக்கள் பொருந்திய திருவிடைமருதூர் என்னும் சிவ க்ஷேத்திரத்தில், காவிரியின் ஐராவணத்துறையில் நீராட்டுச் சிறப்புக் கொண்டாடப்பெறும் தைப்பூசத் திருநாளில், ஏழை களுக்கு அன்னம்பாலித்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது, 'திருவிடை மருதூரில் தைப்பூச அன்னம்பாலிப்பு' எனப் பெயர்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்) பெறுமானமுள்ள 3 சத வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் நெ. சி. ஏ. 137067. இந்நிதி நம்மா லும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்றுவரும்.

3. இம்மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகை யைக் கொண்டு திருவிடைமருதூரில் ஆண்டுதோறும் தைப்பூசத் திருநாளில் ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு நடத்தப்பெறும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் காலவிலக்கு ஏற்பவும் நம்மாலும் நமக்குப்பின் உரிமை உள்ளவர்களாலும் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம் பாலிப்பு நடைபெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப்பெற மாட்டாது. முதற்பொருள் அரசினரால் திரும்பியளிக்கப்பெறின்

அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே திரும்பவும் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள்
27—2—1954. } (Sd.) Kasivasi Arulnandi Tambiran

---

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 1—3—54 as No. 13 of 1954 of Book No. 4, Volume 45, pages 71—72.

## 148

## சிதம்பரத்தில் - தில்லையில் பெரியபுராணப் பிரசங்க நிதி ரூ. 7,000

அருண்மொழித்தேவர் எனும் இயற் பெயரினரும், குன்றத் தூரில் சேக்கிழார் குடியில் அவதரித்தவரும், அநபாய சோழன் எனப்பெறும் இரண்டாங் குலோத்துங்க சோழனுடைய முதன் மந்திரியாயிருந்து அம்மன்னனால் உத்தமசோழப் பல்லவன் என்ற பட்டப்பெயர் தரப்பெற்றவரும், தில்லைவாழந்தணரே முதலாகச் சீர்படைத்த தொல்லியதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதங்களைப்போற்றி ஒல்லையவர் புராண கதை உலகறிய விரித்துரைத்தற்குத் தில்லையம்பலவர் 'உலகெலாம்' என்று அடி எடுத்துக்கொடுக்க, அதனையே முதலிலும் இடையிலும் கடையிலும் வைத்து 4286 (4253) செய்யுட்கள் கொண்ட 12-ம் திருமுறையாகிய பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தைத் தில்லையில் பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவரும், அரசன் வேண்டுகோட்படி சித்திரை ஆதிரைநாள் தொடங்கி எதிராமாண்டு சித்திரை ஆதிரைவரையில் தாமே புராணகதை விரிவுரை நடாத்தித் தொண்டர்சீர் பரவுவார் என்ற சிறப்புப் பெயர் பெற்றவரும், வைகாசிப் பூசத்தில் சிவகதி மேவியவரும் ஆகிய சேக்கிழார் சுவாமிகளை நினைவுகூர்ந்து அவர் அருளிய பெரியபுராணத்திற் கண்ட 'அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழை' ஆண்டுதோறும் தில்லையில் (சிதம்பரத்தில்) சொற் பொழிவு வாயிலாகப் பரப்புதற்பொருட்டு இச்சேமவைப்பு நிறுவப்பெற்றது. இது 'தில்லையில் (சிதம்பரத்தில்) பெரியபுராணப் பிரசங்க நிதி' எனப்பெறும். இந்நிதி திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ. 7000 (ரூபாய் ஏழாயிரம்). இது ஆண்டொன்றுக்கு ரூ. 100க்கு 3 ரூபாய் வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப்பெற்றது. (3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் நெம்பர் பி. ஏ. 137066 ; ரூ. 5000 ; பி. ஏ. 137030 ரூ. 2000 ஆக ரூ. 7000.) இந்நிதி நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர் களாலும் பரிபாலிக்கப்பெறும்.

3. இச்சேமவைப்பினின்று பெறக்கூடிய வட்டித்தொகை ரூ. 210. இதிலிருந்து பெரியபுராணப் பிரசங்கம் செய்வார்க்கு ஊதியம் அளிக்க ரூ. 180 செலவிடப்பெறும். எஞ்சிய தொகை இத்தருமத்தை நடத்தப் பயன்படுத்தப்பெறும்.

4. பெரிய புராணப் பிரசங்கம் செய்யக் கட்டுப்பாடுகள் ஆவன :—

அ. ஆண்டுதோறும் வைகாசிப் பூசத்திற்கு முன்னும் பின்னுமாகத் தொடர்ந்து உசிதம் போல் 4—1/2 நாட்கள் காலை யிலும் மாலையிலும் நம்மால் நியமிக்கப்பெறும் சைவ சிலமுள்ள பழுத்த தமிழ்ப் புலவர்களால் பெரிய புராணத்தில் ஒன்பது பிரசங்கங்கள் சிதம்பரத்தில் (தில்லையில்) நடத்தப்பெறும்.

ஆ. மேற் புலவர்கள் பல்கலைக் கழகத்து வித்துவான் அல்லது புலவர் தேர்வில் வெற்றி பெற்றவராகவும் அல்லது பி. ஏ., பி. ஓ. எல். முதலிய பட்டதாரிகளாகவும், நாவன்மையுள்ளவ ராகவும் திருமுறை பயின்று சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி பெற்று சைவ நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய தகுதிகள் உடையவர்களே ஆண்டு தோறும் நம்மாலும் நமக்குப் பின் உரிமை உள்ளவர்களாலும் பெரிய புராணப் பிரசங்கங்கள் செய்ய நியமிக்கப்பெறுவர்.

இ. சொற்பெருக்கு ஒன்றுக்கு ரூ. 20 (ரூபா இருபது) வீதம் சொற்பணியாளருக்கு ஊதியம் அளிக்கப்பெறும். இவ்வூதியம் சொற்பெருக்குச் சன்மானம், பிரயாணச் செலவு, நித்தியப்படிச் செலவு முதலிய எல்லாச் செலவுகளையும் உட்கொண்டது.

ஈ. எந்த நாளேனும் சொற்பணியாளர் எதிர்பாராத கார ணங்களால் வாராமற்போயின் நம்மாலும் நமக்குப் பின் உரிமை யுள்ளவர்களாலும் நியமிக்கப்பெறும் பிறர் ஒருவர் அக்கடமை யை ஆற்றி அச்சொற்பொழிவு அல்லது சொற்பொழிவுக்குரிய ஊதியத்தைப்பெறக் கடவர்.

உ. சொற்பெருக்குத் திட்டம் :

**முதல் நாள் பிற்பகல் முதற் சொற்பெருக்கு – திருமலைச் சருக்கம் :** திருமலைச் சிறப்பு 40 செய்யுள் ; திருநாட்டுச் சிறப்பு 35 செ ; திருவாரூர்ச் சிறப்பு 50 செ ; திருக்கூட்டச் சிறப்பு 11 செ; தடுத்தாட்கொண்ட புராணம் 203 செ ; ஆகச் செய்யுள் 339.

**2–ம் நாள் முற்பகல் 2–ம் சொற்பெருக்கு—தில்லைவாழந்தணர் சருக்கம் :** தில்லைவாழந்தணர் புராணம் 10 செ ; திருநீலகண்டர் 44 செ ; இயற்பகையார் 36 செ ; இளையான் குடி மாறர் 27 செ ; மெய்ப்பொருள் நாயனர் 24 செ ; விறன்மிண்டர் 11 செ ; அமர் நீதி 49 செ ; ஆகச் செய்யுள் 201.

**2–ம் நாள் பிற்பகல் 3–ம் சொற்பெருக்கு – இலைமலிந்த சருக்கம் :** எறிபத்தர் 57 செ; ஏனாதி நாதர் 42 செ; கண்ணப்பர் 186 செ; குங்குலியக் கலயர் 35 செ; மானக்கஞ்சாறர் 37 செ ; அரிவாட்டாயர் 23 செ ; ஆனாயர் 42 செ ; ஆகச் செய்யுள் 422.

**3-ம் நாள் முற்பகல் 4-ம் சொற்பெருக்கு - மும்முமையாலுலகாண்ட சருக்கம் :** மூர்த்தியார் 49 செ. முருகனர் 14 செ. உருத்திர பசுபதியார் 10 செ. திருநாவுப்போவார் 37 செ. திருக்குறிப்புத் தொண்டர் 128 செ. சண்டேசர் 60 செ. ஆகச்செய்யுள் 298.

**3-ம் நாள் பிற்பகல் - 5-ம் சொற்பெருக்கு - திருவின்ற சருக்கம் :** திருநாவுக்கரசர் 429 செ. குலச்சிறையார் 11 செ. பெருமிழலைக் குறும்பர் 11 செ. காரைக்காலம்மையார் 66 செ. அப்பூதி 45 செ. திருநீலநக்கர் 38 செ. நமிநந்தி 33 செ. ஆகச் செய்யுள் 633.

**4-ம் நாள் முற்பகல் 6-ம் சொற்பெருக்கு - வம்பருவரிவண்டுச் சருக்கம்:** திருஞானசம்பந்தர் புராணம் 1256 செய்யுள்.

**4-ம் நாள் பிற்பகல் 7-ம் சொற்பெருக்கு - வம்பருவரிவண்டுச் சருக்கம் :** ஏயர்கோன்கலிக்காமர் 409 செ. திருமூலர் 28 செ. தண்டியடிகள் 26 செ. மூர்க்கர் 12 செ. சோமாசி மாறர் 6 செ. ஆகச் செய்யுட்கள் 481.

**5-ம் நாள் முற்பகல் 8-ம் சொற்பெருக்கு - வார்கொண்டவனமுலையாள் சருக்கம் :** சாக்கியர் 18 செ. சிறப்புலி 6 செ. சிறுத்

தொண்டர் 88 செ. கழறிற்றறிவார் 175 செ. கண நாதர் 7 செ. கூற்றுவர் 9 செ. ஆகச் செய்யுள் 303.

**5-ம் நாள் பிற்பகல் 9-ம் சொற்பெருக்கு - பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்:** பொய்யடிமையில்லாத புலவர் புராணம் 3 செ. புகழ்ச்சோழர் 41 செ. நரசிங்கமுனையரையர் 9 செ. அதிபத்தர் 20 செ. கலிக்கம்பர் 10 செ. கலியர் 17 செ. சத்தியார் 7 செ. ஐயடிகள் காடவர்கோன் 9 செ. **கறைக்கண்டன் சருக்கம்:** கணம்புல்லர் 9 செ. காரி 5 செ. கின்றசீர் நெடுமாறர் 10 செ. வாயிலார் 10 செ. முனையடுவார் 7 செ. **கடல் சூழ்ந்த சருக்கம்:** மும்மிங்கர் 13 செ. இடங்கழி 11 செ. செருத்துணை 7 செ. புகழ்த்துணை 7 செ. கோட்புலி 13 செ. **பத்தராய்ப் பணிவார் சருக்கம்:** பத்தராய்ப் பணிவார் 8 செ. பரமனையே பாடுவார் 2 செ. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் 1 செ. திருவாரூர்ப் பிறந்தார் 2 செ. மூப்போதும் திருமேனி தீண்டுவார் 3 செ. முழுநீறு பூசிய முனிவர் 6 செ. அப்பாலும் அடிசார்ந்தார் 2 செ. **மன்னியசீர்ச் சருக்கம்:** பூசலார் 18 செ. மங்கையர்க்கரசியார் 3 செ. நேசர் 5 செ. கோச்செங்கட் சோழர் 18 செ. திருநீலகண்ட யாழ்ப்பாணர் 12 செ. சடையர் 1 செ. இசைஞானியார் 1 செ. **வெள்ளானைச் சருக்கம்:** 53 செ. ஆகச் செய்யுள் 343.

2506
R65

உரை. இதில் மேலே வகுத்துள்ளவாறு 9 சொற்பொழிவுகள் நடத்தப்பெறும். சொற்பணியாளர் ஒரு சருக்கங்களில் உள்ள பொருளைத் தெளிவாகச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் வகையில் கேட்போர் மனங்கொள்ளுமாறு பக்திப் பெருக்குடன் சொற்பெருக்காற்ற வேண்டும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இந்நிதி நம் பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலேயும் இருந்துவரும்.

திருப்பனந்தாள்
28—2—1954. } *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 2—3—54 as No. 14 of 1954 of Book No. 4, Volume 45, pages 72—75.

---

திருச்சினுப்பள்ளி யூனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி